வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 219 | பக்கங்கள் : 20






07 மோடி இலங்கைக்கு பாடத்தை புகட்டட்டும்!



08 ஜனநாயக விரோத செயல்களை முன்னெடுப்பதில் அரசு முனைப்பு



09 பதின்மூன்றாவது அரசியல் திருத்தம் நித்திய கண்டம், ஆயுசு நூறு!



10 நிலவில் பதிக்கப்போகும் 'இந்திய சின்னம்'

# அடுத்த மூன்று மாதங்களுக்குள் தமிழ் அரசுக்குப் புதிய தலைவர்!

## பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உறுதி



யாழ்ப்பாணம், ஜூலை 16

"இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு அடுத்த மூன்று மாதங்களுக்கு மாநாடு நடத்தப்பட்டு புதிய தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார். சில வட்டாரக் கிளைகளின் தெரிவுகள் இன்னும் நடத்தப்படவில்லை. அவை முடிந்ததும் மூன்று மாதங்களுக்குள் மாநாடு நடத்தப்பட்டு புதிய தெரிவுகள் இடம்பெறும்."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

19



## வான் - மோ.சைக்கிள் மோதி இத்தாவில் பகுதியில் விபத்து!

### ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூலை 16

கிளிநொச்சி மாவட்டம் பளை இத்தாவில் பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக் கிள் மீது அதே திசையில் பயணித்த வான்

19

## ஜனாதிபதி ரணிலுக்கு நேசக் கரம் நீட்ட அநுர யாப்பா தலைமையில் புதிய கூட்டு?

கொழும்பு, ஜூலை 16

பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து வெளி யேறி சுயாதீனமாக செயற் படும் பாராளுமன்ற உறுப் பினர்களை ஒன்றிணைத்து புதியதொரு அரசியல் கூட்டணியை கட்டியெ ழுப்புவதற்கான முயற்சி இடம்பெற்றுவருவதாக அரசியல் வட்டாரங் களில் இருந்து அறிய முடிகின்றது.

இந்த அணியின் தலை மைப்பதவி முன்னாள் அமைச்சர் அநுர பிரிய தர்சன யாப்பாவுக்கு வழங்கப்படவுள்ளது என சிங்கள வார இத ழொன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப் பினர் நிமல் லான்ஸாவே இதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியுள் ளார் எனவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவு தெரி விக்கும் வகையி லேயே இந்த

19

## கிழக்கு மக்களையும் முழுமையாக இணைத்து பயணிப்பது அவசியம்!

### யாழ். பல்கலை. சட்டபீடத் தலைவர் கோசலை மதன்

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகமெனின் கிழக்கு மக்களையும் முழு மையாக இணைத்து பய ணிக்கவேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக் கழக சட்டபீடத்தின் தலைவர் கோசலை மதன் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவ தும் இந்தியாவின் வகி பாகமும் பற்றிய கலந்து ரையாடல் நிகழ்வு நேற்று மாலை 3.30 மணியளவில் யாழ்ப்பாண மத்திய கல் லூரி அருகிலுள்ள தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது.

அவர் மேலும் தெரி விக்கையில்-

இலங்கை

19

## வடக்கு ரயில் சேவைகள் நேற்று மீண்டும் ஆரம்பம்

கொழும்பு காங் கேசன்துறை ரயில் சேவைகள் நேற்றுக் காலை மீண்டும் ஆரம் பிக்கப்பட்டன.

காங்கேசன்துறைக்கு வரும் யாழ்தேவி ரயில், கல்கிசை நிலையத்தில் காலை 5.10 மணிக்கு தனது பயணத்தை ஆரம் பித்து 5.35 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் என இலங்கை ரயில் திணைக்களம் தெரிவித் திருந்தது.

வடக்குப் பாதை யில் அனுராதபுரத்திற் கும் ஓமந்தைக்கும் இடையில் புனர மைக்கப்பட்ட புகையிரத

19

## ரணிலுக்கு நரேந்திர மோடி அழுத்தம் வழங்கவேண்டும்!

### விக்னேஸ்வரன் எம்.பி. வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஜூலை 16

"தமிழ் மக்களின் இனப் பிரச்னைக்கு தீர்வாக இந் தியாவின் தலையீட்டில் 1987ஆம் ஆண்டு நிறை வேற்றப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை முழு மையாக அமுல்படுத்து மாறு எதிர்வரும் 20ஆம் திகதி இந்தியாவுக்கு விஜ யம் மேற்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவிடம் பிரதமர் மோடி அழுத்தம் கொடுக்க வேண்டும்"-என

19

## சமஷ்டி தீர்வுக்கு இந்தியா ஆதரவாக இருந்ததில்லை

### சுட்டிக்காட்டுகிறார் சுரேஷ்



யாழ்ப்பாணம், ஜூலை 16

நான் அறிந்தவரை இந் தியா சமஷ்டித் தீர்வுக்கு ஆதரவாக இருந்ததாக தெரியவில்லை என முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறே மச்சந்திரன் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்து வதும் இந்தியாவின் வகி பாகமும் பற்றிய கலந்து ரையாடல் நிகழ்வு நேற்று மாலை 3.30 மணியளவில்

19



## இன, மத ரீதியாக நாம் பிரிந்திருந்தது போதும்

### அமைச்சர் மனுஷ யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

இனியும் இனமத ரீதி யாக பிரிந்து நிற்காமல் அனைவரும் இணைந்து நாட்டை கட்டியெழுப்ப முன்வரவேண்டுமென அமைச்சர் மனுஷ நாண யக்கார அழைப்பு விடுத் துள்ளார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் குளோபல் பெயார் கண்காட்சியை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற் றும் போதே

19

ஈழநாடு



# திருடர்களிடமிருந்து பாலம், வீதிகளை காப்பாற்ற கடும் பொலிஸ் பாதுகாப்பு

## இலங்கையில் இப்படியுமொரு நிலைமை

கொழும்பு, ஜூலை 16

களனி பாலம் மற்றும் நெடுஞ்சாலைகளில் பொருத்தப்பட்ட உபகரணங்கள் திருடப்பட்டதை தொடர்ந்து, இந்த பகுதிகளில் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வி.எஸ். வீரக்கோன் தெரிவித்தார்.

புதிய களனி பாலம், கட்டுநாயக்க, மத்திய மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகளில் இவ்வாறான உபகரணங்களை அகற்றியமையினால் ஏற்பட்ட இழப்புகள் தோராயமாக ரூ. 275 மில்லியன் என்றார்.

"கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கேபிள் அமைப்பில் ஏற்பட்டுள்ள சேதத்தின் விளைவாக, அதிவேக நெடுஞ்சாலையில் உள்ள 13 கிலோமீற்றர் நீளத்திற்கு எங்களால் விளக்குகளை வழங்க முடியவில்லை.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் புதிய களனி பாலத்திற்கு ஏற்பட்ட சேதம் முறையே ரூ. 250 மில்லியன் மற்றும் ரூ. 25 மில்லியன்," என்று அவர் மேலும் கூறினார்.

இந்த நடவடிக்கைகளுக்கு யார் பொறுப்பு என்று வினவிய போது, அவர்களில் பெரும்பாலானோர் அந்தந்தப் பகுதிகளைச் சுற்றியுள்ள போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும், சந்தேக நபர்களில் சிலரைப் பொலிசார் கைது செய்துள்ளதாகவும், இதுவரையில் ரூ.4.5 மில்லியன் பெறுமதியான பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் வீரக்கோன் கூறினார்.

திருடப்பட்ட பாகங்கள் அருகில் உள்ள கடைகளுக்கு விற்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# படல்கும்புரயில் பழக்கடை உரிமையாளர் படுகொலை

கொழும்பு, ஜூலை 16

மொனராகலை - படல்கும்புர வீதியின் 11 ஆம் கட்டை பகுதியில் வெட்டுக்காயங்களுடன் சடலமொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள பழக்கடை ஒன்றின் உரிமையாளரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலைச் சம்பவம் இடம்பெற்றமைக்கான காரணம் மற்றும் சந்தேகநபர்கள் தொடர்பான தகவல்கள் இதுவரை கண்டறியப்படவில்லை.

படல்கும்புர பகுதியை சேர்ந்த 45 வயதானவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் பதுளை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

படல்கும்புர பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# யாழ்ப்பாண கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவு






யாழ்ப்பாணம், ஜூலை 16

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் அதனது தாய்க் கல்வி நிறுவனமான பற்றிக்கோட்டை செமினரியினதும் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் ஒன்றுகூடல் வாரம் நேற்று சனிக்கிழமை ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாகப் பழைய மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாகன நடைபவனி நேற்று சனிக்கிழமை காலை 7 மணியளவில் கல்லூரி வாசலில் இருந்து ஆரம்பமாகி, கோட்டைக்காடு, அராலி, செட்டியார்மடம், துணவி, நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய், சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, வட்டுக்கோட்டை வழியாக யாழ்ப்பாணக் கல்லூரியினை வந்தடைந்தது.

இதன்போது பழைய கார், தட்டி வான் மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றில் பழைய மாணவர்கள் பாடசாலை கொடிகளை ஏந்தியவாறு பவனி வந்தனர்.

ஜூலை 22ஆம் திகதிவரை வாரம் கோலகலமாக இடம்பெறவுள்ளதாக பழைய மாணவர் சங்க ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரியும் அதனது தாய்க் கல்வி நிறுவனமாகிய பற்றிக்கோட்டா செமினரியும் 1823 ஆம் ஆண்டு முதல் கடந்த 200 வருடங்களாக வழங்கிய கல்விப் பணியினையும், சமூகப் பணியினையும் நினைவு கொள்ளும் வகையிலும், கொண்டாடும் வகையிலும், அவை குறித்துச் சிந்திக்கும் வகையிலும், கல்லூரியின் எதிர்காலப் பயணம் குறித்துத் திட்டமிடும் வகையிலுமான பழைய மாணவர் வார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

உலகம் முழுவதிலும் இருந்து வரும் கல்லூரியின் பழைய மாணவர்கள் இந்த நிகழ்வுகளிலே பங்கேற்றனர். (அ)

# ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் மக்களுக்கு போதிய விளக்கம் இல்லை

## யாழ். அரச அதிபர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக எமது மக்களுக்கு போதிய விளக்கமில்லாத நிலையுள்ளது அவற்றிற்கு ஆலோசனை வழங்கும் தொழிற் சந்தையாக இது அமையும் என யாழ். மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு , விளையாட்டுத்துறை அமைச்சர் மனுஷ நாணயக்காராவின் ஏற்பாட்டில் 'வடக்கின் ஒளிமயம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெறும் 'குளோபல் பெயார் 2023' நிகழ்வானது நேற்றுக் காலை 9.00 மணியளவில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரின் பங்கேற்புடன் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையிலுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணக்கூடிய சந்தர்ப்பமாக மனித வளத்தை உலகிற்கு இட்டுச் செல்வதற்கான வாய்ப்பாக இத் தொழிற்சந்தை அமையவுள்ளதாக வெளிநாட்டு தொழிற்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இங்குள்ள இளைஞர்கள் தொழில்வாய்ப்புக்களைத் தேடி வெளிநாடுகளுக்கு சென்றாலும் போதிய தொழிற்பயிற்சி, மொழிப்பயிற்சி, சட்ட ஆலோசனைகள் இல்லாத நிலையுள்ளது. இவ்வாறானவற்றிற்கு இத்தொழிற்சந்தை மூலம் தீர்வு காண முடியும்

அதேபோல் 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஓய்வு பெற்றவர்கள் இன்றுவரை ஊழியர் சேமலாப நிதியைப் பெறாமலும், 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் வேலையை இழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஊழியர் சேமலாப நிதி வழங்கப்படும் என்ற வாய்ப்பை பலர் அறியாமலுள்ளனர்.

இவ்வாறு ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக எமது மக்களுக்கு போதிய விளக்கமில்லாத நிலையுள்ளது அவற்றிற்கு ஆலோசனை வழங்கும் தொழிற் சந்தையாக இது அமையும்.

ஏனைய நான்கு மாவட்டங்களில் இத் தொழிற்சந்தை ஆரம்பிக்கப்பட்டாலும் யாழ்ப்பாணத்திலே இத் திட்டம் வெற்றியளித்துள்ளது.

எனவே வட பிராந்தியத்தில் தொழிற் பயிற்சி நிலையத்தை ஆரம்பிப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கூறியிருந்தார். அவருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றார். (அ)

# செவிபுலனற்றவர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம்

கொழும்பு, ஜூலை 16

செவிபுலனற்றவர்களுக்கான சாரதி அனுமதி பத்திரம் வழங்கி வைக்கும் முதலாவது வேலைத் திட்டம் கம்பஹா மாவட்டத்தில், ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கம்பஹா மாவட்டத்தில் உள்ள 40 பேருக்கு நேற்று சாரதி அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்தார்.

இதற்காக 76 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாகவும், அதில் தெரிவு செய்யப்பட்ட 40 பேருக்கே சாரதி அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், செவிபுலனற்றவர்களுக்கான வாகன அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம், எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து நாடு முழுவதும், விஸ்தரிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண கூறினார். (அ)

# கொழும்புத் துறைமுக நகரத்தின் வளாகத்தில் செயற்கை கடற்கரை





கொழும்பு, ஜூலை 16

கொழும்புத் துறைமுக நகர வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட செயற்கை கடற்கரை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நேற்று முதல் இந்த செயற்கை கடற்கரையை நாட்டு மக்களுக்கும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் இலவசமாக பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, செயற்கைக் கடற்கரையில் நீந்த முடியும் என்பதோடு நீர் விளையாட்டிலும் ஈடுபடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடற்கரை சுமார் மூன்றரை கிலோமீட்டர் நீளம் கொண்டுள்ளது.

இந்த செயற்கை கடற்கரைக்கு மேலதிகமாக அதற்கு அருகில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உணவுகளுடன் கூடிய உணவு விற்பனை வளாகமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட மூன்று இலக்குகளை அடையவேண்டும்!

கொழும்பு, ஜூலை 16

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு 03 இலக்குகளை அடைய வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க வலியுறுத்தியுள்ளார்

கடன், கடன் சேவை மற்றும் நிதித் தேவை ஆகிய அம்சங்களின் அடிப்படையில் குறித்த இலக்குகளை அடைய வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அதேநேரம், இந்த மாதத்துக்கான பணவீக்கம் 7 சதவீதமாக குறையும் என நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உலகளாவிய வறுமையை ஒழிக்கும் வகையில் நெருக்கடியில் உள்ள நாடுகளுக்கு கடன் நிவாரணம் வழங்குவதில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

அந்த அமைப்பின் வளர்ச்சித் திட்டம், கொவிட் பரவலால் உலக நாடுகளில் 165 மில்லியன் மக்கள் வறுமையில் உள்ளதாக தெரிவித்துள்ளது.

வறுமையை போக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அந்த திட்டத்தின் வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் இந்தியாவில் கூடவுள்ள ஜி-20 குழுவின் நிதி அமைச்சர்கள் மாநாட்டில், நெருக்கடியில் உள்ள நாடுகளின் கடன் பிரச்னையைத் தீர்ப்பதற்கு தேவையான சீர்திருத்தங்களுடன் சர்வதேச கடன் மறுசீரமைப்பு குறித்தும் விரிவாக கலந்துரையாடப்படும் என ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பதவியேற்பை நினைவு கூரும் நிகழ்வை நடத்த வேண்டாம்!

கொழும்பு, ஜூலை 16

தாம் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், அது தொடர்பில் பதவியேற்பை நினைவு கூறும் நிகழ்வை ஏற்பாடு செய்ய வேண்டாம் என அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தை பல தரப்பினர் நடத்த கோரியிருந்தாலும் ஜனாதிபதி அதனை நடத்தவில்லை எனத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க பதவியேற்று எதிர்வரும் 20ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது.

கடந்த வருடம் ஜூலை மாதம் 20ஆம் திகதி பாராளுமன்றில் 134 வாக்குகளை பெற்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து, கடந்த வருடம், ஜூலை மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றில் எட்டாவது ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். (அ)

# இதய அறுவை சிகிச்சைகளுக்காக காத்திருப்பு பட்டியலில் 2,000 சிறுவர்

கொழும்பு, ஜூலை

இதய அறுவை சிகிச்சைகளுக்காக 2,000 வரையிலான சிறுவர்கள் காத்திருப்புப் பட்டியலில் உள்ளதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை தெரிவித்தது.

வைத்தியசாலையின் இதய நோய் பிரிவின் மருத்துவ ஊழியர்கள் குழாம் நாளொன்றுக்கு 05 அறுவைச் சிகிச்சைகள் வீதம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக, அதன் பணிப்பாளர் வைத்தியர் ஜி. விஜேசூரிய குறிப்பிட்டார்.

மருத்துவ ஊழியர்கள் குழாம் இதற்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்ட போதிலும், பௌதீக வளங்கள் பற்றாக்குறையினால் இதய அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாதுள்ளதாக அவர் கூறினார்.

இதற்கான தீர்வாக 11 மாடிகளைக் கொண்ட சிறுவர் இதய நோய் பிரிவொன்றை கொழும்பு சிறுவர் வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் ஆண்டு நடுப்பகுதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக வைத்தியர் ஜி.விஜேசூரிய குறிப்பிட்டார். (அ)

# தட்டம்மை நோயினால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 16

நாட்டில் தட்டம்மை நோயினால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 20 சிறுவர்கள் தட்டம்மை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

தட்டம்மை நோயினால் பாதிக்கப்பட்ட 7 சிறுவர்கள் தற்போது சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக குழந்தை சுவாச நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் சன்ன டி சில்வா கூறினார்.

தடுப்பூசி ஏற்றப்படாத பல குழந்தைகளுக்கு தட்டம்மை நோய் பரவும் நிலைமை அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தட்டம்மை தடுப்பூசி ஏற்றப்படாத குழந்தைகளைக் கண்டறியும் விசேட வேலைத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தொற்று நோய் தடுப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கூடிய விரைவில் அந்த குழந்தைகளுக்கு தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்க பரிந்துரைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்தார்.

9 ஆவது மாதத்திலும் 3 வயதிலும் குழந்தைகளுக்கு இரண்டு முறை தட்டம்மை தடுப்பூசி ஏற்றப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டார்

ஆனால் மத நம்பிக்கைகளின் காரணமாக குறிப்பிட்ட சிலர் குழந்தைகளுக்கு தடுப்பூசி ஏற்றுவதில்லை என்பது தெரியவந்துள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கு சென்று, தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தட்டம்மை தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும் என தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்தார். (அ)

# நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தியிருந்த காரின் முக்கிய பாகங்கள் திருட்டு!

கொழும்பு, ஜூலை 16

குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரின் பாகங்களை மர்ம நபர் ஒருவர் திருடிச் சென்றுள்ளதாக குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் 938,000 ரூபா எனவும் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் காரின் உரிமையாளரான நாரம்மல பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் குளியாபிட்டிய தலைமையக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சாதனங்களை திருடிய நபர் குறித்து எந்த தகவலும் இதுவரை பொலிஸாருக்கு கிடைக்கப்பெறவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பல்கலைக்கழகக் கல்வி முறையில் விரைவில் மாற்றம் ஏற்படுத்தப்படும்

## இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்

கொழும்பு, ஜூலை 16

2030ஆம் ஆண்டில் சர்வதேச தரத்திலான மாணவர்களை உருவாக்கும் வகையில் இலங்கையின் பல்கலைக்கழக கல்வி முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச தரத்திற்கு உள்ளூர் பல்கலைக்கழகங்களை தரமுயர்த்த வேண்டும் என்பதுடன், 2030ஆம் ஆண்டளவில் பிராந்தியத்தில் சிறந்த பல்கலைக்கழகங்களாக இலங்கைப் பல்கலைக்கழகங்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, சர்வதேச பல்கலைக்கழகங்கள் சிலவற்றை இலங்கையில் திறப்பதற்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும், முதற்கட்டமாக இரண்டு அல்லது மூன்று பல்கலைக்கழகங்களை திறக்க எதிர்பார்க்கப்படுகிறது.

பிராந்தியத்தில் சிறந்த உயர்கல்வியை வழங்கும் மையமாக இலங்கையை மாற்ற வேண்டும் என்றும், இதன் மூலம் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் உள்ள மாணவர்களை இலங்கைக்கு ஈர்க்க முடியும்-என்றார்.

# கோழி இறைச்சி விலை குறைப்பு!

கொழும்பு, ஜூலை 16

கோழியிறைச்சி ஒரு கிலோ கிராமின் விலை 200 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை கோழியிறைச்சி வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கோழியிறைச்சி ஒரு கிலோ கிராம் ஒன்றின் விலை ஆயிரத்து 450 ரூபா வரையில் குறைவடைந்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர குறிப்பிட்டார்.

விலங்குத் தீவனங்களின் விலைகள் குறைவடைந்துள்ளமையால் கோழியிறைச்சியின் விலையும் குறைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (அ)

# சோளத்துக்கான விசேட வியாபார வரி நீக்கம்

கொழும்பு, ஜூலை 16

திரிபோஷா உற்பத்திக்கு அவசியமான சோளத்தை இறக்குமதி செய்வதற்காக விதிக்கப்பட்டிருந்த விசேட வியாபார பண்ட வரி நீக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளதாக நிதி பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

திரிபோஷா உற்பத்திக்காக மாதமொன்றுக்கு அவசியமான சோளத்தை உள்நாட்டில் பெற்றுக்கொள்ள முடியாமையால் இந்தியாவிலிருந்து சோளத்தை இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் திரிபோஷா நிறுவனத் தலைவர் தீப்தி குலரத்ன அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதேநேரம், திரிபோஷா உற்பத்திக்கு தேவையான சோளத்தை பயிரிடும் முறைமை பெரும்போகத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்பில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு 4 ஆயிரம் வீடுகள்

கொழும்பு, ஜூலை 16

கொழும்பு மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்காக 6 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதாகவும், அந்த அடுக்குமாடி குடியிருப்புகளில் 4,000 இற்கும் மேற்பட்ட வீடுகள் இருப்பதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு கே மாவத்தை, ஸ்ரேடியம் தோட்டம், அப்பல் வத்தை, பெர்குசன் வீதி, ஒபேசேகரபுர மற்றும் மாதம்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் இந்த வீட்டுத் தொகுதிகளை நிர்மாணித்து வரும் நகர அபிவிருத்தி அதிகார சபை, ஒரு வீடமைப்பு 550 சதுர அடி எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஆசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் இந்த வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு



# மருந்து தட்டுப்பாடு விடயத்தில் அரசுக்குள் முரண்பாட்டு நிலை

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 16

மருந்து இறக்குமதி விவகாரத்தில் தோற்றம் பெற்றுள்ள முரண்பாடுகளின் உண்மைத் தன்மையை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். இது அலட்சியப் படுத்தும் விடயமல்ல. தேசிய ஔடதங்கள் கண்காணிப்பு அதிகார சபையை பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அழைக்க தீர்மானித்துள்ளோம் என பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவசர மருந்து கொள்வனவை தொடர்ந்து சுகாதாரத் துறை பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.சுகாதார சேவைகள் குறித்து மக்கள் மத்தியில் காணப்படும் நம்பிக்கைக்கு பாதிப்பு ஏற்பட்டால் அது மாறுப்பட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

மருந்து தட்டுப்பாடு,தரமற்ற மருந்து பயன்பாடு தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் சுகாதார சேவைகள் துறையின் அதிகாரிகள் குறிப்பிடும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது.

மருந்து இறக்குமதி விவகாரத்தில் தோற்றம் பெற்றுள்ள முரண்பாடுகளின் உண்மை தன்மையை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்.

இதனை அலட்சியப்படுத்த முடியாது.தேசிய ஔடதங்கள் கண்காணிப்பு அதிகார சபையை பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அழைக்க தீர்மானித்துள்ளோம்.

தேசிய ஔடதங்கள் கண் காணிப்பு அதிகார சபையின் செயற்பாடுகள் முறையாக இடம்பெறுகிறதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

அரசியல் பரிந்துரைகளுடன் முக்கிய பதவிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.ஆகவே இந்த தவறை முதலில் திருத்திக் கொள்ள வேண்டும் - என்றார்.

(அ)



# பதுளையிலிருந்து கொழும்புக்குச் சென்ற பயணிகள் பஸ் தெமோதரையில் விபத்து!

கொழும்பு, ஜூலை 16

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ்ஸொன்று, தெமோதரைப் பகுதியில் வைத்து வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதி, நடத்துநர் உட்பட 19 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முற்பகல் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 8 பெண்களும், 11 ஆண்களும் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

# சீ.டீ. விக்ரமரத்னவுக்கு சேவைக் காலத்தை மேலும் நீடிக்க அரசமைப்பு பேரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 16

பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவுக்கு வழங்கப்பட்ட சேவை காலத்தை மேலும் நீடிக்க அரசியலமைப்பு பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற அரசியலமைப்பு பேரவைக் கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்ட சீ.டீ. விக்ரமரத்ன, கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதி, ஓய்வு பெறவிருந்தார்.

எனினும், இதன்போது, அவருக்கு 3 மாதகால சேவை நீடிப்பை வழங்க, ஜனாதிபதியால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அந்தக் கால நீடிப்பு, கடந்த மாதம் 26ஆம் திகதி நிறைவடைந்தது.

இதற்கமைய, 2 வாரங்களாக, பொலிஸ்மா அதிபர் பதவிக்கு வெற்றிடம் நிலவுகின்ற நிலையில், முன்னாள் காவல்துறைமா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவுக்கு, மேலும் 3 மாதகால சேவை நீடிப்பை வழங்க, கடந்த 9ஆம் திகதி, தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பிரிவினைக்கு இடம்கொடுக்காது நாங்கள் ஒன்றாய் பயணிப்போம்’

யாழ்ப்பாணம், ஜூலை 16

“பிரிப்பதற்கு இடங்கொடோம் ஒன்றாய் நாம் பறந்திடுவோம்” எனும் தொனிப்பொருளில் யாழில் கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப் பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் இளைஞர் அமைப்பான சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் துண்டுப் பிரசுர விநியோகமும் கவனயீர்ப்புப் போராட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சிங்கள தமிழ் முஸ்லீம் நல்லிணக்கம் நீடுழி வாழ்க, இனவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம், தேசிய ஒற்றுமைக்காக போராடுவோம் என பாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

மேலும் தேசிய நல்லிணக்கத்தை மீண்டும் பிரிப்பதற்கு இடமளிக்க வேண்டாம் என்பன உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுப்பினர்.

(அ)

# ஜனாதிபதியின் இந்திய விஜயம் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும்

கொழும்பு, ஜூலை 16

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அடுத்த வாரம் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ள இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கிடையில் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இதன்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான துறைமுக அபிவிருத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள், பெரும்பாலும் வடக்கு பகுதியில், திருகோணமலை எரிசக்தி மைய அபிவிருத்தி, மருந்துகள் கொள்வனவு மற்றும் பால் கைத்தொழில் தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் 20 ஆம் திகதி அல்லது 21 ஆம் திகதி இந்தியா செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விஜயத்தின்போது, பிரதமர் மோடியை ஜனாதிபதி சந்தித்து, கடன் மறுசீரமைப்பு செயல்முறை உட்பட பல விடயங்கள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விவாதிக்க உள்ளார்.

(அ)

# வரிகளை அறவிடும் செயல்முறையை நெறிப்படுத்த தொழில்நுட்ப வழிகாட்டல்

## கூறுகிறார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஜூலை 16

வரிகளை அறவிடும் செயல்முறையை நெறிமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்களையும், அதற்கான ஆதரவையும் வழங்குவதற்கு நாடாளுமன்ற வழிவகைகள் பற்றிய குழு தயாராக இருப்பதாக அதன் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டி.ஆர்.எஸ். ஹப்பு ஆராச்சியை அவர் வலியுறுத்தியுள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு களப்பயணமொன்றை மேற்கொண்டிருந்தபோது அவர் இதனைக் கூறினார்.

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான வரிக் கோப்புகளைத் திறப்பது தொடர்பான தரவுக் கட்டமைப்பை முறையாகப் பராமரிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் நடத்தப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது உரிய தரவுகள் முறையாக சேகரிக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார்.

இது தொடர்பான தகவல்த் தொழில்நுட்ப நிபுணர்களை நாட்டுக்குள் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று சுட்டிக்காட்டிய குழு, அரச தனியார் கூட்டாண்மையின் கீழாவது அத்தகைய துல்லியமான தரவு அமைப்புடன் கூடிய கட்டமைப்பொன்றைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.



மேலும், வரி செலுத்துவோருக்கு கடிதம் அனுப்புவது போன்ற பாரம்பரிய முறைகளுக்கு பதிலாக, குறுந்தகவல் மூலம் கைபேசிகளுக்கு அறிவிப்பது, கைபேசி செயலிகளை அறிமுகப் படுத்துவது போன்ற நவீன முறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத் தப்பட்டது.

நிலையான வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது, அதற்குரிய சட்ட மாற்றங்கள் உள்ளிட்ட தற்போது காணப்படும் தடைகள் தொடர்பில் குழுவிடம் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருளுடன் யாழில் நேற்று நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் விற்பனையுடன் தொடர்புடைய நால்வர், யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ் 200 மில்லிக் கிராம், கஞ்சா ஆயிரத்து 400 மில்லிக்கிராம் மற்றும் 40 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

காக்கைதீவு பகுதியைச் சேர்ந்த ,ருவர், புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த ,ருவர் என 20 முதல் 30 வயதுடைய நால்வரே ,வ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் ,யங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரே ,ந்தக் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சந்தேக நபர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
16.07.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 31

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# காலத்தின் நிர்ப்பந்தம்?

மாகாண சபை முறைமையை உச்சளவில் பயன்படுத்திக்கொண்டு, அதிலிருந்து பயணிப்பது தொடர்பில் பேசுகின்ற போது, ஒரு கேள்வி குறுக்கிடுவதை காணமுடிகின்றது. இவர்கள் பேசும் விடயம் அன்றைய சூழலில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் நிராகரிக்கப்பட்டது. அதனை எவ்வாறு இவர்கள் கோரலாம்? சிலர் இப்படி கேட்க முயற்சிக்கின்றனர். இந்தக் கேள்வி சரியானதா? விடுதலைப் புலிகள் மாகாண சபையை ஏற்றுக்கொள்ளவில்லையென்று கூறுபவர்கள் - அவர்கள் எவ்வாறானதொரு தீர்வை ஏற்றுக்கொண்டார்கள் என்று கூறுவதில்லை.

இந்தியா சமஷ்டியை வலியுறுத்த வேண்டுமென்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கூறுகின்றது. அதன் பின்னால் தமிழரசு கட்சியும் செல்ல முயற்சிக்கின்றது. இந்த இடத்தில் எழும் கேள்வி - விடுதலைப் புலிகளின் தலைமை எப்போது சமஷ்டியை பகிரங்கமாக கோரியது?

அவ்வாறானதொரு கோரிக்கையை விடுதலைப் புலிகளின் தலைமை ஒருபோதுமே பொதுவெளிகளில் முன்வைத்ததில்லை. அவர்களின் இலக்கு தனிநாடு ஒன்றுதான். எனவே, விடுதலைப் புலிகள் நிராகரித்ததை இன்று ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று கூறினால், சமஷ்டியையும் கோர முடியாது. விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை இறுதிவரையில் தனிநாடு ஒன்றுக்காகவே தியாகங்களை புரிந்தது. அந்த போரில் தோல்வியடைந்ததை தொடர்ந்து, எவருமே தனிநாடு தொடர்பில் பேசவில்லை. பேசவும் முடியாது ஏனெனில், தனிநாட்டுக்கான அர்ப்பணிப்பு, உழைப்பென்பது வேறு.

இந்த பின்புலத்தில் நோக்கினால், 2009 மே மாதத்திற்கு பின்னர் பேசப்பட்ட, சமஷ்டி, ஒரு நாடு இரு தேசங்கள் என்னும் கோசம், அனைத்துமே விடுதலைப் புலிகளின் தலைமையால் பொது வெளிகளில் என்றுமே பேசப்படாத விடயங்கள்தான். பாலசிங்கம் சில சொற்களை பயன்படுத்தியிருக்கலாம் ஆனால் விடுதலைப் புலிகளின் தலைமை பொது வெளிகளில் தனிநாட்டுக்கு மாறான சமஷ்டி முறைமையிலான அரசியல் தீர்வொன்றை பெறுவதற்கு தாங்கள் தயராக இருப்பதாக என்றுமே கூறியதில்லை. இந்த நிலையில் மாகாண சபை தொடர்பில் பேசியவுடன், விடுதலைப் புலிகள் நிராகரித்த ஒன்றை இப்போது கோருவதாக வாதிட முயற்சிப்பதில் பயனில்லை. அனைவருக்கும் தெரியும். விடுதலைப் புலிகள் இயக்கத்தை பொறுத்தவரையில் எவர் - என்ன பேசினாலும், அதன் தலைமை ஒன்றை, உச்சரிக்காத வரையில், அதற்கு எந்தவொரு பெறுமதியும் இல்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் இறுதிவரையில், அவர்கள் வரித்துக் கொண்ட தனிநாட்டுக்கான பயணத்தையே மேற்கொண்டிருந்தது. இது தான் வரலாறு. ஆனால் 2009இற்கு பின்னரான அரசியல் சூழல் முற்றிலும் வேறானது. தமிழ்க் கட்சிகள் முன்னர் கைவிட்டதாக கூறியவற்றை நோக்கியே திரும்பவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. கடந்த 14 வருடங்களின் தமிழ் தேசிய கட்சிகளின் இயலாமை தெளிவாகவே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், அரசியலமைப்பில் இருப்பவற்றை முதலில் அமுல்படுத்துமாறு கோரும் கோரிக்கைகள் அண்மைக்காலமாக வலுவடைந்திருக்கின்றன. இது விருப்பம் அல்ல - மாறாக, காலத்தின் நிர்ப்பந்தம். காலத்தின் நிர்பந்தங்களை புறம்தள்ளி செயலாற்ற முடியாது. காலத்தின் நிர்ப்பந்தங்களை புறம்தள்ளி செயற்பட முயற்சிக்கும் சந்தர்ப்பங்களில், மோசமான தோல்வியையே நாம் சந்தித்திருக்கின்றோம். இந்த அனுபவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள மாட்டோமென்று அடம்பிடிப்பது, உண்மையில் மக்கள் மீதான அக்கறையின்மையன்றி, வேறில்லை.




# யாழில் விமரிசையாக இடம்பெற்ற இரு நூல்களின் வெளியீட்டு விழா

*வடமராட்சி, ஜூலை 16*

*மறைந்த பிரபல எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகனின் ஓர் இலக்கியக்காரனின் வாழ்வனுபவங்கள் மற்றும் அவரது பாரியார் ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி புனிதவதி சண்முகனின் ஆனந்தக்கூத்து நாட்டிய நாடகத் தொகுப்பு ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை-03.30 மணியளவில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மஹால் மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெற்றது.*

*குறித்த நூல்களின் வெளியீட்டு விழா நிகழ்வில் யாழ்.வேலணை மத்திய கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் சி.கிருபாகரன் வாழ்த்துரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் நூல் வெளியீட்டுரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான தி.செல்வமனோகரன், கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் மற்றும் குருஷேத்திரம் நடனாலய இயக்குனர் கலாபூஷணம். செல்வி. பேரின்பநாயகி சிவகுரு ஆகியோர் நூல் நயப்புரைகளையும் ஆற்றினர்.*

*நூல்களினை பேராசிரியர் கி. விசாகரூபன் மற்றும் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் வெளியிட்டு வைத்தனர். குப்பிழான் ஐ.சண்முகனின் ஓர் இலக்கியக்காரனின் வாழ்வனுபவங்கள் நூலின் முதற் பிரதியினை எழுத்தாளர் ஜேசுராஜா பெற்றுக் கொண்டார். தொடர்ந்து திருமதி.புனிதவதி சண்முகனின் ஆனந்தக் கூத்து நாட்டிய நாடகத் தொகுப்பு நூலின் முதற் பிரதியினை யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழையமாணவர் சங்க செயலாளரான ரவீந்திரகுமார் செல்வநாயகி பெற்றுக் கொண்டார்.*

*தொடர்ந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளின் நல்லூர் துதி, ஆனந்தக் கூத்து ஆகிய நாடக ஆற்றுகைகளும் இடம்பெற்றன. திருமதி.புனிதவதி சண்முகனின் ஏற்புரையினை தொடர்ந்து யாழ் பல்கலை விரிவுரையாளர் அஜந்தகுமாரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன. (அ-02)*

# நசீருக்கு எதிராகவும், செந்திலுக்கு ஆதரவாகவும் கிழக்கில் களமிறங்கிய முஸ்லிம் அமைப்புக்கள்!

*மட்டக்களப்பு, ஜூலை 16*

*காத்தான்குடி கோட்ட கல்வி அலுவலகர் பதவி வெற்றிடத்துக்கு தகுதியுடைய ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராக கருத்து வெளியிட்டிருந்த அமைச்சர் நசீர் அஹமட்டுக்கு எதிராகவும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு ஆதரவாகவும் முஸ்லிம் அமைப்புக்கள் கருத்துகளை வெளியிட்டுள்ளன.*

*இந்த விடயத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் எடுக்கப் பட்ட நடவடிக்கையை அந்த அமைப்புக்கள் வரவேற்றுள்ளன.*

*முன்னதாக காத்தான்குடி கோட்ட கல்வி அலுவலர் பதவி வெற்றிடம் ஏற்பட்டிருந்த நிலையில், அந்த பதவிக்கு இலங்கை கல்வி சேவை தரம் 3 தகுதியுடையவர்கள் இல்லாமையால், தற்காலிக அதிகாரியாக இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 தகுதியை கொண்ட எம்.எம். அலாவுதீன் நியமிக்கப்பட்டிருந்தார்.*


*இந்நிலையில், இலங்கை கல்வி சேவை தரம் 3 படிப்பை நிறைவு செய்திருந்த ஏ.ஜி. மொஹமட் ஹக்கீமுக்கு கோட்ட கல்வி அலுவலர் நியமனம் தற்போதைய கல்வி அமைச்சினால் அண்மையில் வழங்கப்பட்டது.*

*எனினும், அமைச்சர் நசீர் அஹமட்,தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 தகுதியுடையவர் தொடர்ந்தும் இந்த பதவியில் இருக்க வேண்டும் எனவும் இலங்கை கல்வி சேவை தரம் 3 நிறைவு செய்தவருக்கு கோட்ட கல்வி அலுவலர் நியமனம் வழங்கக் கூடாது எனவும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்துள்ளார்.*

*இதனையடுத்து, கல்வி அமைச்சின் செயலாளரால் குறித்த விடயம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டமைக்கமைய, ஆளுநர் செந்தில் தொண்டமான் கல்வி அமைச்சின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியுடையவருக்கு இந்நியமனம் வழங்கப்படவேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.*

*இந்தநிலையில், குறித்த நியமனம் காத்தான்குடி கல்வி வலயத்திற்கு காத்திரமான கல்வி அபிருத்திக்கு வழிவகுத்துள்ளது என முஸ்லிம் அமைப்புக்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -86

# தாய்க்குப் பெருமை சேர்த்த தனயன்

**கணபதி சர்வானந்தா**

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (திருக்குறள்)

"நல்ல மகனைப் பெற்றெடுத்தவள் இவள்." என்று ஊரார் பாராட்டும் பொழுது அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியை அந்தத் தாய் அடைவாள் என இதற்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

குழந்தை பாக்கியம் என்று சொல்லுகிறோம். ஒரு சபையில் தம்பெருமையை உயர்வடையச் செய்கின்ற ஒரு குழந்தையைத்தான் பாக்கியம் என்று பெற்றோர் கருதுவர். ஒருவர் தனது வாழ்நாளில் பெற வேண்டிய செல்வங்களில் இது முக்கியமானதொன்று. குழந்தைகள் உண்ட மிச்சம் அமுது போன்றது. அவர்களின் குரல் நல்லிசையைவிட இனிமை உடையது. தன் குழைந்தைகளுக்கு நல்வாய்ப்பு எற்படுத்த வேண்டியது தந்தையின் கடமை. அதேபோலத் தாயும் தன் மகனை சான்றோன் என்று கேட்பதில் மகிழ்சியடைவாள். அதன் வழியே குழந்தைகளுக்குரிய கடமை அல்லது கைமாறு இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதையும் வள்ளுவர் சுட்டிக் காட்டுகிறார். அவன் தம் பெற்றோருக்கு நற்பெயர் பெற்றுத் தரவேண்டும். அதுவே சிறந்த வழி என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

எல்லாவற்றையும் விட ஒரு பிள்ளை உயரிய சிந்தனையுடையவனாக இருப்பதே சிறப்பு. தன்னைவிடத் தன்னைச் சார்ந்தவர்களைப் பற்றிச் சிந்திப்பவனே உயர்ந்தவன் என்ற பொருள்படச் சொல்லப்பட்ட பல இலக்கியங்கள் உண்டு. அச் சிந்தனை அவனுள் நல்லொழுக்கத்தை தோற்றுவிக்கும். அவன் தனக்கும் பிறருக்கும் பல வழிகளில் நன்மையுடையவனாக விளங்குவான்.

ஒரு பிள்ளை தனக்குள் உயரிய சிந்தனையை உட்கொள்ள வழிவகுப்பவர்கள் அதன் பெற்றோர்களே. அவர்களையே குழந்தை முன்னுதாரணமாகக் கொள்கிறது. அது மட்டுமல்லாது பெற்றோர்களையே உண்மை என்றும் குழந்தை நம்புகிறது. தாயைப்போல பிள்ளை என்பர்.

ஒரு பிள்ளையின் மீது அதிக அற்கறையுள்ளவர்களும் அதன் பெற்றோர்களே.அதிலும் தாயின் வகிபாகம் அதிகமானது. உடலால் ஆரோக்கியமுள்ளவனாக இருக்க வேண்டும் என்பதிலும் அறிவால் உயர்ந்தோன் என்ற பெயரைப் பெறவேண்டும் என்பதிலும் தாயே அதிக அக்கறை காட்டுகிறார்.

எனவே அதனை மெய்ப்படுத்துவதாக, அதற்கு வலுச் சேர்ப்பதாகப் பல சம்பவங்கள் எம்மிடையே நடைபெற்றிருக்கின்றன. பெற்றோர்களின் பெயருக்குப் பங்கம் விளைவிக்கக் கூடாது என்று எண்ணித் தனது ஆசை அபிலாஷைகளை அடக்கி வாழுகின்ற பிள்ளைகளைக் காணும்தோறும் மெய் சிலிர்க்கும். வீட்டு நிலைமைகளை உணர்ந்து உணவுண்ணாமலே பாடசாலைக்கு வருகின்ற பிள்ளைகளைப் பற்றியும் கதைகள் உண்டு. தாய் தந்தை நிலை அறிந்து அதற்கேற்ப தன்னை வழிப்படுத்துபவனே ஒழுக்கமுள்ளவனாகவும், உயர்ந்தவன் என்றும் போற்றப்படுவான்.

அப்படிப்பட்ட ஒரு மாணவனைப் பற்றிய பதிவினைக் கண்டபோது அதனைப் பகிர்வதன் ஊடாக சமூகத்துக்கு ஒரு நற் செய்தியினை வழங்கலாம் என்றும், அம் மாணவனைப் பெருமைப்படுத்த வேண்டும் என்றும் எண்ணியதால் அதனை இங்கு பகிர்ந்து கொள்கிறேன்.

தான் கல்வி கற்கும் நிறுவனம் தோற்றுப் போகக் கூடாது என்ற நற்சிந்தனையினால் தனது துயரத்தையும் பாராது அப் பாடசாலையின் வெற்றிக்காக விளையாடி இருக்கிறான் அவன்.

"தாயின் சடலம் மலர்சாலையில் இருக்க, றக்பீ போட்டியில் பங்கேற்ற மாணவன்." என்ற தலைப்பில் அச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

பாடசாலைகளுக்கிடையிலான "றக்பி லீக்"போட்டியின் போது, மருதானை புனித ஜோசப் கல்லூரி மற்றும் கொழும்பு இசிப்பத்தன வித்தியாலயத்திற்கு இடையிலான போட்டியில் இசிப்பத்தன வித்தியாலயம் 28-18 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

இசிப்பத்தன கல்லூரிக்கு இந்தப் போட்டி மிகவும் முக்கியமானதாக இருந்தது, ஏனெனில் போட்டியில் தோல்வியடையாத தொடரைத் தக்கவைக்க அந்தப் போட்டியில் கட்டாயம் வெற்றி பெற வேண்டியிருந்தது.

எவ்வாறாயினும், இசிப்பத்தன அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஹெஷான் ரந்திமால் தன்னால் தாங்க முடியாத, மிகப்பெரிய வலியை உள்ளத்தில் மறைத்துக் கொண்டு அந்தப் போட்டியில் கலந்துகொண்டார்.

அந்த போட்டியின் போது ஹெஷான் ரந்டிமால் தனது தாயைப் பறிகொடுத்திருந்தார். தாயின் சடலம் மலர்சாலையில் வைத்திருக்க தனது அணியின் வெற்றிக்காக ரந்திமால் விளையாடியிருந்தார்.

தாய் உயிருடன் இல்லாத போதிலும் தனது தாயாருக்கு மகிமை சேர்ப்பதற்காகவும், பாடசாலைக்காகவும் போட்டியின் ஆரம்பத்தில் இசிப்பத்தன வித்தியாலயத்திற்கு முதல் "ட்ரை" ஐயை ரந்திமால் பெற்றுக்கொடுத்தார்.மேலும் தனது அணியின் வெற்றிக்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் விளையாடினார்.

இந்த போட்டியின் பின்னர் இசிப்பத்தன அணியின் எதிர் போட்டியாளர்களான மருதானை சென்.ஜோசப் அணி வீரர்களும் ரந்திமாலின் தாயாரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், விளையாட்டின் சகோதரத்துவத்தையும் மனித நேயத்தையும் உலகிற்கு எடுத்துரைத்தனர். – என அச் செய்திப் பதிவைக் கண்டேன்.

எம்மிடையே உள்ள இது போன்ற மாணவர்களை இனங்கண்டு அவர்களைப் பாராட்டுவதோடு அவர்கள் கொண்டுள்ள இவ்வாறான சிந்தனைகளை வெளிக்கொணர்வது காலத்தின் கட்டாயமாகிறது. யுத்தத்துக்குப் பின் சகல வழிகளிலும் தோல்வி பெற்ற சமூகமாக நாம் இருப்பதால் சமூகத்தை நல் வழிப்படுத்துபவர்களாக மாணவர்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்பது எமது பொறுப்பாகும். •

# இந்தவார ராசிபலன் 16.07.2023 - 22.07.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 31
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் முன்னேற்றமான பலன் கிடைக்கும். நண்பர்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் பக்கபலமாக அமையும். சில செயல்களில் குழப்பம் வரும் என்பதால், பணம் சம்பந்தமான வேலைகளைத் தள்ளி வைப்பது நல்லது. உத்தியோகத்தில் சிலருக்கு பதவி உயர்வு, பணிபுரியும் அலுவலகத்திலேயே கிடைக்கலாம். பொறுப்புகள் அதிகமாகும். செல்வாக்கு உயரும். கைகளில் பணப்புழக்கம் இருக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

எவ்வளவு சிறப்பாக செயல்பட்டாலும், சில காரியங்களில் மட்டுமே திருப்தி காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் தவறு, அதிகாரிகளை கோபம் அடையச் செய்யும். பொறுப்புகளில் கூடுதல் கவனம் தேவை. சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். ஓய்வு நேரம் குறையும். கூட்டுத் தொழில் செய்பவர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்த கூட்டாளிகளுடன் கலந்து ஆலோசிப்பார்கள். கடன் தொல்லை ஏற்படலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

சில காரியங்களில் முன்னேற்றமும், சில காரியங்களில் தேக்க நிலையும் ஏற்படும். பணவரவு தாமதமாகும். அக்கம் பக்கத்தினரின் மத்தியில், உங்கள் மதிப்பு, மரியாதை உயரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், செய்யும் வேலைகளில் சிரமங்கள் இருந்தாலும், உயரதிகாரிகளின் ஆதரவால் மகிழ்ச்சியுடன் பணியாற்றுவர். அலுவலக பணியாளர்களை அனுசரித்துச் செல்வது நன்மை அளிக்கும். போட்டிகளை சமாளிக்கக் கூட்டாளிகளுடன் ஆலோசிப்பீர்கள்

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

எதிர்பாராத இடையூறுகளை சந்திக்க நேரிடும். இருந் தாலும் அதிக முயற்சியுடன் பல காரியங்களில் முன்னேற்றமான பலன்களைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலர் தங்களது வேலையை விட்டுவிட்டு அதிக ஆதாயமுள்ள வேலைக்குச் செல்ல முயற்சி செய்வார்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், செய்து கொடுத்த பணியில் உள்ள குறைகளை மீண்டும் சரி செய்து கொடுக்க நேரலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

எளிதாகச் செய்து வெற்றி பெறலாம் என்று கருதிய வேலையை அதிக சிரமத்துடன் முடிக்க வேண்டியதிருக்கும். அதிகமான அலைச்சலை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சக ஊழியரின் பணியையும் சேர்த்துச் செய்யும் நிலை ஏற்படலாம். சொந்தத் தொழில் செய்பவர் களுக்கு, அவசரமாகச் செய்ய வேண்டிய காரியங்களில் அலைக்கழிப்பை சந்திக்கும்படி ஆகலாம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பணப் பரிவர்த்தனையில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்கள், அவசரப்பட்டு செய்த வேலை ஒன்றில் பிரச்சினையை சந்திக்க நேரலாம். சக நண்பர்களிடத்தில் குடும்ப விஷயங்களை பேசாமல் இருப்பது நல்லது. சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர் ஒருவரின் முக்கிய வேலை ஒன்றை விரைவாகச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்.கூட்டுத்தொழில் வியாபாரத்தில் வழக்கமான லாபம் குறையாது. பணியாளர்களின் ஒத்துழைப்பால் வியாபார அபிவிருத்தி ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும். செயல்களில் முயற்சியுடனும், உற்சாகத்துடனும் ஈடுபட்டாலும் சில காரியங்களிலேயே எதிர்பார்க்கும் வெற்றிகளைப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அலுவலகப் பணியின் நிமித்தம் வெளியூர் செல்லும் நிலை ஏற்படலாம். அலுவலகப் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு பழைய வாடிக்கையாளர் மூலம், புதிய நபரின் அறிமுகம் ஏற்படலாம். விலைவாசி உயர்வும் பாதிப்பை உண்டாக்கக்கூடும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் செயல்பட்டு முன்னேறுவீர்கள். நிறைவு பெறாத செயல்களைச் செய்து முடிக்க தக்க நபர்களை நாடுவீர்கள். திட்டமிட்டபடி பண வரவுகள் கைகளுக்கு வந்துசேரும். அரசு தொடர்பான காரியங்கள், எதிர்பார்த்தது போல குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அலுவலகத்தி லேயே பதவி உயர்வும், சம்பள உயர்வும் ஏற்படக்கூடும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

பல செயல்கள் உங்கள் விருப்பம் போல நடைபெறுவதால், மனதில் உற்சாகம் உண்டாகும். தளர்வடைந்த செயல்களை, பிறகு செய்யலாம் என்று தள்ளி வைப்பீர்கள். வரவேண்டிய தொகை அதிக சிரமமின்றி கைக்கு வந்து சேரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு எதிர்பார்த்த கடன் தொகை கிடைத்து பாதியில் நிறுத்தியிருந்த பணியைத் தொடருவார்கள்.கூட்டு வியாபாரம் நன்றாக நடைபெறும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

கடிதப் போக்குவரத்து சாதகமாக இருக்கும். உங்கள் மனதுக்கேற்றபடி நல்ல பலன்களை அளித்தாலும், சில காரியங்களில் தளர்வுகளும் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு பொறுப்புகள் அதிகமாகும். அலுவலகத்தில் செல்வாக்கு கூடும். சக நண்பர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். சொந்தத் தொழில் செய்பவர்கள் புதிய வேலைகளில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நீங்கள் எடுத்துக் கொண்ட செயல்கள் சிலவற்றில் முன்னேற்றமான பலனைக் காண்பீர்கள். தளர்வடைந்த செயல்களுக்கு தக்க மனிதர்களின் உதவி கிடைக்காமல் போகலாம். வரவேண்டிய தனவரவுகள் சிறிது காலம் தாமதம் ஆகும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகலாம். சக நண்பரின் வேலைகளையும் சேர்த்து செய்யும் நிலை ஏற்படலாம். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருந்தாலும், வருமானம் எதிர்பார்க்கும் அளவு இருக்காது.


### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

நண்பர்களின் ஒத்துழைப்பு இருந்தாலும் கூட, சில காரியங்களில் பின்னடைவு இருக்கக்கூடும். அவசியமான வேலைகளை கவனமாகச் செய்வது நல்லது. பண வரவுகள் சிறிது தாமதமாகும். உத்தியோகத்தில் சிலருக்கு உயரதிகாரிகளின் விருப்பப்படி முக்கிய நபரின் வேலையை உடனே செய்து கொடுக்க நேரிடும். பணிகளில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரியின் கோபப் பார்வைக்கு இலக்காவீர்கள். சொந்தத் தொழில் சுறுசுறுப்பாக நடைபெறும். பழைய வாடிக்கையாளர் மூலம் புதிய நபர் அறிமுகம் இருக்கும். கூட்டுத்தொழில் முயற்சியில் எதிர்பார்க்கும் லாபம் வந்து சேரும்.

## இந்திய பத்தாம் வகுப்பு மாணவர்களின் அரசறிவியல் பாடம்:

# ‘பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை சிறுபான்மையினரை ஒடுக்குவதுடன், பெரும்பான்மையினரையும் அழித்துவிடும்’

## தெளிவான இப்பாடத்தை மோடி இலங்கைக்கு புகட்டட்டும்!



சென்னை மடல்
-பகவான் சிங்-

யாழ் நண்பர் ஒருவர் சிறந்த கருத்தடங்கிய மெசேஜ் அனுப்பினார், வாட்ஸாப் வழியாக. அது இந்தியாவில் பத்தாம் வகுப்பு பள்ளி மாணவர்களின் அரசறிவியல் புத்தகத்தில் முதல் அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளதென்று அவர் எடுத்துக் கூறினார். தேடிப் போய்க் கடையிலிருந்து புத்தகத்தை வாங்கினேன். அப்பகுதியைப் படித்துப் பிரமித்துப்போனேன் ஒரு புறம். மிக்க சோகமடைந்தேன் மறு புறம். ஆட்சியதிகாரப் பகிர்வு என்பது ஒரு நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் நிலையான வளர்ச்சிக்கு எந்தளவு அவசியமானதென்பதைப் பற்றி அந்த இயலை விளக்குவதற்கு நாடிய நாடுகள் - பெல்ஜியம், இலங்கை. அந்த அத்தியாயத்தின் சில பகுதிகளை நான் இங்கு எடுத்தாள விரும்புகிறேன் - இலங்கை பற்றிய குறிப்பு இருப்பதால் மட்டுமல்லாமல், மக்களின் சமூக - அரசியல் பார்வையில் அது மிகவும் முக்கியமானது என்பதாலும். சட்ட, நிர்வாக மற்றும் நீதித் துறைகளிடையில் புத்திசாலித்தனமான ஓர் அதிகாரப் பகிர்வு இருப்பது ஜனநாயகத்திற்கு எவ்வளவு முக்கியம் என்பதை விளக்கும் இந்த ஆசிரியர்கள், அதற்கு உதாரணமாக பெல்ஜியம் மற்றும் இலங்கையைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

“ஒரு கோடிக்கும் சற்று அதிகமான பெல்ஜியம் மக்கள் தொகை, சிக்கலான இனக்கலவையைக் கொண்டது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில், 59 வீதம் பேர் ப்லெமிஷ் பகுதியில் வாழும் டச்சு மொழி பேசக்கூடியவர்கள். மற்றொரு 40 வீதம் பேர் வாலோனியா பகுதியில் வாழும் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள். மீதமுள்ள ஒரு சதவிகிதம் பேர் ஜெர்மன் பேசுகிறார்கள். தலைநகர் பிரஸல்ஸில், 80 வீதம் பேர் பிரெஞ்சும் 20 வீதம் பேர் டச்சு மொழியும் பேசுகிறார்கள். பிரெஞ்சு பேசும் சிறுபான்மையினர் செல்வந்தர்களாகவும் சக்தி பெற்றவர்களாகவும் இருக்கின்றனர். பொருளாதார வளர்ச்சியையும் கல்வியையும் பிற்காலத்தில்தான் பெற்ற டச்சு மொழி பேசுவோர் மத்தியில் இது ஒரு மனக்கசப்பை ஏற்படுத்தியது. 1950, 60களில் இதனால் இந்த இரு தரப்பினருக்கும் இடையில் பதற்றம் நிலவியது. இது பிரஸல்ஸில் சற்று தீவிரமாகவே இருந்தது. அங்கு சிக்கல் இன்னும் மோசமாகக் காரணம், நாட்டில் பெரும்பான்மையாக இருக்கும் டச்சு மொழி பேசுவோர், தலைநகரில் சிறுபான்மையினராக இருப்பதே. அதற்குப் பிறகு அந்தப் புத்தக ஆசிரியர்கள், இலங்கை நிலவரம் குறித்துப் பேசுகிறார்கள். விவரங்களை நான் இங்கு குறிப்பிடவில்லை, காரணம், அது நீங்கள் அறிந்ததே. சிங்கள பெரும்பான்மை ஆட்சியாளர்களின் கொடுமைகள் குறித்த விளக்கங்களைத் தொடர்ந்து அவர்கள் ஒரு கேள்வியை எழுப்புகிறார்கள்: “இதுபோன்ற சூழலில் (இலங்கை) என்ன நடக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். பெல்ஜியத்தில், டச்சு சமூகத்தினர் தங்கள் பெரும்பான்மை ஆதிக்கத்தை பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் பேசும் மக்களின்மீது திணிக்கலாம். இது இவர்களிடையேயான மோதல் போக்கை மேலும் அதிகரிக்கலாம். இரு தரப்பினரும் பிரஸல்ஸின் மீது உரிமை கோரி, சிக்கலான சூழலில் நாட்டுப் பிரிவினை ஏற்படலாம். ஆனால், பெல்ஜியன் தலைவர்கள் இப்படிச் செய்யவில்லை. பிராந்திய வேறுபாடுகளும் கலாசார பன்முகத் தன்மையும் இருப்பதை அவர்கள் அங்கீகரித்தார்கள். 1970-1993 காலத்தில், ஒரே நாட்டில் அனைவரும் ஒன்றாக வாழ வழிசெய்யும் வகையில் ஓர் ஏற்பாட்டை உருவாக்க, நான்கு முறை அவர்கள் தங்கள்

அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்துள்ளனர். அந்த ஏற்பாடு வேறு எந்த நாட்டிலும் காணப்படாத புதுமையான ஒன்று.

**பெல்ஜியன் மாதிரியின் சில அம்சங்கள்:**

1. மத்திய அரசில் டச்சு மற்றும் பிரெஞ்சு பேசும் அமைச்சர்களின் எண்ணிக்கை சமமாக இருக்க வேண்டுமென்று அவர்களின் அரசியல் சாசனம் கூறுகிறது.

2. மத்திய அரசின் பல அதிகாரங்கள், நாட்டின் இரு பகுதிகளிலும் இருக்கும் மாநில அரசுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் கீழ் மாநில அரசுகள் இயங்குவதில்லை.

3. பிரஸல்ஸில், இரு சமூகத்தினரும் சமமான பிரதிநிதித்துவம் பெற்ற தனியரசு செயல்படுகிறது. மத்திய அரசில் சமமான பங்கை டச்சு சமூகம் ஒப்புக்கொண்டுள்ளதால், பிரஸல்ஸிலும் அதை ஒப்புக்கொண்டுள்ளது பிரெஞ்சு சமூகம்.

மத்திய, மாநில அரசுகளைத் தவிர, மூன்றாவது வகை அரசு ஒன்றும் இருக்கிறது. இந்த ‘சமுதாய அரசு’, டச்சு, பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் பேசும் மக்கள் எங்கிருந்தாலும், அந்தந்த மொழியினரால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. கலாசார, கல்வி மற்றும் மொழி சார்ந்த விஷயங்களில் இந்த அரசு அதிகாரம் பெற்றிருக்கும். இந்த பெல்ஜியன் மாதிரி மிகவும் சிக்கலானதுபோல் தோன்றலாம். அங்கு வாழும் மக்களுக்கேகூட இது சிக்கலானதுதான். ஆனால், இந்த ஏற்பாடுகள் இதுவரை மிகவும் வெற்றிகரமாகவே இருந்து வருகின்றன. இரு சமூகத்தினரிடையே மோதல் மூளுவதையும் மொழி அடிப்படையில் நாடு பிரிக்கப்படும் சூழலையும் இவை தடுத்துள்ளன. ஐரோப்பாவில் உள்ள பல நாடுகளும் ஒன்றிணைந்து ஐரோப்பிய ஒன்றியம் (European Union - EU)



அமைக்கக் கூடியபோது, அதன் தலைமையிடமாக பிரஸல்ஸ்தான் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தப் பத்தாம் வகுப்புப் புத்தகத்தில் இதற்குப் பிறகு, ஒரு நாடு மற்றும் அதன் மக்களுக்கும் அதிகாரப் பகிர்வு ஏன் மிகவும் முக்கியம் என்று விளக்குகிறது. இதில் இரண்டு வகைக் காரணங்கள் கூறப்படுகின்றன. “முதலில், சமூகக் குழுக்களிடையே மோதல் வாய்ப்பைக் குறைப்பதால் அதிகாரப் பகிர்வு வரவேற்கக்கூடியதே. சமூக மோதல் என்பது, வன்முறைக்கும் அரசியல் ஸ்திரமின்மைக்கும் வழிவகுப்பதால், அரசியல் ஒழுங்கை ஸ்திரப்படுத்த, அதிகாரப் பகிர்வு உதவும். பெரும்பான்மையினர் தங்கள் கருத்துகளை மற்றவர்கள்மீது திணிப்பது, குறுகிய காலக் கண்ணோட்டத்தில் கவர்ச்சியாகத் தோன்றலாம், ஆனால் காலப்போக்கில், அது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும்.

பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை சிறுபான்மையினரை ஒடுக்குவதுடன் மட்டுமல்லாமல், பெரும்பான்மையினரையும் அழித்துவிடும். ஜனநாயகத்தில் அதிகாரப்பகிர்வு தேவை என்பதற்கு மற்றோர் ஆழமான காரணமும் உண்டு. ஜனநாயகத்தின் ஆதாரமே அதிகாரப்பகிர்வுதான். தனது அதிகாரத்தால் பாதிக்கப்பட்டு அதன் விளைவுகளை எதிர்கொள்பவர்களுடன் அதிகாரத்தைப் பகிர்வதே ஜனநாயகம். தாங்கள் எப்படி ஆளப்படவேண்டும் என்று அவர்களிடமே ஆலோசனை பெறுவதே ஜனநாயகம். குடிமக்களும் பங்கேற்று நடத்தப்படுவதே ஒரு சட்ட பூர்வமான அரசாக இருக்க முடியும். முதல் வகைக் காரணங்கள் விவேகத்தின் அடிப்படையிலானவை; இரண்டாவது வகை தார்மீக அடிப்படையிலானவை. விவேகமான காரணங்கள், அதிகார பகிர்வு சிறந்த விளைவுகளை ஏற் படுத்தும் என்று வலியுறுத்துகின்றன. தார்மீகக் காரணங் கள், அதிகாரப் பகிர்வு மதிப்பு மிக்கது என்பதை வலியுறுத்துகின்றன.”

பத்தாம் வகுப்பு இந்திய மாணவர்களின் அரசறிவியல் புத்தகத்தின் பக்கம் இலங்கைத் தலைவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், அதன் நகலைத் தொகுத்து, இலங்கையின் பத்தாம் வகுப்பு மாணவர்கள் கையெழுத்திட்ட கடிதங்களை அனுப்புமாறு, தமிழ் மட்டுமல்லாமல், சிங்கள சமூக அமைப்புகளும் செய்ய விழைய வேண்டும் என்பதே என் அவா. பெறுநர் பட்டியலில் முக்கியமாக, ராஜபக்ச குடும்பத்தினர் மட்டுமல்லாமல், அண்மையில் தமிழர்களின் அரசியல் சம உரிமைக்கு எதிராகப் பேசிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்காவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் இடம்பெற வேண்டும். நமது தமிழ்த் தலைவர்கள், சமூக நன்மைக்காகத் தங்கள் சுயநலன்களைத் தியாகம் செய்யத் தயாராக இருப்பதை விடுத்து, தங்களின் ஒவ்வொரு சிறிய, பெரிய அரசியல் நகர்விலும் தங்களுக்கு என்ன லாபம் என்று கணக்கிடுவதிலேயே மும்முரமாகநகர இருக்கின்றனர். நம்மிடையே செல்வாக்கு பெற்று வலம் வரும் அவர்களின் பெயர்களை நான் குறிப்பிடத் தேவையில்லை அவர்களை இப்போது நீங்கள் நன்றாக அடையாளம் கண்டிருப்பீர்கள்.

மக்களுக்கும் சமமான பொறுப்பு இருக்கும்போது, அரசியல்வாதிகளை மட்டும் குற்றம் சொல்வது எப்படிச் சரியாக இருக்கும்? ஆளும் சிங்களவர்களின் மேலாதிக்கம், சர்வாதிகாரம், உரிமை மறுப்பு, அடக்குமுறை ஆகியவற்றுடன் நமது இனத்தலைவர்களின் துரோகத்தையும் கண்டும் மௌனமாகவே துன்பத்தைச் சகித்துக் கொள்ளும் நமது போக்கைக் குறித்துக் கவலை கொள்ளாமல், ஆள்வோரின் ஜனநாயக விழுமிய மீறல்களை

## சிவில் சமூகத்தின் 13ஆவது சட்ட திருத்த அழுத்தமே சிறந்த வழி!

மட்டும் குறை சொல்வதில் அர்த்தமில்லை. நான் உங்களை ஓர் எளிமையான கேள்வி கேட்கிறேன். நீங்கள் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியாக இருந்தால், கொழும்பு ஆட்சியாளர்களிடமிருந்து நீதி வேண்டி, பல்வேறு தமிழ் அரசியல் குழுக்கள் வெவ்வேறு கோரிக்கை மனுக்களை உங்களிடம் கொடுப்பதற்கு எப்படி எதிர்வினையாற்றுவீர்கள்? தமது மக்களுக்காகக் குரல் கொடுக்கும் இந்தத் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே கடிதத்தில் ஏன் கையெழுத்திட்டு அனுப்பவில்லை என்று வியப்பீர்களா, இல்லையா? மேலும் இந்தத் தலைவர்களில் சிலர், பச்சோந்தியை விட வேகமாகவும் மோசமாகவும் தங்கள் நிறங்களை மாற்றிக்கொள்கின்றனர். உதாரணமாக, 13ஆவது சட்ட திருத்தம் குறித்த கோரிக்கையை சுமந்திரன் வெளிப்படையாக எதிர்த்து அதிக நாட்கள் ஆகிவிடவில்லை இந்நிலையில், அவரது கட்சித் தலைவர் சம்பந்தர், ஜூலை 21 அன்று டில்லியில் நடைபெறவுள்ள சந்திப்பில், 13ஆவது சட்ட திருத்தத்தை மேற்கொள்ளவும் மாகாண சட்டப் பேரவைத் தேர்தல்களை நடத்தவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மோடி அழுத்தம் கொடுக்கவேண்டுமென்று தமிழ் அரசுக் கட்சி விரும்புவதாக இலங்கைக்கான இந்தியத் தூதரிடம் கூறியுள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 13ஆவது சட்ட திருத்தத்தை ரணிலிடம் வலியுறுத்தவேண்டாமென்றும் சமிஷ்டி தீர்வுக்கு மட்டும் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் இந்தியாவைக் கோரியுள்ளார். தனித் தமிழ்நாடு கோரிக்கைக்காகக் குரல் கொடுக்கும் திராவிட அரசியல்,

(18ஆம் பக்கம் பார்க்க)

# நியாயப்பாட்டை இழந்த பாராளுமன்றத்தின் மூலம் ஜனநாயக விரோத செயல்களை முன்னெடுப்பதில் முனைப்புக் காட்டும் அரசாங்கம்



வீரகத்தி தனபாலசிங்கம்

காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்ட போதிலும் கூட உள்ளூராட்சி தேர்தல்களுக்கு எதிரான அரசாங்கத் தரப்பின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன.

கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளை மீண்டும் கூட்டுவதற்கான அதிகாரத்தை உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சருக்கு வழங்குவதற்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், நகரசபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டத்தின் பல பிரிவுகளுக்கு திருத்தங்களைக் கொண்டு வருவதை நோக்கமாகக்கொண்டு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டேகொட இரு சட்டமூலங்களைக் கொண்ட தனிநபர் பிரேரணை யொன்றைக் கொண்டு வந்திருக்கிறார். ஜூன் 26 வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்டமூலங்கள் ஜூலை 5 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டு புதிய தேர்தல்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்ட நிலையில் நெருக்கடியொன்றின் காரணமாக அவற்றை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டால் கலைக்கப்பட்ட சபைகளை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு கூட்டுவதற்கு அமைச்சருக்கு அதிகாரம் அளிக்கக்கூடியதாக தற்போதைய சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்று கொட்டேகொடவின் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் தனது தற்துணிபில் உள்ளூராட்சி சபைகளை எவ்வளவு காலத்துக்கு மீண்டும் கூட்டமுடியும் என்று அதில் பிரத்தியேகமாகக் கூறப்படவில்லை. அதனால் சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் கலைக்கப்பட்ட சபைகளை மீண்டும் ஒரு நீண்டகாலத்துக்கு செயற்படவைக்கக்கூடிய ஆபத்து இருப்பதாக அரசியல் அவதானிகள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

அதேவேளை உள்ளூராட்சி சபைகளை தனிநபர் சட்டமூலங்கள் ஊடாக மீண்டும் கூட்டுவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சி அரசியலமைப்புக்கு முரணானது என்று சட்டமா அதிபர் கருத்து தெரிவித்திருக்கிறார்.

கெட்டேகொடவின் சட்டமூலங்கள் அரசியலமைப்புக்கு முரணான பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு ஆதரவுடன் நிறைவேற்றுவதற்கு புறம்பாக சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களின் அங்கீகாரமும் பெறப்படவேண்டும் என்று பாராளுமன்ற



செயலாளர் நாயகத்துக்கு எழுதிய கடிதத்தில் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியிருக்கிறார்

சட்டமூலங்களின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'நெருக்கடிக்கு' தொடர்பில்லாத வகையில் வரையறை குறிப்பிடப்படாத ஒரு காலப்பகுதிக்கு (கலைக்கப்பட்ட) உள்ளூராட்சி சபைகள் கூட்டப்படக்கூடும். அதனால் உத்தேச திருத்தம் உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் நீடிக்கப்படுவதற்கும் தேர்தல்களை தாமதிப்பதற்கும் ஜன நாயக அடிப்படையில் ஒரு ஆணையைப் பெறாமல் உள்ளூராட்சி உறுப்பினர்கள் வரையறை குறிப்பிடப்படாத காலப்பகுதிக்கு பதவியில் தொடரவும் வழிவகுக்கும். அதனால் வாக்களிப்பதற்கான மக்களின் அடிப்படை உரிமையும் அவர்கள் தேர்தல்களில் நிற்பதற்கான உரிமையும் பாதிக்கப்படும் என்று சட்டமா அதிபர் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

கொட்டேகொடவின் பிரேரணைக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருக்கும் எதிரணி கட்சிகள் அரசியலமைப்புக்கு முரணான சட்டமூலங்களை பாராளுமன்றத்துக்கு கொண்டுவருவதற்கு பதிலாக அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டிருக்கின்றன.

இதனிடையே சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் (பவ்ரல் ) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான ரோஹண ஹெட்டியாராச்சி சட்டமூலங்களின் அரசியலமைப்புப் பொருத்தப்பாட்டை கேள்விக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் கடந்தவாரம் விசேட தீர்மானம் கோரும் மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்.

உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படுவதை தடுப்பதற்கு சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யக்கூடிய ஆபத்தான சூழ்நிலையை கெட்டேகொடவின் பிரேரணை தோற்றுவிக்கும் என்பதால் அது தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்றும் ஜனநாயக முறைமை முழுமையின் மீதும் மக்களை நம்பிக்கை இழக்கச்செய்துவிடும் என்றும் ஹெட்டியாராச்சி மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் மேலும் பல மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

உயர்நீதிமன்றத்திடம் இருந்து வரக்கூடிய தீர்மானம், பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு எழுதிய கடிதத்தில் சட்டமா அதிபர் ஏற்கெனவே தெரிவித்திருக்கும் அபிப்பிராயத்தின் பின்புலத்தில் கெட்டேகொடவின் பிரேரணையை பாராளுமன்றத்தில் நிறை வேற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்குமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

உள்ளூராட்சி தேர்தல்களில் தங்களுக்கு ஏற்படக்கூடிய படுதோல்வி பதவியில் இருப்பதற்கான நியாயப்பாட்டை பொறுத்தவரை ஏற்கெனவே பெரும் சவாலை எதிர்நோக்கும் தங்களது அரசாங்கத்துக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தும் என்று அஞ்சும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் ராஜபக்சாக்களின் பொதுஜன பெரமுனவும் வியூகங்களை வகுக்கின்றன.

கொட்டேகொடவின் பிரேரணையை உள்ளூராட்சி தேர்தல்கள் தற்போதைக்கு நடத்தப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு இதுவரையில் அரசாங்கம் செய்துவந்த இடையூறுகள் மற்றும் கொடுப்பிடிகளின் ஒரு தொடர்ச்சியாகவே நோக்கவேண்டும்.

காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி தேர்தல்களுக்கான நியமனப்பத்திரங்களை ரத்துச்செய்வதற்கு பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்று அரசாங்க அரசியல் வாதிகள் சிலர் யோசனை தெரிவித்த சில நாட்களில் கெட்டேகொட கலைக்கப்பட்ட சபைகளை மீண்டும் கூட்டுவதற்கான இந்த பிரேரணையை கொண்டு வந்திருக்கிறார்.

உள்ளூராட்சி தேர்தல்களை தற்போதைக்கு நடத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதில் கடும் உறுதியாக இருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்க கலைக்கப்பட்ட சபைகளை மீண்டும் கூட்டுவதை நோக்கமாகக் கொண்ட முயற்சி குறித்து இதுவரையில் கருத்து எதையும் வெளியிடவில்லை

கெட்டேகொட பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவின் தீவிர விசுவாசி. அதனால் பசிலின் தூண்டுதலின் பேரில்தான் அவர் இந்த தனிநபர் சட்டமூலங்களைக் கொண்டுவந்திருப்பார் என்று வலுவாக நம்பப்படுகிறது.

கலைக்கப்பட்ட 340 உள்ளூராட்சி சபைகளில் 330 சபைகள் பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டில் இருந்தவை. அந்த சபைகள் மீண்டும் கூட்டப்பட்டால் பயனடையப்போவது அந்த கட்சியேயாகும். மக்கள் செல் வாக்கை இழந்த நிலையில் மீண்டும் உள்ளூர் மட்டங்களில் கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு உள்ளூராட்சி உறுப்பினர்களை வலிமையான படையணியாக பயன்படுத்தமுடியும் என்று பசில் நம்புகிறார் போலும்.

சபைகள் மீண்டும் கூட்டப்படுமேயானால் பொதுஜன பெரமுனவைப் பொறுத்தவரை இரட்டைப் பயன் இருக்கிறது. அதாவது உள்ளூராட்சி தேர்தல்களுக்கு தற்போதைக்கு முகங் கொடுக்கவேண்டியதில்லை. அதே வேளை தேர்தல் இல்லாமலேயே மீண்டும் உள்ளூராட்சி சபைகள் பொது ஜன பெரமுனவின் ஆதிக்கத்தில் வந்து விடும். அத்தகைய ஒரு சாத்தியப்பாட்டை ஜனாதிபதி விக்கிரமசிங்க விரும்புவாரா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

அதேவேளை, இந்த நிகழ்வுப் போக்குகளை எல்லாம் நாட்டு மக்கள் எவ்வாறு நோக்குவார்கள் என்பது பற்றி அரசாங்க அரசியல்வாதிகளுக்கு அக்கறை இருப்பதாக தெரியவில்லை.

மீண்டும் மக்கள் கிளர்ச்சியொன்று மூண்டுவிடாதிருப்பதை உறுதிசெய்வதில் குறியாக இருக்கும் அரசாங்கம் சிறிய ஒரு ஆர்ப்பாட்டத்தைக்கூட அளவுக்கும் அதிகமான படைபலம் கொண்டு அடக்குகிறது. அத்தகைய அடக்கு முறையை முன்னெடுத்துக் கொண்டு 'நியாயப்பாட்டை' இழந்துவிட்ட பாராளுமன்றம் ஒன்றை பயன்படுத்தி ஜனநாயக விரோதமான சடடங்களை நிறைவேற்றுவதில் அரசாங்கம் முனைப்புக்காட்டி வருகிறது.

2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாக அதிகாரத்துக்கு வந்த கோட்டாபய ராஜபக்ச அவரது தவறான ஆட்சிமுறைக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் விளைவாக இரண்டரை வருடங்களுக்குள்ளாகவே பதவியில் இருந்து விரட்டப்பட்டார். 2020 ஆகஸ்ட் பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் பிரதமராக பதவிக்கு வந்த மகிந்த ராஜபக்சவும் அவரது அமைச்சரவையும் அதே மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் பதவிவிலகவேண்டியேற்பட்டது.

அதனால் இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் மக்கள் அளித்த ஆணை இன்னமும் கூட 'நியாயப்பாட்டைக்' கொண்டிருக்கிறது என்று கூறமுடியாது.

இத்தகைய ஒரு பாராளுமன்றத்தை, மக்களின் வாக்குரிமையை பாதிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க அரசாங்கம் பயன்படுத்த முனைவது படுமோசமான ஜனநாயக விரோதப் போக்காகும். இதை தடுக்க ஜனநாயக ரீதியான வெகுஜனப் போராட்டங்கள் அவசியம்.









# பதின்மூன்றாவது அரசியல் திருத்தம் நித்திய கண்டம், ஆயுசு நூறு!

**பனங்காட்டான்**

ஜெனிவா அமர்வுக் காலங்களில் இலங்கைத் தமிழர் விவகாரம் சூடு பிடிப்பது போன்று, இலங்கை - இந்திய தரப்புகள் சந்திக்கும் வேளைகளில் தமிழருக்கான அதிகாரப் பகிர்வு, இனப்பிரச்சனைத் தீர்வு என்ற விடயங்கள் தீவிர பேசுபொருளாகும்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வாரம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை புதுடில்லியில் சந்திக்கவுள்ளார். அப்போது மோடி அவருக்கு என்ன சொல்ல வேண்டும் என்ற பாணியில் கடிதப் போட்டி நடத்தும் தமிழர் தலைமைகள் தங்களுக்குள் முட்டி மோதிக்கொண்டிருக்கின்றன.

1987 யூலையில் செய்யப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்த மாத இறுதியில் 36 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இந்தக் காலப்பகுதியில் ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதன் அர்த்தம், சிங்கள தேசம் தமிழரை எவ்வாறு எத்தி விளையாடியிருக்கிறது என்பதை புரிய வைப்பது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படை அம்சமான மாகாண சபைகள் அமைப்பு என்பது இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தமாக அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் கொண்டு வரப்பட்டது. பிரிவினைக்கு இடமில்லாத ஒற்றை ஆட்சியை வலியுறுத்தும் ஆறாவது அரசியல் திருத்தம் போன்றதே அதிகாரப் பகிர்வுக்கான 13வது அரசியல் திருத்தமும். அதாவது, இவை இரண்டும் சட்ட வலுவுள்ளவை. பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் போன்று ஒருதலைப்பட்சமாக எவரும் கிழித்தெறியக்கூடிய ஒன்றல்ல 13வது திருத்தம்.

கடந்த 36 ஆண்டுகளில் எட்டு ஜனாதிபதிகள் நிறைவேற்று அதிகாரங்களுடன் ஆட்சி புரிந்துள்ளனர். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், சந்திரிக குமாரதுங்கவும், மகிந்த ராஜபக்சவும் இவ்விரண்டு தடவைகள் தொடர்ச்சியாக பதவி வகித்துள்ளனர். ஆனால் எவருமே 13வது அரசியல் திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றத் தயாராக இருக்கவில்லை. இதில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அடக்கம்.

இந்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லையாயினும் இந்திய வல்லரசுக்கெதிராக எதுவுமே செய்ய முடியாத சூழ்நிலையால் தற்காலிகமாக ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. காணி, காவற்துறை அதிகாரங்களுடன் மாகாண சபைகளை அமைப்பதற்கு முன்னர் இடைக்கால நிர்வாகமொன்றை அமைக்க விடுதலைப் புலிகள் இணங்கினராயினும், முதற்கோணல் முற்றுங்கோணல் என்பது போல அதில் ஏமாற்றமே கிடைத்தது. 36 வருடங்களாக அதிகாரப் பகிர்வு என்பது அர்த்தமற்ற ஒன்றாக இருந்து வருகிறது.

வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபை என்பது 1990 மார்ச் மாத இறுதியுடன் காலாவதியானது. அத்துடன், இணைந்த மாகாண சபை என்பது நிர்மூலமாயிற்று. அதன் பின்னர் கிழக்கு மாகாண சபை பல வருடங்களாக இயங்கியதாயினும் வடமாகாண சபை ஐந்து வருடங்களுக்கே இயங்க விடப்பட்டது.

அதிகாரமற்ற மாகாண சபை முறைமை அர்த்தமற்ற ஒன்றாக காணப்பட்டதாயினும் இதற்கான தேர்தலில் போட்டியிடுவதிலும் ஆட்சியைக் கைப்பற்றுவதிலும் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழுமூச்சுடன் இறங்கி வெற்றி கண்டது. கொழும்பிலிருந்து நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை இறக்குமதி செய்து வடமாகாண சபையின் தலைவராக்கியதும் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புதான்.

இணைக்கப்படாத (அல்லது பிரிக்கப்பட்ட) கிழக்கு மாகாண சபை தேர்தலை 2008ல் புறக்கணித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, 2012ல் அங்கு போட்டியிட்டு தனது கொள்கையை தானே தீயிட்டுக் கொளுத்தியது. இதன் பின்னர் எல்லாமே திக்குத் திசையின்றி மாறி மாறி ஓட்டம் கண்டன.

இன்றுள்ள நிலை என்ன? கூட்டமைப்பின் பேச்சாளரென அறிமுகப் படுத்தப்பட்ட சுமந்திரனின் எதேச்சாதிகாரப் போக்கினால் தமிழரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியதாக அறிவிக்கப்பட்டது. இதனால் கூட்டமைப்பிலிருந்த ரெலோவும் புளொட்டும் ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறீகாந்தா, சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருடன் ஜனநாயக போராளிகளையும் இணைத்துக் கொண்டு புதிதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கியது.

இந்தக் கூட்டுகளிலிருந்து விடுபட்டு தனித்தியங்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதனுடனும் இணையாது தனித் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆக, தமிழர் பிரச்சனைத் தீர்வில் மூன்று தமிழ்த் தேசிய அணிகள் தமக்கான பாதையை வகுத்து அதில் இயங்குவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

ரணில் - மோடி சந்திப்புக்கு ஒரு வாரம் மட்டுமே இருக்கும் வேளையில் தமிழர் தரப்புகள் சுடுகுது மடியைப் பிடி என்னும் பாணியில் மோடிக்கு ஆலோசனைக் கடிதங்கள் அனுப்புகின்றன. சுமஷ்டி முறையிலான தீர்வை ரணிலிடம் இந்தியா வலியுறுத்த வேண்டுமென கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணி மோடிக்கான கடிதத்தில் கேட்டுள்ளது. 13வது அரசியல் திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துமாறு ரணிலுக்கு அழுத்தம் கொடுக்கும்படி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆறு கட்சிகளின் தலைவர்களும் ஒப்பமிட்டுக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இந்தக் கடிதத்தில் ஒப்பமிட மறுத்துள்ள சம்பந்தன் தமிழரசுக் கட்சி சார்பில் தனியாக கடிதம் அனுப்பியுள்ளார். அதாவது, 13வது திருத்தத்துக்கு அப்பால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டவைகளை முழுமையாக அமல் செய்ய வேண்டுமென மோடியிடம் தமிழரசு கேட்டுள்ளது. இந்தத் தனிக்கடிதத்தை அனுப்புவதற்காகத்தான் ஆறு கட்சிகளின் கூட்டுத்தயாரிப்பில் ஒப்பமிட சம்பந்தன் மறுத்துள்ளார் போலும்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்தபோது தமிழரசுக் கட்சியின் கடிதம் நேடியாக ஒப்படைக்கப்பட்டது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு பிரதமர் மோடி ரணில் விக்கிரமசிங்கவிடம் அழுத்தம் பிரயோகிக்க வேண்டுமென்று இந்தியத் தூதுவரிடம் வேண்டியதாகவும், இதனை உடனடியாக இந்தியப் பிரதமருக்கு தெரிவிப்பதாக தூதுவர் கோபால் பாக்லே கூறியதாகவும் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

13வது திருத்தமானது இரு நாட்டுத் தலைவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் வழியாக அரசியல் அமைப்பில் செய்யப்பட்ட திருத்தம். இன்னொரு அரசியல் திருத்தத்தின் வழியாக மட்டுமே 13ஐ ரத்துச் செய்ய முடியும். வேறெந்த வழியாலும் 13ஐ அகற்ற முடியாது.

> **“இப்போதிருக்கும் அதிகாரப் பகிர்வு விடயங்களை இடைக்காலத் தீர்வாக அமல்படுத்தாது போனால், கிடைப்பதும் இல்லாது போகுமென்று கடந்த ஜனவரி மாதம் 20ம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்பில் சம்பந்தன் உட்பட தமிழர் தரப்பினர் அனைவரையும் ஒன்றாக அழைத்துக் கூறியதை இவர்கள் நினைவிற் கொள்வார்களானால் இப்போதைய கடிதப் போட்டி தேவைப்படாது என்பதை புரிந்து கொள்வார்கள்.”**

வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபையை நிரந்தரமாக்க கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண்டுமென ஒப்பந்தம் கூறுகிறது. ஆனால் இலங்கை உச்ச நீதிமன்றம் அதனை சட்டபூர்வமாக ரத்துச் செய்து விட்டது. இதனையிட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட இரு நாட்டு அரசுகளும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

13ம் திருத்தத்தின் கீழான மாகாண சபைகள் தனித்தனியாக அமைக்கப்பட்டபோது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சம்பந்தன் தலைமையில் அதனை ஏற்றுக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டது. ஆனால் இப்போது இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென சம்பந்தன் வலியுறுத்துவது அடிப்படையில் முன்னுக்குப்பின் முரணானது.

13ம் திருத்தம் தமிழரது இனப்பிரச்சனைக்குத் தீர்வு என எவரும் எப்போதும் ஏற்றுக்கொள்ளவில்லை. தற்காலிகமாக ஒரு இடைக்காலத் தீர்வாகவே அது நோக்கப்படுகிறது. ஏற்கனவே இதனை ஏற்று வடமாகாண சபை நிர்வாகத்தைக் கைப்பற்றிய சம்பந்தனின் தலைமை இப்போது கூட்டமைப்பிலிருந்து விலகி தமிழரசுக் கட்சியாக தனித்தியங்கும் வேளையில், ஒன்றுபட்டு இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்ப மறுப்பது, ரணில் விரும்பும் தட்டிக் கழிக்கும் செயற்பாட்டுக்கு உதவுவதாக அமையும்.

தமிழர் அரசியல் பரப்பில் மூத்த கட்சியான தமிழரசு மற்றைய ஆறு கட்சிகளின் தயாரிப்பில் ஒப்பமிடுவதை தரக்குறைவாக எண்ணியதால் சம்பந்தன் அதில் ஒப்பமிட மறுத்துவிட்டதாக பொது வெளியில் கருதப்படுகிறது. சிவாஜிலிங்கம் அனுப்பியுள்ள கடிதம் உட்பட இதுவரை நான்கு கடிதங்கள் இந்தியப் பிரதமருக்கு தமிழ்த் தேசிய தரப்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. இதில் எதனை மோடி கவனத்தில் எடுப்பார்?

இவ்வேளையில் கடந்த ஜனவரி மாதம் 20ம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்பில் சகல தமிழர் தரப்பையும் ஒன்றாக அழைத்து சந்தித்தபோது அவர்களுக்கு வழங்கிய ஆலோசனை கவனத்துக்குரியதாகிறது:

“இப்போதிருக்கும் அதிகாரப் பகிர்வு விடயங்களை இடைக்காலத் தீர்வாக அமல்படுத்தாது போனால் கிடைப்பதும் இல்லாது போகும். தீர்வைப் பற்றி பேசிக் கொண்டேயிருப்பது ஒருபோதும் தீர்வைப் பெற்றுத்தராது” என்று சம்பந்தன், கஜேந்திரகுமார், சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சிறீகாந்தா, சுரேக்ஷ் பிரேமச்சந்திரன் ஆகியோருக்கு நேரடியாகவே ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதை வேறெந்த வழியாக தெரிவித்தால் தமிழர் தரப்புக்குப் புரியும். இந்தப் புரிதல் இன்மையால்தான் வெவ்வேறு கோணங்களில் இவர்கள் கடிதப்போட்டி நடத்துகிறார்கள். இந்தியா என்ன சொல்லும் என்பதும், இலங்கை என்ன செய்யும் என்பதும் ரகசியமானவை அல்ல.

13வது அரசியல் திருத்தம் நித்திய கண்டம் போன்றது. ஆனால் இதற்கு ஆயுள் நூறு. இதனை தமிழர் தரப்பினர் எப்போது புரிந்து கொள்வர்?



# விண்வெளி ஆராய்ச்சி வரலாற்றில் இந்தியாவின் 'சந்திரயான்' சாதனை!

# சந்திரயான் - 3 நிலவில் பதிக்கப்போகும் 'இந்திய சின்னம்'

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட பிரமாண்டமான முயற்சியின் தொடக்கப்புள்ளியாக வெள்ளியன்று சந்திரயான்-3 விண்ணில் சீறிப் பாய்ந்தது.

ஜூலை 14, வெள்ளிக்கிழமை மதியம் 2:35 மணிக்கு சந்திரயான்-3 விண்கலத்தைச் சுமந்து செல்லும் எல்விஎம்3 எம்4 ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது.

சந்திரயான் 3 விண்ணில் ஏவப்படுவதைக் காண பெருந்திரளான மக்கள் சிறிஹரிகோட்டாவில் திரண்டிருந்தனர்.

ராக்கெட் விண்ணை நோக்கிப் பறக்க ஆரம்பித்ததும் மக்கள் கைத்தட்டி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

**நிலவுக்கான பயணம் வெற்றிகரமாக தொடக்கம்**

இஸ்ரோ தலைவர் சோம்நாத் பேசுகையில், சந்திரயான் திட்டத்தின் பின்னணியில் உள்ள இஸ்ரோ குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய சோம்நாத், "எல்விஎம் 3-எம்4 ராக்கெட் சந்திரயான் 3 விண்கலத்தை துல்லியமான சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

எல்விஎம் 3-எம்4 ராக்கெட்டின் மூன்று அடுக்குகள் வெற்றிகரமாக பிரிந்ததையடுத்து, நிலவை நோக்கிய பயணத்தை சந்திரயான் 3 வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது.

சந்திரயான் 3 விண்ணில் ஏவப்பட்டது குறித்து ட்விட்டரில் பதிவிட்டுள்ள பிரதமர் நரேந்திர மோதி, "சந்திரயான்-3 இந்திய விண்வெளி வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுதுகிறது. இது ஒவ்வொரு இந்தியரின் கனவுகளையும் லட்சியங்களையும் உயர்த்துகிறது. இந்த முக்கிய சாதனை நம் விஞ்ஞானிகளின் அயராத அர்ப்பணிப்புக்கு சான்று" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரோவின் விண்வெளிப் பரிசோதனைகளிலேயே "மிகவும் சிக்கலான சோதனைகள்" என சந்திரயான் திட்டங்களைச் சொல்லலாம்.

**சந்திரயான் - 1 சாதித்தது என்ன?**

சந்திரயான்-1 ஏவப்பட்ட போது, இஸ்ரோ ஆர்பிட்டரை மட்டுமே ஏவியதாக முதலில் கருதப்பட்டது. ஆனால், அப்போது ஆர்பிட்டருடன், மூன் இம்பாக்ட் ப்ரோப் எனப்படும் நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்யும் உபகரணம் ஒன்றும் ஏவப்பட்டது.

சந்திரயான்-1 நிலவின் மேற்பரப்புக்கு "நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்யும் உபகரணத்தை" அனுப்பி அதை நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கச் செய்தது.

நிலவின் மேற்பரப்பிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில், நிலவில் தண்ணீர் இருப்பதாக இஸ்ரோ 2009 செப்டம்பர் 25 அன்று அறிவித்தது. நிலவின் மேற்பரப்பில் அங்கு தண்ணீர் இருப்பதற்கான தடயங்கள் கிடைத்தன.

இந்தியாவில் இஸ்ரோ பெரிய அளவில் ஆராய்ச்சிப் பணிகளைத் தொடங்கியதற்கு முன்பே, 1969 இல் அமெரிக்கா தனது விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்பி அங்கிருந்து பாறை மாதிரிகளை பூமிக்கு கொண்டு வந்தது.

அதன் பிறகு 1972 வரை நாசா 12 விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்பியது. ஆனால் அமெரிக்கா உட்பட வேறு எந்த நாடும் நிலவில் நீர் இருப்பதற்கான தடயங்களை கண்டுபிடிக்க முடியவில்லை. இருப்பினும் சந்திரயான் 1 மூலம் இஸ்ரோ ஏவிய, "நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்யும் உபகரணம்" அந்த சாதனையைப் படைத்தது.

**சந்திரயான் -2 திட்டத்தில் என்ன நடந்தது?**

சந்திரயான் வெற்றிக்குப் பிறகு, இஸ்ரோ ஜிஎஸ்எல்வி எம்கே 3 என்ற ராக்கெட்டை உருவாக்கியது. இது சுமார் நான்கு டன் எடையை விண்ணில் செலுத்தும் திறன் கொண்டது.

அதன் பிறகு, அந்த ராக்கெட்டின் உதவியுடன் 2019ஆம் ஆண்டு சந்திரயான்-2 ஏவப்பட்டது. இந்த முயற்சியின் போது விக்ரம் என்ற லேண்டரும், பிரக்யான் என்ற உலவியும் அனுப்பப்பட்டன.

அதன் பின் நிலவின் சுற்றுவட்டப் பாதையில் சந்திரயான் -2ன் சுற்றுக் கலன் (ஆர்பிட்டர்) வெற்றிகரமாக சுற்றி வருகிறது. இதுவரை இந்த ஆர்பிட்டர் நிலவின் மேற்பரப்பின் பெரும்பகுதியை படம் பிடித்துள்ளது. இந்த படங்களில் இருந்து மிகவும் முக்கியமான தகவல்கள் பூமிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த ஆர்பிட்டரின் ஆயுட்காலம் ஏழரை ஆண்டுகள் என்று அப்போது இஸ்ரோ அறிவித்திருந்தது. இது வரை மூன்று ஆண்டுகள் மற்றும் பத்து மாதங்களுக்கும் மேலாக இந்த ஆர்பிட்டர் நிலவை சுற்றி வருகிறது.

அதுமட்டுமின்றி ஆர்பிட்டர் திறமையாக செயல்படுவதால் சந்திரயான்-3 திட்டத்தில் ஆர்பிட்டர் அனுப்பப்படாது என தகவல்கள் வெளியாகியுள்ளன. சந்திரயான்-2ல் அனுப்பப்பட்ட ஆர்பிட்டரே இத்திட்டத்துக்கும் பயன்படுத்தப்படும்.

இதனால் சந்திரயான்-3 விண்கலம் செலவு குறைந்தது என்று கருதப்படுகிறது. சந்திரயான்-2 விண்கலத்தின் செலவு ரூ.978 கோடியாக இருந்தது. ஆனால், சந்திரயான்-3 விண்கலத்திற்கான செலவு ரூ. 615 கோடி மட்டுமே.

**விக்ரம் லேண்டர் தரையிறங்குவதில் என்ன சிக்கல் ஏற்பட்டது?**

இஸ்ரோவின் முன்னாள் இயக்குநரான சிவன் அளித்த பேட்டியில், "ராக்கெட்டின் உந்துவிசை ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் செயல்பட வேண்டும். இதை propulsion band என்று சொல்வார்கள். போன முறை இந்த உந்துவிசை குறிப்பிட்ட அளவைத் தாண்டி செயல்பட்டது. அதனால், அந்த அளவு வேகத்தைக் கையாளும் திறன் வழிகாட்டும் அமைப்புக்கு இல்லை. இதனைக் கட்டுப்படுத்தும் அமைப்புக்கும் ஒரு வரையறை உண்டு. அந்த வரையறையையும் தாண்டி அது செயல்பட்டது" என்று கூறினார்.

**சந்திரயான் 3 திட்டத்தின் சிறப்பு என்ன?**

சந்திரயான் திட்டத்தின் மிக முக்கியமான நோக்கம் இந்தத் தொழில்நுட்பத்தை நிகழ்த்திப் பார்ப்பது என்று சிவன் குறிப்பிட்டிருந்தார். மேலும், "இது மிகப் புதிய தொழில்நுட்பம். நாம் இஸ்ரோவைத் துவங்கியபோது நம்மிடம் இருந்த தொழில்நுட்பம் மிகச் சிறியது. ஆனால், தற்போது நிறைய தொழில்நுட்பங்களை உருவாக்கியிருக்கிறோம். சந்திரயான் திட்டத்தின் முக்கிய நோக்கம், நிலவில் போய் தரையிறங்கக் கூடிய தொழில்நுட்பத்தை உருவாக்கி, அதைச் செயல்படுத்திப் பார்ப்பதுதான்" என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

சந்திரயான்-3, இரண்டு முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது. நிலவின் சுற்றுப் பாதையில் லேண்டர் மற்றும் ரோவர் வைக்கப்பட்டிருக்கும் அலகை எடுத்துச் செல்வது ஒரு கூறு. பின்னர் நிலவின் மேற்பரப்பில் லேண்டர் மற்றும் ரோவர் தொகுதியை பாதுகாப்பாக தரையிறக்கப் பயன்படும் ஒருங்கிணைந்த தொகுதி மற்றொரு கூறு.



லேண்டர் தொகுதி, அதிலிருந்து பிரிந்து நிலவின் மேற்பரப்பில் இறங்கும். அது பாதுகாப்பாக இறங்கிய பின், ரோவர் வெளியேறுவதற்கான சாய்வான அமைப்பு மெதுவாக வெளியேறும். அதன் பின் ரோவர் (cytp) வெளியே வரும்.

இந்த ரோவர் நிலவின் நிலப்பரப்பில் சுற்றி, அதை பகுப்பாய்வு செய்யும். இதில் கிடைக்கும் தகவல்கள் ரோவரிலிருந்து லேண்டருக்கு அனுப்பிவைக்கப்படும். இந்தத் தரவுகள் நிலவிலிருந்து சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவில் சுற்றிக்கொண்டிருக்கும் சந்திரயான் -2 ஆர்பிட்டருக்கு அனுப்பப்படும். அங்கிருந்து தரையிலுள்ள இஸ்ரோவுக்கு இந்தத் தரவுகள் வந்தடையும்.

**சந்திரயான் 3 சவால்கள் என்ன?**

சந்திரயான் -3 இல் அனுப்பி வைக்கப்படும் லேண்டரும் ரோவரும் நிறைய பரிசோதனைகளைச் செய்து சில குறிப்பிட்ட முக்கிய தரவுகளைப் பெற வேண்டும். அவற்றுள், நிலவின் மேற்புற ஆராய்ச்சி, நிலவின் மேற்பரப்பில் உள்ள தாதுக்களைக் கண்டுபிடிப்பது, அங்கு தனிமங்கள் உள்ளதா எனத் தேடுதல், நிலவின் வளிமண்டலத்தைக் கண்காணிப்பது, நீர் மற்றும் பனி வடிவில் தண்ணீர் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்துவது, நிலவின் மேற்பரப்பை

(18ஆம் பக்கம் பார்க்க)

## திட்டத்தில் முக்கிய பங்காற்றிய தமிழர்



இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி வரலாற்றில் முக்கியமான நிகழ்வாகக் கருதப்படும் சந்திரயான்-3 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது.

இந்தத் தருணத்தில், சந்திரயான் 3-இன் திட்ட இயக்குநராக ஒரு தமிழர் பணியாற்றியிருப்பது தமிழகத்துக்கு இரட்டிப்புப் பெருமையாக அமைந்துள்ளது.

வீர முத்துவேல், விழுப்புரம் ரயில்வே பள்ளியில், 10ஆம் வகுப்பு வரை படித்தார்.

பிறகு, விழுப்புரம் ஏழுமலை பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரவியலில் டிப்ளமோ முடித்தார். பிறகு, சென்னை சாய்ராம் கல்லூரியில், பொறியியல் பட்டப்படிப்பில் இயந்திரவியல் பிரிவில் படித்தார்.

அதன் பின், திருச்சியில் உள்ள, ஆர்.இ.சி. அரசு பொறியியல் கல்லூரியில், முதுநிலைப் பட்டம் பயின்றார். தொடர்ந்து 2004ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான, "இஸ்ரோ"வில் பணிக்குச் சேர்ந்தார்.

இவற்றுக்கு இடையே, இவர் சென்னையில் இருக்கும் ஐ.ஐ.டி.யிலும் பயிற்சி பெற்றார்.

சந்திரயான் திட்டத்திற்கு ஒரு தமிழர் தலைமை வகிப்பது இது முதல்முறை அல்ல. சந்திரயான்-1இன் திட்ட இயக்குநராக இருந்த மயில்சாமி அண்ணாதுரை, சந்திரயான்-2இன் திட்ட இயக்குநராக இருந்த வனிதா ஆகிய இருவரும் தமிழர்கள்.

இதனால் மூன்று சந்திரயான் திட்டங்களிலும் திட்ட இயக்குநர்களாக தமிழர்கள் குறிப்பிடத்தக்க அளவில் பங்கு வகித்துள்ளமை வரலாற்றில் பதிவாகியுள்ளது.

# கொழும்பு-யாழ். ரயில் சேவை மீண்டும் ஆரம்பமானது மகிழ்ச்சி

ஆறு மாதங்களின் பின்னர் கொழும்பு-யாழ். ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆறு மாதங்களாக கொழும்பு செல்லும் மக்கள் பஸ்சை மட்டுமே நம்பி இருந்தனர். இப்போது ரயில் சேவை ஆரம்பமானது அவர்களுக்கு மகிழ்ச்சி. பாதுகாப்பான பயணம், செலவு குறைவு என்பன காரணமாக மக்கள் அதிகம் ரயில் சேவையை நாடுகின்றார்கள். இப்போது நவீன வசதிகளுடன் அதிவேகமான ரயில் சேவை யாழ்ப்பாணம் -கொழும்பு இடையே ஆரம்பமாகியுள்ளது. 6.30 மணித்தியாலங்களில் மக்கள் கொழும்பு செல்லவும் யாழ்ப்பாணம் வரவும் வசதி ஏற்பட்டிருக்கின்றது.

இது குறித்து யாழ். மக்கள் என்ன சொல்கிறார்கள்?

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

**தே.சுரேந்திரகுமார்**
*யாழ். புகையிரதநிலைய அதிபர்*



யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையானது மிகவும் வரவேற்கத் தக்க விடயம்.

எனினும் புகையிரத கடவையில் பயணிக்கும் மக்கள் இனி அவதானமாக பயணிக்க வேண்டும். குறிப்பாக இதுவரை காலமும் சாதாரண வேகத்தில் பயணித்த புகையிரதம் தற்பொழுது அதி வேகத்தில் பயணிப்ப தற்குரிய ஏற்பாடுகளை புகையிரத திணைக்களம் மேற் கொண்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்காலத்தில் புகையிரத கட வையில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்திய கூறுகள் காணப்படுகின்றன.

எனினும் அந்த விபத்துக்களை தவிப்பதற்குரிய முன் னேற்பாட்டு நடவடிக்கைகளை புகையிரத திணைக் களம் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு பொதுமக்களும் புகையிரத கடவை யினை கடக்கும்போது மிகவும் அவதானமாக அதாவது புகையிரதம் வரும் வேளைகளில் உரிய சமிக்ஞைகளை அவதானித்து கடவையினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால் முன்னர் சாதாரண வேகத்தில் தான் புகையிரதம் பயணித்தது.

எனினும் தற்பொழுது 100 கிலோமீற்றர் வேகத்தில் புகையிரதம் சேவையில் ஈடுபடும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

எனவே பாதிக்கப்படுவது மக்கள்தான் வீதி விபத்து களை தவிர்ப்பதோடு மட்டுமல்லாது புகையிரத கடவை களிலும் பயணிக்கும் போது மிகவும் அவதா னத்துடன் பயணிக்க வேண்டும்.

புகையிரதம் வரும் நேரங்கள் நேரங்களில் உரிய சமிக்ஞைகளை நாங்கள் பின்பற்றி அதன்படி ஒழுகி செயற்படும் இடத்து புகையிரத கடவைகளில் ஏற்படும் விதி விபத்துக்களை தடுக்க முடியும்.

குறிப்பாக கடந்த காலங்களில் பல்வேறுபட்ட புகை யிரத விபத்துக்கள் ஏற்பட்டன. எனவே எதிர்காலங் களில் புகையிரத கடவைகளில் ஏற்படும் விபத்தை தவிர்ப்பதற்கு பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக செயற்பட வேண்டும்.

மக்கள் இதனை கருத்தில் எடுக்க வேண்டும். இந்த விடயத்தினை நன்கு அறிந்து முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் - என்றார்



**த.சிவதாசன்**
*அரியாலை*

கடந்த ஆறு மாதமாக இடைநிறுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாண கொழும்பு புகையிரத சேவையானது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான புகையிரத சேவையானது புகையிரத மார்க்கத்தில் ஏற் பட்ட திருத்த வேலைகளின் காரணமாக நிறுத்தப்பட் டிருந்தது.

எனினும் மீண்டும் புகையிரத சேவை ஆரம்பிக்கப் பட்டமையானது மிகவும் வரவேற்கத்தக்க விடயம். ஏனென்றால் கடந்த ஆறு மாத காலமாக கொழும்பு செல்லும் பயணிகள் பேருந்துகளில் காத்திருந்து பயணிக்கவேண்டிய நிலை காணப்பட்டது.

எனினும் புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டுள் ளதன் காரணமாக இனி அவ்வாறான ஒரு நிலை ஏற் படாது. ஏனென்றால் காலை, மதியம் என இரண்டு சேவைகள் உள்ளன. அவசர தேவையின் நிமித்தம் கொழும்பு செல்வோர் புகையிரத சேவையில் செல்வ தன் மூலம் தமது தேவைகளை உரிய நேரத்தில் நிறை வேற்ற முடியும்.

அத்தோடு புகையிரத சேவை என்பது பாதுகாப் பான சேவையாக காணப்படுகின்றது. குறிப்பாக பேருந்துகளில் பயணிக்கும் போது அச்சத்தின் மத்தியில் பயணிக்க வேண்டியுள்ளது.

இதன் காரணமாக நாங்கள் கொழும்பு செல்ல வேண் டிய சில சமயங்களில் அந்த கொழும்பு பயணத்தை தவிர்க்கவேண்டிய நிலையும் காணப்பட்டது. பேருந்து களில் பயணிக்கும் போது நித்திரை கொள்ள முடியாது. சாரதியைப் போல நாங்களும் நித்திரை முழித்து தான் கொழும்பு செல்ல வேண்டும். அவ்வாறு கொழும்பு சென்றால் கொழும்பு சென்ற தேவையினை நிறைவு செய்ய முடியாத நிலை காணப்படும். ஏனென்றால் இரவு முழுவதிலும் நித்திரை முழித்திருந்து பயணித்து காலை யில் எமது கடமைகளை செயற்படுத்துவது என்பது சாத்தியப்படாத விடயமாக காணப்படுகின்றது.

எனவே கடந்த ஆறு மாத காலமாக பயத்துடன் பயணங்களை மேற்கொண்டு இருந்தோம்.

எனினும் தற்பொழுது இந்த புகையிரத சேவை ஆரம் பிக்கப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

எதிர்வரும் நாட்களில் புகையிரதத்தின் மூலம் கொழும்பு மற்றும் ஏனைய இடங்களுக்கு சென்று எமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியும்-என்றார்.

**சந்திரகாசன்**
*யாழ்ப்பாணம்*



யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயம். நான் கொழும்பு செல்வதற்காக முன் ஆசன பதிவினை மேற்கொள்வதற்காக இந்த புகையிரத நிலையத்திற்கு வருகை தந்திருந்தேன்.

இங்கே அமைச்சர்கள் குழாம் வருவதாக கூறி பலர் இங்கே காத்திருக்கின்றார்கள். இது ஒரு நல்ல விடயம் குறிப்பாக பேருந்தில் பத்து மணித்தியாளங்கள் பயணம் செய்து கொழும்பை சென்றடைவதை விட புகையிரதத் தில் செல்வது பாதுகாப்பான விடயமாக காணப்படு கின்றது.

குறிப்பாக வீதிகளில் விபத்துக்கள் அதிகரித்துள்ளன. அத்தோடு பேருந்துகளில் செல்லும்போது நாங்கள் அவ சரத்திற்கு இடையில் நிறுத்த முடியாத நிலை காணப் படும். ஆனால் புகையிரதத்தில் அவ்வாறு அல்ல எமக்கு அவசர தேவைகளை உடனுக்குடன் சென்று நிறை வேற்றிகொள்ள முடியும். அத்தோடு புகையிரதம் தண்ட வாளத்தில் பயணிப்பதன் காரணமாக விபத்துக்கள் ஏற்படுவதற்குரிய சாத்தியக்கூறுகள் குறைவு. எனவே இந்த புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டதானது நமக்கு மிகவும் மகிழ்ச்சியை தருகின்றது - என்றார்.



**சிவதர்சினி**
*லண்டன்*

நான் லண்டனில் இருந்து வந்திருக்கின்றேன். கொழும்பு செல்வதற்கு புகையிரதத்தில் செல்வதில் எனக்கு ஒரு பிரியம் உள்ளது. முன் ஆசன பதவினை மேற்கொள்வதற்காக இங்கே வந்திருக்கின்றேன்

இந்த புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டமையா னது எனக்கு மாத்திரமல்ல வடபகுதியில் உள்ள மக்க ளுக்கு மிகவும் ஒரு சந்தோசமான விடயம். குறிப்பாக வெளிநாடுகளில் இந்த புகையிரதத்தில்தான் நாங்கள் பயணங்களை மேற்கொள்ளது வழமை அதேபோல யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கும் நான் செல்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்-என்றார்.



**அ.அருளம்பலம்**
*யாழ்ப்பாணம்*

வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ஒரு மார்க்க மாக ரயில் சேவை காணப்படுகின்றது. யுத்த காலத்தில் ரயில் சேவை நிறுத்தப்பட்டு கடந்த 2014 ஆம் ஆண்டு மீண்டும் யாழ்.-கொழும்பு இடையிலான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ரயில் சேவையானது தொடர்ச்சியாக மக்க ளுக்கு பயனுள்ள வகையில் செயற்பட்டிருந்தது. எனி னும் அனுராதபுரத்துக்கும் ஓமந்தை வரையிலான போகின்ற பாதையை புனரமைப்பு செய்வதற்காக சேவை நிறுத்தப்பட்டிருந்தது.

தற்பொழுது மீண்டும் அந்த சேவை ஆரம்பிக்கப்பட் டுள்ளது. இது நல்ல விடயம். குறிப்பாக ரயில் பயணம் என்பது ஏனைய பயணங்களோடு ஒப்பிடும்போது மிகவும் வித்தியாசமான ஒரு பயணமாகும். அத்தோடு பாதுகாப்பான பயணமாக காணப்படுகிறது.

தற்போது வீதிகளில் விபத்துக்கள் மற்றும் ஏனைய பிரச்னைகள் ஏற்படுகின்ற போது இந்த ரயில் சேவை என்பது நமக்கு மிகவும் பாதுகாப்பான பயணமாக காணப்படுகின்றது.

குறிப்பாக ரயில் பயணத்தின்போது கட்டண அறவீடு ஏனைய மார்க்கங்களின் கட்டண அறவீட்டு டன் ஒப்பிடும்போது மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது.

எனினும் கடந்த ஆறு மாத காலமாக இந்த புகை யிரத சேவையானது நிறுத்தப்பட்டு மீண்டும் ஆரம் பிக்கப்பட்டமையானது வரவேற்கத்தக்க விடயம். குறித்த ஆறு மாத காலத்திற்குள் கொழும்பு சென்று வர பல இடர்பாடுகளை நாங்கள் எதிர்நோக்கி இருந்தோம்.

ஆனால் இன்று குறித்து சேவையானது ஆரம்பிக்கப் பட்டுள்ளமை மிகவும் வரவேற்கத்தக்க விடயம். அதி லும் விசேட புகையிரதசேவை ஒன்று யாழ்ப்பாணம்-கொழும்புக்கு இடையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனது மனைவி ஆசிரியராக இருக்கின்றார். அவ ருக்கு புகையிரதத்தில் செல்வதற்கான இலவச ரிக்கெட் கிடைப்பது வழமை. அந்த ரிக்கெட் கிடைப்பதன் மூலம் நாங்கள் கொழும்புக்கான பயணத்தை மேற் கொண்டு வருகின்றோம்.

எனினும் கடந்த ஆறு மாத காலமாக பயணங்களை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. ஏனெனில் புகையிர தம் வவுனியா வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக எமக்குச் சலுகைகளை பயன்படுத்த முடி யாத நிலை காணப்பட்டது. தற்பொழுது இந்த சேவை யானது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை எமக்கு இது ஒரு வரப்பிரசாதமான விடயமாக காணப்படுகிறது-என்றார்

## ராஷ்மிகாவுக்கு பதில் சிறீ லீலா

தெலுங்கில் இளம் முன்னணி நடிகராக வலம் வருபவர் நிதின். அடுத்து வெங்கி குடுமுலா இயக்கத்தில் நடித்து வருகிறார். இதில் கதாநாயகியாக நடிகை ராஷ்மிகா மந்தனா நடித்து வந்தார்.

இந்தப் படத்துக்கு ஜி. வி. பிரகாஷ்குமார் இசையமைக்கிறார் என ஏற்கனவே அதிகாரபூர்வமாக அறிவித்தனர். இந்த நிலையில் ராஷ்மிகா தற்போது 5 படங்களில் நடித்து வருகிறார். இதனால், நேரப் பிரச்னை காரணமாக இப்போது நிதின் படத்தை விட்டு விலகியுள்ளார். இதனால் இப்போது இப்படத்தில் கதாநாயகியாக நடிக்க சிறீ லீலா உடன் பேச்சு நடைபெற்று வருகிறது. ஏற்கனவே, சிறீ லீலா தெலுங் கில் மட்டும் 6 படங்களுக்கு மேல் நடித்து வருகிறார் என்பதுகுறிப்பிடத்தக்கது.





## பறக்கும் கங்கனா

கங்கனா ரணாவத் சவாலான கதாபாத்திரங்கள், வரலாற்று படங்களில் நடிப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார். அவர் நடித்துள்ள ‘எமர்ஜென்சி’ நவம்பர் மாதம் திரைக்கு வரவிருக்கிறது. அடுத்து விமானியாக கங்கனா நடிக்கிறார். இப்படத்திற்கு ‘தேஜஸ்’ என்று பெயரிடப்பட்டுள்ளது.

அதிரடி சண்டைப் படமாக இது தயாரிக்கப்பட்டு வருகிறது. மிகவும் சவால்கள் நிறைந்த இப்படத்தை சர்வேஸ் இயக்குகிறார். கங்கனாவின் முன்னாள் காதலன் ஹ்ரித்திக் ரோஷன் ஏற்கெனவே ‘ஃபைட்டர்’ என்ற படத்தில் விமானியாக நடிக்கிறார். அவருக்குப் போட்டியாக இப்போது கங்கனாவும் அதே கதாபாத்திரத்தில் நடித்து படத்தை முன்கூட்டியே வெளியிடத் திட்டமிட்டுள்ளார்.

## மாவீரனில் விஜய் சேதுபதி

தமிழ் திரையுலகின் சமீபத்திய நடிகர்களில் விஜய் சேதுபதி, சிவகார்த்திகேயன் போன்றவர்கள் எந்தவித பின்புலமும் இல்லாமல் தன்னிச்சையாக போராடி வெற்றி பெற்றவர்கள்.

இவர்களில் விஜய் சேதுபதி தற்போது தமிழ் தவிர தெலுங்கு, ஹிந்தி படங்களிலும் நடித்து வருகிறார். விஜய் சேதுபதி குரல் கொடுப்பிலும் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில் தற்போது சிவகார்த்திகேயன் நடித்துள்ள மாவீரன் படத்திலும் அவர் குரல் கொடுத்துள்ளார்.




## ஷங்கருடன் இணையும் விஜய்

விஜயின் 68ஆவது படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்க இருக்கிறது. இதனிடையே விஜய் அரசிய லுக்கு வர இருக்கிறார் என்றும் அதற்காக 3 வருடங்கள் சினிமாவில் இருந்து விலக இருக்கிறார் எனவும் செய்திகள் வெளியா யின. ஆனால், விஜய் தரப்பில் அதை மறுத்துள்ளனர். இந்நிலையில் விஜய், இயக்குநர் ஷங்கருடன் இணைய போகிறார் கூறப்படுகிறது.

விஜய் நடித்த ‘ நண்பன்’ படத்தை ஏற்கெனவே இயக்கி இருந்தார், ஷங்கர். இப்போது அரசியல் கதையை அவர் இயக்க இருப்பதாகவும் இதற்கான ஒரு வரிக் கதையை விஜயிடம் கூறி சம்மதம் வாங்கி இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இது விஜய்யின் 70ஆவது படமாக இருக்கும் என்றும் 69ஆவது படத்தை அட்லி இயக்குவார் என்றும் கூறப்படுகிறது.






**திரைப்படம் - மாவீரன்**
**இயக்கம் - மடோன் அஷ்வின்**
**இசை - பரத் சங்கர்**
**நடிப்பு - சிவகார்த்திகேயன், அதிதி, மிஷ்கின்**

“மண்டேலா” படத்தில் ஒரு அழுத்தமான கதையுடன், சமூக அக்கறையுள்ள பல கருத்துகளை பகிர்ந்து தேசிய விருதையும் பெற்றவர் இயக்குநர் மடோன் அஷ்வின். இந்த “மாவீரன்” படத்தில் சமூக அக்கறையுடன் ஒரு கதையை எடுத்துக் கொண்டிருந்தாலும் “கற்பனை” கலந்த படமாக கொடுத்து கருத்தான படம் என சொல்வதற்குப் பதிலாக வர்த்தகப் படம் என சொல்ல வைத்திருக்கிறார்.

ஏழை மக்களுக்காக, சென்னை, புளியந்தோப்பு பகுதியில் “கே. பி பார்க் அடுக்குமாடி குடியிருப்பு” என்று கட்டப்பட்ட அடுக்கு மாடி குடியிருப்பில் கட்டுமானத் தரம் மிக மோசமாக இருந்தது குறித்து சில ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது. அந்த விவகாரத்தை மையமாக வைத்துக் கொண்டு இந்தப் படத்தின் கதையை எழுதியிருக்கிறார் இயக்குநர்.

தரமற்ற கட்டடங்களைக் கட்டித் தரும் கட்டட ஒப்பந்தகாரரும் அந்த எதிர்க்கும் பயந்த சுபாவம் கொண்ட கதாநாயகனுக்கும் இடையில் நடக்கும் சண்டைதான் இந்த “மாவீரன்”. அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஓர் அமைச்சரே இப்படி கட்டட ஒப்பந்த காரர் வேலைகளை செய்ய முடியாது. அவரின் பினாமி கட்டினார் என்றுகூட காட்டாமல் அமைச்சர்தான் கட்டினார் என்று கதையின் ஆரம்பத்திலேயே தவறிழைத்திருக்கிறார் இயக்குநர்.

சித்திர படக்கதைக்கு படம் வரையும் சிவகார்த்திகேயன், அம்மா சரிதா, தங்கை மோனிஷா ஆகியோருடன் குடிசை பகுதியில் வசிக்கிறார். அவர்களும் அவர்களின் பகுதியை சேர்ந்தவர்களும் 10 அடுக்கு குடிசை மாற்று சபை குடியிருப்புகளுக்கு வலுக்கட்டாயமாக மாற்றப்படுகிறார்கள். அந்தக் குடியிருப்பு மோசமாக கட்டப்பட்ட ஒரு குடியிருப்பு. கதாநாயகி அதிதி உதவியால், ஒரு பத்திரிகையில் கார்டூனிஸ்ட் ஆக வேலைக்குச் சேரும் சிவகார்த்திகேயன் அவர்கள் குடியிருப்புப் பிரச்னையை வைத்தே கார்ட்டூன் கதை ஒன்றை வரைந்து எழுத ஆரம்பிக்கிறார். அதனால், அவருக்கும் அந்த கட்டடத்தை கட்டிக் கொடுத்த அமைச்சர் மிஷ்கினுக்கும் இடையே மோதல் உருவாகிறது. இதன் பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

80களில் வந்த அதிரடி படங்களின் கதை போல இருந்தாலும், பயந்த குணம் கொண்ட சிவகார்த்திகேயன், அவருக்குக் கேட்கும் அசரீரி குரல் கட்டளைப்படி நடந்து கொள்கிறார் என “கற்பனை” விஷயம் ஒன்றை இணைத்து முதல் பாதியை கலகலப்பாகக் கொண்டு போய் இருக்கிறார் இயக்குநர். இடைவேளைக்குப் பிறகு சிவகார்த்திகேயனின் நாயகத் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து கதையை அப்படியே வழி மாற்றிவிட்டார்.

பயந்த குணம் கொண்டவராகவும், அசரீரி குரல் சொல்வது போல் நடப்பவராகவும் சிவகார்த்திகேயன். இந்தக் கதாபாத்திரத்தில் கொஞ்சம் “அந்நியன்” வாசம் அடித்தாலும் தனக்கான ஒரு ஸ்ரைலில் நகைச்சுவை கலந்து சத்யா என்ற கதாபாத்திரத்தில் சத்தாகவே நடித்திருக்கிறார் சிவகார்த்திகேயன். கற்பனைக்கு எட்டாத ஒரு கதாபாத்திரம், அதற்கு முழு ஈடுபாட்டுடனேயே உயிர் கொடுத்திருக்கிறார் சிவா.

ஒரு பத்திரிகையில் உதவி ஆசிரியராக வேலை பார்ப்பவர் அதிதி. சிவகார்த்திகேயன் குடியிருக்கும் கட்டடம் பற்றிய அனைத்துப் பிரச்னைகளையும் தெரிந்தவர். அதைப் பற்றி அவரது பத்திரிகையில் எழுத முடியவில்லை என்றாலும் ஒரு பத்திரிகையாளராக சிவாவுக்கு வேறு எந்த பெரிய உதவியையும் செய்யாமல் வந்து போகிறார். சிவாவுக்கு வேலை வாங்கித் தருவதில் மட்டும் அவரது தைரியம் வெளிப்படுகிறது. மக்களின் பிரச்னைகளை பார்த்து அவரது கதாபாத்திரம் ஒன்றுமே செய்யாமல் இருப்பது ஆச்சரியம்.

அமைச்சராக மிஷ்கின். கண்களை உருட்டி, மிரட்டி கொஞ்சம் ஓவராகவு நடித்திருக்கிறார். இப்படி எத்தனையோ அரசியல்வாதி கதாபாத்திரங்களைப் பார்த்துவிட்டோம். புதிதாக ஏதோ செய்திருப்பார் என்று எதிர்பார்த்தால் ஏமாற்றமே. அவரின் உதவியாளராக, நண்பராக சுனில். இவரும் ஏதோ செய்யப் போகிறார் என்று பார்த்தால் அதிலும் ஏமாற்றமே.

படத்தின் முழு கலகலப்புக்கும் சொந்தக்காரர் யோகிபாபு. அந்தக் குடியிருப்பில் மேஸ்திரி ஆக வேலைக்குச் சேர்ந்து சிக்கலில் மாட்டிக் கொள்கிறார். அவர் அடிக்கும் சின்னச் சின்ன கருத்துகளாக அமைந்து ரசிக்க வைக்கின்றன.

சிவாவின் அம்மாவாக சரிதா. உணர்ச்சிமய காட்சியில் அவரது அனுபவ நடிப்பில் கண் கலங்க வைக்கிறார். சிவாவின் தங்கையாக மோனிஷா, கட்டட பொறியியலாளராக மதன் மற்ற கதாபாத்திரங்களில் அதிக காட்சிகளில் நடித்திருக்கிறார்கள்.

சிவகார்த்திகேயனுக்குக் கேட்கும் அசரீரி குரலாக விஜய் சேதுபதியின் குரல். படத்தை கதை சொல்லி நகர்த்தி கொண்டு போவது இந்தக் குரல்தான். ஒரு கட்டத்தில் அதுவே போரடித்தும் விடுகிறது.

சிவகார்த்திகேயன் படங்களில் பாடல்கள் எப்போதுமே சுப்பர் ஹிட் ஆகும். இந்தப் படத்தில் பரத் சங்கர் இசையில் அது தவறியுள்ளது. அடுக்கு மாடி குடியிருப்பில்தான் படத்தின் பெரும்பாலான காட்சிகள் நகர்கிறது. ஒளிப்பதிவாளர் விது ஐயன்னாவுக்கு நிறைய வேலை கொடுத்திருக்கிறார் இயக்குநர். இரண்டே முக்கால் மணி நேரப் படம் என்பது நீளம். ஒரு உச்சக்கட்டம் முடிந்த பிறகு, மீண்டும் ஒரு உச்சக்கட்டம் என கொண்டு போகிறார்கள்.

உச்சக்கட்ட காட்சியில் ஊடகங்களோ, பொலிஸோ வேறு யாருமே வராமல் இருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். அந்த குடியிருப்பு பிரச்னையில் அரசாங்கம் என்ன செய்தது, சில காட்சிகளில் வந்து போகும் முதல்வர் என்ன செய்தார், எதிர்க்கட்சிகள் என்ன செய்தது என எதுவுமே இல்லை. ஏழை மக்களின் உயிர் பிரச்னையில் யாருமே தலையிடாமல் இருந்தார்களா என்பது மில்லியன் டொலர் கேள்வி?.

# ஓய்வு வெகுதூரமில்லை!

கடந்த ஆண்டு டிசெம்பரில் நடந்த உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் ஆர்ஜென்ரீனா அணிக்கு தலைமை தாங்கி கிண்ணத்தை வென்று கொடுத்தார் மெஸ்ஸி.

கடந்த ஜூனில் பிரான்ஸின் பி. எஸ். ஜி. கழகத்தில் இருந்து விலகி அமெரிக்காவை சேர்ந்த இண்ரர் மியாமி கிளப்பில் இணைந்தார். மேஜர் லீக் போட்டியில் வருகிற 21ஆம் திகதி நடைபெறும் ஆட்டத்தில் இண்ரர் மியாமி அணிக்காக களமிறங்கவுள்ளார்.

மியாமி அணியில் இணைந்த லியோனல் மெஸ்ஸி, "எனது வயதை கணக்கில் கொண்டால் இன்னும் எத்தனை நாட்கள் ஆர்ஜென்ரீனா அணிக்காக தொடர்ந்து விளையாட முடியும் என்பது தெரியவில்லை. எனது ஓய்வுக்கான காலம் வெகுதொலைவில் இல்லை என்று கருதுகிறேன். எனது ஓய்வுக்கான தருணம் எப்போது வரும் என்பது துல்லியமாக தெரியவில்லை. எல்லாவற்றையும் சாதித்து விட்ட நான் தற்போது ஒவ்வொரு நாளையும் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறேன்" என்றார்.



# இந்தியா அணியின் வெற்றியும் வேதனையான நகைச்சுவையும்!

டொமினிகாவில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி பரிதாபத்துக்குரிய மேற்கிந்தியத் தீவுகள் அணியை இன்னிங்ஸ் மற்றும் 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. ஆட்ட நாயகனாக அறிமுக டெஸ்ட்டிலேயே தேர்வு செய்யப்பட்டார் சத நாயகன் யஷஸ்வி ஜெய்ஸ்வால். இந்தப் போட்டி இந்திய வெற்றியைக் கொண்டாடும் மனநிலையை ஏற்படுத்துவதை விட மே.இ.தீவுகளின் சரிவின் வேதனைகளை அதிகரிக்கச் செய்கிறது.

காலப்போக்கில் பலதரப்பட்ட சக்திகளால் அழிக்கப்பட்டு இன்று உலகக் கிண்ணத்துக்கும் தகுதி பெறாமல் மிகக்கேவலமாக ஒரு டெஸ்ட் போட்டியையும் இழந்துள்ளது. இதில் இந்திய வீரர்களின் பெருமையைக் கொண்டாட எதுவுமில்லை. ஏனெனில் ஐ. சி. சி. வருவாய் சரிவரப் பகிரப்படுவதில்லை. இதனால் ஒவ்வோர் அணியாக அழிந்து வருகின்றது. சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை அடுத்த இடத்தில் இப்போது தென்னாபிரிக்கா கிரிக்கெட் அழிவின் விளிம்பில் உள்ளது.

பங்களாதேஷ் அதன் ரசிகர்களாலும் பாகிஸ்தான் அதன் நீண்ட நெடிய கிரிக்கெட் மரபினாலும் உயிர்ப்புடன் இருந்து வருகின்றன. ஆனால், இவையெல்லாமும் உடைந்து நொறுங்கும் தன்மைக்கு அருகில் உள்ளன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஐ. பி. எல். உள்ளிட்ட தனியார் இருபது - 20 கிரிக்கெட் எனும் பணப்பேய் கிரிக்கெட்டை அழிப்பதோடு சிறந்த கிரிக்கெட் நாடுகளையும் காலி செய்து வருகின்றதன் ஒரு சோகமான நினைவூட்டலே இன்றைய மே.இ.தீவுகள் அணியின் நிலை.

இதில் நடுவர்கள் வேறு கையை வைத்துக் கொண்டு சும்மா இருப்பதில்லை. பரிதாப அணிக்கு 2ஆவது இன்னிங்ஸில் 5 எல். பி. டபிள்யூ. தீர்ப்புகள். இதில் தேஜ்நரைன் சந்தர்போல், ரெய்பர் ஆகியோருக்கு நடுவர் ஆட்டமிழப்பு கொடுத்திருக்க வேண்டிய தில்லை. தேஜ்நரைன் நடுவரால் அவுட். ரெய்ஃபருக்கு லெக்ஸ்டம்பில் மார்ஜினலாக அடிக்கிறது. சில விஷயங்களை நடுவர்கள் கவனமேற்கொண்டால் இத்தகைய கோளாறுகளையும் தவிர்த்திருக்கலாம்.

இதில் ஆட்டம் முடிந்தவுடன் ரோஹித் சர்மா சொன்னதுதான் வேதனையான நகைச்சுவை. "150 ஓட்டங்களில் மே.இ.தீவுகளை அவர்களின் சொந்த மண்ணில் சுருட்டியது 'massive' (மகத்தான) என்று ஏதோ பெரிய விஷயம் போல் சொல்லியிருப் பதே. இந்தியா வெற்றி பெற்று விட்டது என்பதற்காக ஒன்றுமில்லாமல் சக்கையும் சாறுமில்லாத ஒரு அணியை சுருட்டியதைப் பெரிய சாதனையாகச் சொல்லிக் கொள்ளலாமா என்ற கேள்வியை ரோஹித் சர்மா நோக்கி நாம் எழுப்ப வேண்டியது கட்டாயம்.

டோனி இது போன்ற வெற்றியையெல்லாம் பெரிதாக பேச மாட்டார். காரணம் உண்மை நிலை, யதார்த்த நிலை அவருக்குத் தெரியும். அதனால் அணியின் குறைகளை களைய வேண்டும், களத்தடுப்பில் இன்னும் முன்னேற வேண்டும் என்று நிறுத்திக் கொள்வார். விராட் கோலி கூட ஜெய்ஸ்வால், அஸ்வின் என்று பேசி முடித்துக் கொண்டிருப்பார். ஆனால், ரோஹித் சர்மா அவர்களது சொந்த மண்ணில் 150 ஓட்டங்களுக்கு முதல் இன்னிங்சில் அவர்களைச் சுருட்டியதை 'மகத்தான' என்று கூறியது ஒரு வேதனையான நகைச்சுவைதான்.

இன்னொரு நகைச்சுவை வேதனை, போட்டி முடிந்தவுடன் மே.இ.தீவுகளின் அணித்தலைவர் பிராத்வெய்ட் கூறியதுதான்!! "பேசத்தொடங்கும் முன் 'டொமினிகா' போட்டியைக் காண வந்த ரசிகர்களுக்கு நன்றி" என்றாரே பார்க்கலாம். அங்கு எங்கே ரசிகர்கள் கூட்டம் இருந்தது, அங்கொன்றும் இங்கொன்றுமாக 2 பேர், 4 பேர் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்களும் பல நேரங்களில் உறக்கத்திலும் கைபேசியிலுமே கவனமாக இருந்தனர்.

இதுபோன்ற தொடர்களை தவிர்க்க வேண்டும் அல்லது பலவீனமான அணிகளை உயர்த்துவதற்கு ஐ. சி. சி. முதலீடு செய்ய வேண்டும். இல்லையெனில், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற அணிகளின் செல்வாக்குதான் மேலோங்கும், ஏனெனில், நல்ல கிரிக்கெட் ஆட்டத்தை, தரமான கிரிக்கெட் ஆட்டத்தை அவர்கள்தான் ஆடுகிறார்கள்.

இந்திய அணி செல்வாக்கும் செல்வமும் இருந்தும் இப்படிப்பட்ட தொடர்களை ஆடியும் உள்நாட்டில் அணிகளைக் கூப்பிட்டு குழி ஆடுகளங்களை அமைத்து 2-3 நாட்களில் டெஸ்ட் போட்டிகளை முடித்து போலி வெற்றி பெற்று கெக்கலி கொட்டுவதும் கிரிக்கெட்டுக்கு நல்லதல்ல என்பதே உண்மை.





## தாழ்வின்றி உயர்வில்லை

ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டிருந்த அஸ்வின், டொமினிகாவில் மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியில் 5 விக்கெட்கள் வீழ்த்தி, உலக தரவரிசையில் தான் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துவது ஏன் என்பதை நிரூபித்துள்ளார்.

ரவிச்சந்திரன் அஸ்வின் கூறும்போது, "இந்த உலகத்தில் எந்த ஒரு கிரிக்கெட் வீரரோ அல்லது மனிதரோ, தாழ்வுகள் இல்லாமல் உயர்ந்த நிலைக்குச் சென்றதில்லை. உங்களிடம் தாழ்வுகள் இருக்கும் போது, அது உங்களுக்கு இரண்டு விருப்பங்களைத் தருகிறது.

ஒன்று நீங்கள் துக்கப்படுவீர்கள் அல்லது அதைப் பற்றி பேசுவீர்கள். பின்னர் அதைப் பற்றி முறைப்பாடு செய்துவிட்டு அதனுடன் செல்வீர்கள். மற்றொன்று அதிலிருந்து கற்றுக்கொள்வது. நான் எனது தாழ்வுகளிலிருந்து தொடர்ந்து கற்றுக்கொள்கிறேன். சிறந்த தேடல்தான் என்னை எப்போதும் நல்ல நிலையில் வைத்திருக்கிறது" என்றார்.

# கனடா - சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத்தின் ஒன்றுகூடல்

புலம்பெயர் மடல்

குரு அரவிந்தன்



சென்ற ஞாயிற்றுக் கிழமை 10-7-2023 சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத்தின் ஒன்று கூடல் கனடாவின் ஸ்காபரோ நகரில் உள்ள மோணிங்சைட் பூங்காவில் நடைபெற்றது. சண்டிலிப்பாய் மக்களின் நலன் கருதி 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஐக்கிய மன்றம் 21 வருடங்களை நிறைவு செய்திருக்கின்றது. தாயகத்திலும், கனடாவிலும் உள்ள சண்டிலிப்பாய் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு, அதற்கேற்ற அட்டவணைப்படி சேவை நலன் கொண்டு இயங்குகின்றது.

கனடாவில் வசிக்கும் சண்டிலிப்பாய் மக்கள் பிள்ளைகளுடன் குடும்பமாக வந்து ஒன்று கூடியிருந்தனர். பொதுவாக இப்படியான நிகழ்வுகளுக்கு இளந்தலைமுறையினர் வருவதைத் தவிர்ப்பதுண்டு. ஆனால் இங்கே பல இளந்தலைமுறையினரைக் காணக் கூடியதாக இருந்தது. காலை உணவு, மதிய உணவு, சிற்றுண்டி ஆகியன பரிமாறப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்தினரும் ஏதாவது ஒரு உணவை வீட்டிலே தயாரித்துக் கொண்டுவந்திருந்தனர். உறவுகளையும், நண்பர்களையும் சந்தித்து உரையாட முடிந்தது. வந்தவர்கள் எல்லோருக்கும் ஏற்ற வகையில் பலவிதமான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்று பரிசுகளும் கொடுக்கப்பட்டன.

சங்கத்தினால் போர்க்காலத்திலும், அதன்பின் கோவிட்-19 காலத்திலும் ஊர் மக்களின் நன்மைகருதிச் சங்கத்தி னால் பல மருத்துவப் பட்டறைகள் சண்டிலிப்பாயில் ஏற்படுத்தப்பட்டு மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், தமிழ் கலவன் பாடசாலைக்கும் கல்வி சார்ந்த மேலதிக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. கோவிட்காலத்தில் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மானிப்பாய் அரசமருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சண்டிலிப்பாய் அமைந்திருக்கின்றது. சண்டிலிப்பாய் பொதுவாக வயலும் வயல் சூழ்ந்த பகுதிகளையும் கொண்ட மருத நிலமாக இருக்கின்றது. வழுக்கை ஆறும், கூவல் என்று சொல்லப்படுகின்ற தெப்பக்குளமும், இங்குள்ள



கோயில்களும் புராதன வரலாற்றைக் கொண்டவை. கோயில் இல்லா ஊரில் குடியிருக்காதே என்பதற்கிணங்க, மிகப் பழமைவாய்ந்த பல வழிபாட்டுத் தலங்கள், குறிப்பாகக் கண்ணகி அம்மன் ஆலயம் போன்றவை இங்கேதான் இருக்கின்றன. வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல, கல்வி அறிவூட்டும் கல்விக் கோயில்களும் இங்கு இருக்கின்றன. இங்கே உள்ள கல்வளை பிள்ளையார் பற்றித்தான் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் 'கல்வளை அந்தாதி' பாடினார். அங்கணாக்கடவை கண்ணகி அம்மன் கோயிலும், மீனாட்சி அம்மன் கோயிலும் அருகருகே இருக்கின்றன. சீரணி அம்மன் கோயிலையும் சேர்த்தால் மூன்று அம்மன் கோயில்கள் இங்கே இருக்கின்றன.

---




**ஆர். புஸ்பகாந்த், 2வது ஒழுங்கை, தெகிவளை.**

**கேள்வி:** இலங்கை தமிழரசு கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தனை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கடந்த வியாளனன்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே சம்பந்தனின் இல்லம் தேடிச் சென்று சந்தித்த நிலையில் இந்திய தூதரை தொடர்ந்து அமெரிக்க தூதுவரும் சந்தித்திருக்கிறாரே! திடீரென்று இந்தச் சந்திப்புக்கள் ஏன் நடக்கின்றன?

**வியுக்தியார்:** சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அவருக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வீடு, அவர் வாழும் காலம்வரைக்கும் நிரந்தரமாக வழங்கப்பட்ட உடனேயே சம்பந்தன் தனது சென்னை வீட்டை காலி செய்துவிட்டார். அதற்குப் பிறகு அவர் இந்தியாவுக்கு போகவும் இல்லை. போகக் கூடிய நிலையிலும் அவர் இல்லை. அவரைப்பொறுத்த வரை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு வருகின்றதோ இல்லையோ சம்பந்தன் கடைசி வரைக்கும் சமஷ்டியையே தீர்வாகக் கருதினார் என்று வரலாற்றில் எழுதப்பட வேண்டும் என்று நினைக்கிறார் என்று தெரிகின்றது. அதனால்தான் அவர் சமஷ்டிக்காக இந்தியாவை நாடுவது பயனற்றது என்று நினைக்கின்றாரோ தெரியவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை தாங்கள் சம்பந்தனோடு நிற்கிறோம் என்று கட்டிக்கொள்வதன் ஊடாக இலங்கைக்கு சில செய்திகளை சொல்கிறதோ என்னவோ? அமெரிக்காவும் கிட்டத்தட்ட இந்தியாவின் நிலையில்தானே.

**கே. ராம்குமார், பிள்ளையார் கோவிலடி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாகக் கடிதம் அனுப்பியுள்ளனவே.

**வியுக்தியார்:** பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டு இருக்கின்ற கோவணத்தையும் இழந்த கதையாக ஆகிவிடக் கூடாது என்று இந்தக் கட்சிகள் நினைத்திருப்பது நல்லதுதான். சமஷ்டிக் கட்டமைப்புத்தான் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு என்பதை யாரும் சொல்லித் தான் தெரியவேண்டும் என்பதல்ல. ஆனால், அதற்காக அதனை அடைவது பற்றிய எந்த வழிவரைபடமும் இல்லாமல் அதற்காக குரல்கொடுத்துக்கொண்டிருக்க, கிழக்கு மாகாணம் பறிபோனதுபோல வடக்கு மாகாணமும் பறிபோன பின்னர் சமஷ்டி கிடைத்தாலும் அதனால் பயன் இல்லாமல்போய்விடும். இந்த யதார்த்தத்தை இந்த ஆறு கட்சிகளாவது புரிந்துகொண்டிருப்பது சற்று அறுதல் தருகின்றது.

**சிவபாலன் செந்துஜன், கதிரேசு வீதி, வவுனியா.**

**கேள்வி:** இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கான தீர்வாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் இரட்டை நிலைப்பாட்டுடன் உள்ளார் என புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் குற்றஞ்சாட்டியுள்ளாரே?

**வியுக்தியார்:** நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சம்பந்தன் நினைத்திருந்தால் பதின்மூன்றை முழுமையாக நடைமுறைப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவரோ புதிய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கி 'எக்கிய ராஜ்ய'த்தை உருவாக்க தலையால் கிடங்கு கிண்டிய போது, சித்தார்த்தனும்தான் அவருடன் சேர்ந்து கிடங்கு கிண்டினார். 'சாம்' அண்ணை என்ன நினைக்கிறாரோ அதற்கு எதிராக வாய்திறக்கவும் சித்தார்த்தன் அப்போது விரும்பவில்லை. இப்போது சம்பந்தன் நிலைப்பாடு பற்றி அவர் கூறுகிறார் என்றால் அது சரியாகத்தான் இருக்கும். ஏனெனில் சம்பந்தனை நன்றாக தெரிந்த ஒருசிலரில் அவரும் ஒருவர் தானே.

**ப. அபிஷேக்குமார், எல்லை வீதி, மட்டக்களப்பு.**

**கேள்வி:** உக்ரேன் மீது ரஷ்யா தொடர்ந்து கடும் தாக்குதல் நடத்திவரும் நிலையில், போரில் உக்ரேனுக்கு உதவ, கொத்துக் குண்டுகளை அனுப்பிவைக்க அமெரிக்கா முடிவெடுத்திருக்கிறதாமே. கொத்துக் குண்டுகளை எந்தக் கட்டத்திலும் பாவிக்கக்கூடாது என்று சர்வதேச ரீதியாக தடையையும் விதித்துவிட்டு இப்போது தாமே அதனை மீறும் வகையில் அமெரிக்கா நடந்துகொள்வது சரியானதா?

**வியுக்தியார்:** அமெரிக்கா என்ன நினைக்கிறதோ அது தானே உலக சட்டம் ஆகிவிடுகின்றது. ரஷ்யாவை எதிர்கொள்ள முடியாது திண்டாடிவரும் உக்ரேனை காப்பாற்ற எந்தக் கட்டத்திற்கும் செல்ல அமெரிக்கா தயாராக இருக்கின்றது என்பதை சொல்லியிருக்கின்றது அவ்வளவுதான். ஆக, இலங்கை அரசு இறுதிக்கட்ட யுத்தத்தில் கொத்துக்குண்டுகளை பயன்படுத்தியது என்று நாம் இனி மேல் அமெரிக்காவிடம் முறையிட முடியாது என்பதுதான் நமக்கு அமெரிக்கா சொல்லியிருக்கின்ற செய்தி.

**அ. சிவகணேஸ், சங்கரத்தை, வட்டுக்கோட்டை.**

**கேள்வி:** நீதித்துறையை அவமதிக்கும் வகையில், தனது பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி கருத்துக்களை வெளியிட்ட, பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுக்கு எதிராக வடக்கு கிழக்கில் சட்டத்தரணிகள் தொடர்ந்து கண்டனங்களை பதிவுசெய்து வருகின்றனரே. இனியாவது சரத் வீரசேகர போன்றவர்கள் தமது இனவாத பேச்சுக்களை நிறுத்துவார்களா?

**வியுக்தியார்:** காலத்திற்கு காலம் இவரைப் போன்ற இனவாதிகள் தொடர்ந்து வந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களைப் போன்றவர்களை கண்டுகொள்ளாமல் விடுவதுதான் நல்லது. இவ்வாறு தமிழர்கள் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்களை நடாத்தினால் அதனை அவர்கள் விரும்பவே செய்வார்கள். சொல்லப்போனால் எங்கள் போராட்டங்கள் அவர்களுக்கு ஏதோ ஒருவகையில் உதவியே செய்கின்றன. அவர்களின் வாக்குவங்கியை அப்படியே வைத்திருக்க இவை உதவுகின்றன. அதற்காக நாமும் அதனை கண்டிக்காமல் இருக்கமுடியாது தான்.

# தூக்கிய திருவடி



கே.எஸ்.சுதாகர்

ஜெயந்தி காலை ஆறு மணிக்கெல்லாம் வேலைக்குக் கிளம்பிவிடுவாள். வீட்டில் உள்ளவர்களுக்கு 'பாய்' சொல்லிவிட்டு, கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள். மெல்லிய இருட்டு. கதவைப் பூட்டிவிட்டு காரில் ஏறப் போனவள் பதறியடித்துக் கொண்டு மீண்டும் வீட்டிற்குள் ஓடிவந்தாள்.

"காரைக் காணவில்லை. ஓடியாங்கோ எல்லாரும்"

சில மாதங்களாக இங்கே விநோதமான கார்த் திருட்டுகள் நடக்கின்றன. நம்பர்பிளேற் திருட்டு, காருக்கு கல்லுகளை அடுக்கிவிட்டு நான்கு ரயர்களையும் கழட்டிக் கொண்டு போதல், பெற்றோலை உறுஞ்சி எடுத்தல் போலப் பல வகை.

"பதறாதையப்பா. முதலிலை வேலை செய்யிற இடத்துக்கு இண்டைக்கு வேலைக்கு வரேலாது எண்டு சொல்லும். பிறகு பொலிசுக்கு அடிப்பம்" என்றான் கணவன் குமரேசன்.

பிள்ளைகள் வீட்டில் இடி விழுந்தாலும் எழும்ப மாட்டார்கள்.

பொலிசுக்குச் சொன்னார்கள். அவர்கள் விபரங்களைக் கேட்டுப் பதிந்து கொண்டார்கள். கிடைத்தால் அறிவிப்போம் என்றார்கள். அவர்களுக்கு இவற்றைவிட நாட்டில் வேறு எக்கச்சகமான சங்கதிகள் இருக்கு.

"ஆரோ தறுதலையள் விளையாட்டுக்குச் செய்திருக்குதுகள். உந்தக் காரைக் கொண்டுபோய் என்ன செய்யப் போறான்கள். பெற்றோல் முடிய எங்கையேன் விட்டிட்டுப் போவான்கள். காரும் புதுசில்லைத்தேனே!" என்றான் குமரேசன்.

"புதுக்கார் இல்லையெண்டாலும் என்ரை ராசியான கார். ஒருநாளும் எனக்குப் பிரச்சினை தந்தது கிடையாது. இஞ்சை வந்து என்ரை உழைப்பிலை வாங்கின முதல் கார்" பெருமிதம் பேசினாள் ஜெயந்தி.

இன்சூரன்ஸ் கொம்பனிக்கு ரெலிபோன் செய்து விபரத்தை அறிவித்தார்கள்.

"இரண்டு கிழமைகள் பொறுத்திருங்கள். அதன் பின்னர்தான் ஏதாவது செய்ய முடியும்" அவர்கள் சொன்னார்கள்.

காரை ஜெயந்தி ஃபுல் இன்சூரன்ஸ் செய்திருந்தாள். ஏறக்குறைய ஒரு இலட்சம் கிலோமீற்றர்கள் ஓடிவிட்டது. கார் கிடைக்காவிட்டால் பத்தாயிரம் டொலர்கள் கிடைக்கும். குமரேசன் கார் கிடைக்கக் கூடாது என விரும்பினான். ஜெயந்தி கார் வேண்டும் என தினமும் கடவுளைப் பிரார்த்தித்தாள்.

பலன் கிட்டவில்லை. இரண்டு வாரங்கள் கழிந்த நிலையில் பத்தாயிரம் டொலர்கள் கிடைத்தன. அத்துடன் இன்சூரன்ஸ் நிறுவனத்தினர் அந்தக் காரின் கணக்கை மூடிவிட்டார்கள்.

கணக்கை மூடி மூன்றாம் நாள், கன்பரா நகரத்தில் கார் கண்டுபிடிக்கப் பட்டதாக பொலிஸார் தகவல் சொன்னார்கள்.

அது அவர்களுக்கு புதிய தலையிடியைக் கொடுத்தது. இனி என்ன செய்யலாம்? மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டார்கள்.

"காரின் பெறுமதி உண்மையிலை இப்ப பத்தாயிரம் வராதப்பா! உனக்கு லக். இத்தோடை உந்தக் காரைக் கை கழுவி விடு ஜெயந்தி" என்றான் குமரேசன்.

"முடியாது. எனக்கு அந்தக் கார் தான் வேண்டும்" பிடிவாதம் கொண்டாள் ஜெயந்தி.

இன்சூரன்ஸ் கொம்பனியுடன் தொடர்பு கொண்டபோது, "கணக்கை மூடியாகிவிட்டது இனி ஒன்றும் செய்யமுடியாது. அக்ஷிடென்ற் கார்கள் ஏலம் விடப்படும் கொம்பனிக்கு நாங்கள் உங்கள் காரையும் அனுப்புவோம். விருப்பமானால் அவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்" என்று சொல்லி அவர் களின் முகவரி தொலைபேசி எண்களைக் கொடுத்தார்கள்.

ஏலம் விடும் கொம்பனியுடன் தொடர்பு கொண்டாள் ஜெயந்தி.

"எனக்கு என்னுடைய கார் வேண்டும். அது என் ராசியான கார் எவ்வளவு என்றாலும் பரவாயில்லை" ஜெயந்தி சொல்ல அவர்களுக்கு சிரிப்பு வந்துவிட் டது.

"அப்படி ஒன்றும் செய்யமுடியாது. உங்களுடைய காரும் அக்ஷிடென்ற் பட்ட கார்களுடன் ஒன்றாக ஏலத்திற்கு வரும். ஏலம் போட்டு எடுங்கள். பொதுவாக ஆயிரம் இரண்டாயிரம் டொலர்களுக்குள்தான் வரும்."

ஆயிரம் இரண்டாயிரம் டொலர்களுக்குள் தான் வரும் என்ற செய்தி ஜெயந்திக்குப் பாலை வார்த்தது. ஏற்கனவே பத்தாயிரம் பெற்றுவிட்டாள். உஷாரானாள். சொந்தக் காரையே ஏலத்தில் எடுக்க வேண்டிய தலைவிதி.

குமரேசன் எது சொன்னாலும் பிரச்சனை தலைவிரித்தாடும் எனப் பயந்து ஜெயந்தியின் செயல்கள் எல்லாத்துக்கும் ஆமாப் போட்டான்.

ஏலம் நடைபெறும் நாள் வந்தது. காரை எப்படியாயினும் வாங்கியே ஆக வேண்டும் என்ற தோரணையில் குமரேசனும் ஜெயந்தியும் புகையிரதம் மூலம் வந்திருந்தார்கள். ஏலத்தில் விடப்படும் வாகனங்களைப் பார்வையிட ஒரு மணி நேரம் ஒதுக்கியிருந்தார்கள். ஜெயந்தியின் காரின் முன்புறம் சிறிது சேதமடைந்திருந்தது.

எத்தனையாவது காராக இவர்கள் கார் வரும் என்பது தெரியாததால் ஆரம்பம் முதலே காத்திருந்தார்கள். கார்கள் ஒவ்வொன்றாக ஏலத்திற்கு வரத் தொடங்கின. ஒவ்வொரு வாகனமும் குற்றியிரும் குலையுயிருமாக இன்னொரு வாகனத்தில் ஏறி வந்து கொண்டிருந்தன. வாகனங்களைப் பார்க்கப் பார்க்க பகீரென்று இருந்தது ஜெயந்திக்கு. குமரேசன் கண்ணை மூடி ஒண்றரைக் கண்ணால் பார்த்தான். எந்தக் காரும் 1500 டொலர்களுக்கு மேல் விலை போகவில்லை.

ஜெயந்தியின் கார் வந்ததும், "ஃபைவ் ஹன்றட் டொலர்ஸ்" என்று கத்தியபடியே கையைத் தூக்கினாள் ஜெயந்தி. ஏலம் தொடங்கி இரண்டு மணித்தியாலங்கள் அப்படியொரு பெண்மணி அங்கே நிற்கின்றாள் என்பதை அறிந்திராத எல்லோரும் அவளை வினோதமாகப் பார்த்தார்கள். அதன்பின்னர் தூக்கிய கையைக் கீழ் இறக்கவில்லை ஜெயந்தி. ஒரு சீனாக்காரன் 2000 டொலர் வரையும் ஏற்றிவிட்டு நாக்கைத் தொங்கப் போட்டான். ஜெயந்திக்கும் குமரேசனுக்கும் ஒரே சந்தோசம்.

"டேவிட் - நாலாயிரம் டொலர்கள். டேவிட் நாலாயிரம் டொலர்கள்" எனச் சத்தமிட்டான் ஏலம் கூறுபவன். ஜெயந்தி, யார் அந்த டேவிட் என நாலாபுறமும் தேடினாள். அப்படி ஒருவரையும் அங்கு காணவில்லை. எல்லாரும் அங்கே ஒரு மூலையில், இதுவரையும் தேடுவாரற்றுக் கிடந்த கொம்பியூட்டர் ஒன்றின் ஸ்கிரீனைப் பார்த்தபடி இருந்தார்கள்.

அப்போதுதான் இன்ரனெற் மூலமும் ஏலம் கேட்கலாம் என்பதை ஜெயந்தியும் குமரேசனும் அறிந்து கொண்டார்கள். ஜெயந்தி விடவில்லை. அவனுடன் போட்டி போட்டாள். எல்லோரும் ஜெயந்தியைப் பார்த்தபடி இருந்தார்கள். அந்தப் பார்வை அவளுக்கு நட்டுக் கழன்றுவிட்டது என்பதான பார்வை.

கடைசியில் ஆறாயிரம் டொலர்கள் வரை ஏற்றிவிட்டு டேவிட் ஒழிந்து கொண்டான். ஜெயந்தி ஆறாயிரத்து நூறு டொலர்கள் கொடுத்து காரைப் பெற்றுக் கொண்டாள்.

"நீர் அண்டைக்கு ஒக்சன் நடத்துறவனோடை கதைக்கேக்கை, எவ்வளவு எண்டாலும் பரவாயில்லை. எனக்குக் கார்தான் வேணும் எண்டு சொன்னீர். அதுதான் அவன் விளையாடி இருக்கிறான். தன்ரை நண்பர் ஒருத்தனைக் கொண்டு இன்ரனெற் மூலம் ஏலத்தைக் கூட்டிவிச்சிருக்கிறான்."

"அவன் கூட்டட்டும். எனக்குத்தானே தெரியும் என்ரை காரின்ரை பெறுமதி. இன்சூரன்ஸ்காரன் எவ்வளவு தந்தவன் எண்டதை மறந்திட்டியளே! ஒருநாளும் என்ரை கார் பிரச்சினை தந்ததில்லை. தெரியும் தானே!"

"தூக்கிய திருவடி என்று கேள்விப் பட்டிருக்கிறன். இண்டைக்குத்தான் தூக்கிய திருக்கையைப் பார்த் திருக்கிறன்" என்று நக்கலடித்தான் குமரேசன். ●

# லித்துவேனியாவில் நேட்டோ உச்சி மாநாடு! உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



லித்துவேனியாவில் நேட்டோ நாடுகள் உச்சி மாநாட்டில் உக்ரைன் பிரச்சி னைக்கு தீர்வு ஏற்படுமா என பலரும் அங்கலாய்த்துள்ளனர்.

நேட்டோ தலைவர்கள் இக் கூட்டணியில் மாற்றங்களை கொண்டு வருவதற்கான முக்கிய முடிவுகளை எடுக்க உள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

நேட்டோ கூட்டமைப்பின் மாநாடு தொடங்கும் முன்னர் பேசிய நேட்டோவின் பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க், நேட்டோ கூட்டணியை மாற்றுவதற்கும் அதன் குடிமக்களைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.

இந்த புதிய முடிவுகள், ஒரு புதிய மூலோபாயக் கருத்தை உள்ளடக்கியிருக்கும், அதாவது அதிக போட்டி மற்றும் ஆபத்தான உலகில் நேட்டோவை எவ்வாறு எதிர்காலத்தில் கொண்டு செல்வது என்பதற்கான வரைபடமாக இருக்கும் என்றார்.

உக்ரேனிய போர் முனையில் தோல்வியைத் தடுக்க, ரஷ்யாவுக்கு எதிராக நேட்டோ துருப்புக்களை நேரடியாக ஈடுபடுத்த வேண்டுமென்ற பின்னணியில் நேட்டோ உச்சி மாநாடு நடக்க உள்ளது.

### நேட்டோ மேலும் விரிவாக்கம்

'நேட்டோ' (NATO) வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு, சோவியத் யூனியனுக்கு எதிராக அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே பனிப்போர் நடைபெற்ற காலத்தில் அமெரிக்க ஆதரவு ஐரோப்பிய நாடுகளின் கூட்டு பாதுகாப்பு அமைப்பாக உருவாக்கப்பட்டது .

ஆரம்பத்தில் நேட்டோ 1949ல் உருவாக்கப்பட்டபோது 12 நாடுகள் உறுப்பு நாடுகளாக இருந்தன. தற்போது 31 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. சோவியத் யூனியன் வீழ்ந்து, பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னர், 14 புதிய நாடுகள் உறுப்பு நாடுகளாக நேட்டோவில் இணைக்கப்பட்டன.

இதன் பின் நேட்டோ கிழக்கு ஐரோப்பா நோக்கி விரிவடைந்து வந்ததுடன் ரஷ்யாவின் எதிர்ப்பை சம்பாதித்தது. யுகோஸ்லாவியா, ஆப்கானிஸ்தான், லிபியா மற்றும் பல நாடுகளில் நடைபெற்ற யுத்தங்களில் நேட்டோ தன்னை ஈடுபடுத்திக்கொண்டது. ஈராக்கில் அமெரிக்கா தலைமையில் நடைபெற்ற யுத்தத்திலும் நேட்டோ பங்காளியாக இருந்துள்ளது.

சோவியத் யூனியன் வீழ்ந்த பிறகு, அதன் தலைமையிலான வார்சா (WARSAW) ஒப்பந்தம் முடிவுக்கு வந்து விட்டது. ஆனால் நேட்டோ கலைக்கப்படுவதற்கு பதிலாக மேலும் விரிவாக்கம் அடைந்து வருகிறது.

இதே வேளை ஆக்கஸ் (AUKUS) எனும் ஆஸ்திரேலியா, பிரிட்டன் அமெரிக்கா ராணுவக் கூட்டணி , குவாட் (QUAD) என்ற அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா அடங்கிய ராணுவ கூட்டணியும் அமைக்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதும் 800க்கும் மேற்பட்ட இடங்களில் அமெரிக்க ராணுவ முகாம்கள் உள்ளன.

### அமெரிக்கா ரஷ்யாவுடன் நேரடி போர்

கடந்த சில வருடங்களாக உக்ரேனை நேட்டோவில் நிரந்தரமாக இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. நேட்டோவின் வில்னியஸ் உச்சி மாநாடு, ரஷ்யாவுக்கு எதிரான அதன் போரை விரிவாக்க ஒப்புதல் வழங்கும். இது நடந்தால், உக்ரேன் நேட்டோவின் ஷரத்து 5 இன் கீழ் வந்து விட்டது என்பதே இதன் அர்த்தமாக இருக்கும். இதன் விளைவாக, அமெரிக்கா ரஷ்யாவுடன் போரில் இறங்க அந்த உடன்படிக்கையின்படி கடமைப்பட்டுள்ளது என்பதே அதன் அர்த்தமாக இருக்கும்.






இந்த ஆண்டு நேட்டோ உச்சிமாநாட்டில் பின்லாந்து மற்றும் ஸ்வீடன் நாடுகளை நேட்டோ உறுப்பினராக சேர்ப்பது மற்றொரு முக்கிய அம்சமாக உள்ளது.

மறுபுறம், நேட்டோ உறுப்புரிமையுடன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான முனைப்பில் உக்ரைன் லட்சியமாக கொண்டுள்ளது.

இந்த நேட்டோ மாநாட்டிலும் உக்ரைன் பற்றி தான் ஆலோசிக்கப்படும் என தெரிகிறது.

ஆனாலும், நேட்டோவை கிழக்கு வரை விரிவாக்கம் செய்யும் வகையில் படைகளின் எண்ணிக்கையை 3 லட்சமாக உயர்த்த கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்று கூறியுள்ளமை கவனத்தை ஈர்த்துள்ளது. இதுதான் ரஷ்யாவை மேலும் சீண்டும் விஷயமாக பார்க்கப்படுகிறது. இதன் எதிரொலியாக உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல் மேலும் உக்கிரமடையும் நிலை உருவாகியுள்ளது.

லித்துவேனியா தலைநகரான வில்னிசில் நடைபெறும் நேட்டோ நாடுகளின் உச்சி மாநாடு உக்ரைன் - ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டு வருமா என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

உக்ரைன், ரஷ்யா நாடுகளுக்கான போர் தொடங்கி 500 நாட்களை கடந்துவிட்ட நிலையில், இந்த போர் உலகம் முழுவதும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் நேட்டோ நாடுகளின் உச்சி மாநாடு உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

### ஸ்வீடன் நேட்டோவில் இணைவு

இந்த உச்சி மாநாட்டில் உக்ரைன் மற்றும் ஸ்வீடன் நாடுகளை நேட்டோவில் இணைப்பது குறித்த விவகாரம் முக்கிய விவாதப் பொருளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே போல உக்ரைனுக்கு க்ளஸ்டர் வகை வெடிகுண்டுகள் உள்ளிட்ட ஆபத்தான ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது குறித்தும் அதை பயன்படுத்த உக்ரைன் இசைவு தெரிவித்துள்ளது குறித்தும் விவாதிக்கப்படும் என தெரிகிறது.

ஆண்டு கணக்கில் உக்ரைன், ரஷ்ய போர் நீடிப்பது பொருளாதார ரீதியில் அனைத்து உலக நாடுகளுக்கும் நல்லதல்ல என வல்லுநர்கள் எச்சரித்துள்ள நிலையில், நேட்டோ உச்சி மாநாடு போரை முடிவுக்கு கொண்டு வருமா அல்லது போரை மேலும் தீவிரமாக்குமா என்பது குறித்து உலக நாடுகள் கூர்ந்து கவனித்து வருகின்றன.

எதிர்காலத்தில் உக்ரைனை நேட்டோவில் இணைப்பது பற்றி இக்கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 31 நேட்டோ உறுப்பு நாடுகளும் உக்ரைனுக்கு தங்கள் ஆதரவை வழங்கவுள்ளன.

ரஷ்யாவுடனான யுத்தம் முடிவுற்றதும் நேட்டோவில் உக்ரைன் இணையலாம் என்ற அறிவிப்பை எதிர்பார்ப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஸ்வீடனை நேட்டோவில் இணைப்பதற்கு துருக்கி தனது ஆதரவை வெளியிட்டுள்ளது. நீண்டகாலமாகவே குர்தீஷ் போராளிகளை ஆதரிப்பதாக கூறி நேட்டோவில் இணைய விடாமல் ஸ்வீடனுக்கு துருக்கி ஆதரவு வழங்கவில்லை. எனவே, துருக்கியின் பாதுகாப்பு குறித்து தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தைகளை அடுத்து ஸ்வீடனை ஆதரிக்க துருக்கி முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

●



# அருணா சாயிராம்: ஒரு மந்திர வசியம்!

## அற்புத ரசம் பெருக்கி ஆட்கொளும் ஓர் இசைப் பாங்கு

மாலி

அருணா சாயிராம், கர்நாடக இசை உலகில் இன்று முன்னணியில் விளங்கும் கலைஞர்களில் ஒருவர். கச்சேரிகளில் பெருந்திரளான ரசிகர் கூட்டத்தை ஈர்ப்பவர். சென்னை இசை விழாக்களிலும்சரி, மற்றும் இடங்களிலும்சரி, இவரது கச்சேரிகளில் கூட்டம் நிறைகிறது. அப்படி ஒரு மந்திர வசியத்தை இவரது இசை பெற்றிருக்கிறது.

1980களில் இத்தகைய ஒரு கிராக்கியை - செல்வாக்கை - புகழை மகாராஜபுரம் சந்தானம் பெற்றுத் திகழ்ந்தார். எந்த கலைஞருமே பெற்றிராத பெருந்தொகை சன்மானத்தையும் பெற்றார்.



சந்தானத்தின் இசை பெற்ற அந்த உன்னதம், சங்கீத உலகில் வரவேற்புப் பெற்றது. கர்நாடக இசையின் உயர்வை அது துல்லியப்படுத்துவதாகியது. ஆனால், அருணா சாயிராம் பெற்றுள்ள இந்தப் பிரபல்யம், கர்நாடக இசை உலகில் அப்படி ஓர் அங்கீகாரத்தை முற்றிலும் பெறவில்லை.

கர்நாடக சங்கீதத்தில் மிகச் சிறப்புவாய்ந்த வீணை தனம்மாள் பாணி சங்கீதம் அவருடையது, அதில் தேர்ந்தவர். அந்தப் பாணியில் மிகப் பெரும் கீர்த்தியும் மதிப்பும் பெற்ற, தனம்மாளின் பேர்த்திகளான பிருந்தா - முக்தா சகோதரிகளில், பிருந்தாவின் சிஷ்யை.

கர்நாடக இசையின் ஜீவாதாரமான அதி முக்கிய வாக்கேயகாரர்களின் பிரபல்யமானவையும், அரிதானவையுமான ஓர் 'ஆயிரம்' கீர்த்தனைகளின் 'சொந்தக்காரர்கள்' பிருந்தா - முக்தா. கமகங்களில் முத்திரை பதித்து, ஆன்மாவைத் தொட்டுவிடுகின்ற பாவபூர்வமான இசை அவர்களுடையது.

அந்த பாணியில் வந்தவர்தான் அருணா சாயிராம், அப்படியேதான் பாடியும்வந்தார்.

சுருதி சுத்தம், கமகங்கள், விஸ்தாரமான இராக ஆலாபனை - இவையெல்லாம் அருணா சாயிராமுக்கு சிறப்பானவை. ஆனால், அவரின் இந்த பாணி மெல்ல மெல்ல மாறிற்று. அவர் தனக்கென்று ஒரு பாணியில் பாடுகிறார், கூட்டம் அலைமோதுகிறது. ஆனால், 'ஒரு கூட்டம்' இதனைப் பெரிதும் வரவேற்கவில்லை.

பிருந்தா பாணியில் இவர் பாடிய காலத்தில் கூட்டமில்லை. ஆனால், 'ஒரு கூட்டம்' அதை உயர்வோடு ரசித்தது. ஆக, அருணா சாயிராம் விரும்பும் 'கூட்டம்' எது?

கர்நாடக இசையில் இன்னொரு சிறப்புமிக்க ஆலத்தூர் சகோதரர்களின் சிஷ்யை இவரது தாயார். தாயாரிடம்தான் ஆரம்பத்தில் பயிற்சிபெற்றவர்.

அருணா சாயிராம் யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக, அண்மையில் கம்பன் கழகத்து இசை விழா இறுதி நாளில் பாடினார்.

இந்திய மத்திய அரசின் 'பத்மஸ்ரீ' விருதைப் பெற்ற 2009இல் அவர் லண்டன் வந்திருந்த போது, 'நாழிகை' சஞ்சிகைக் காக அவருடன் நிகழ்த்திய செவ்வியி லிருந்து சிலவற்றை இச் சந்தர்ப்பத்தில் பகிர்ந்துகொள்ளத் தோற்றுகிறது.

ஆலத்தூர் பாணி மிகுந்த நேர்த்தியான பாணி. ஒரு வர்ணத்தை எடுத்தால், நான்கு வெவ்வேறு காலங்களில் பாடவேண்டும். மிகவும் கடினமான பயிற்சி.

பிருந்தாம்மா சங்கீதம் வேறுபட்டது. பிருந்தாம்மா 'கலைஞர்களின் கலைஞர்'. மிக உயர்வான சங்கீதம் அவருடையது. சங்கீதத்தின் நுணுக்கங்களைத் தெரிந்தவர்கள் அவரது இசையை முழுமையாக - மிகவும் அநுபவித்து ரசிக்கமுடியும். விளம்ப காலத்தில், தனித்த ஒரு சிறப்பான இசை அது. ஆயிரக் கணக்கில் ரசிகர்கள் அநுபவித்து ரசிக்கக்கூடியது அல்ல.

இப்படி, ஓர் அதீத சாஸ்திரீய பாணியில் வலுப்பெற்ற எனது அஸ்தி வாரம், நான் என்னை வெளிப்படுத்த வைக்கும் ஓர் ஆற்றலை - வீச்சை எனக்கு இப்போது அளிக்கிறது. எனக்கென்றொரு பாணியில் இப்போது நான் பாடுகிறேன்.

'எப்போதுமே தன்னை அப்படியே பிரதிபலிப்பதாக இருக்கக்கூடாது' என்பதை, எனது குருவே கூறுவார். ஆனால், 'அதற்கு ஒரு காலம் இருக்கிறது' என்றும் சொல்வார்.

பல ஆண்டு அநுபவத்தில் ஏற்பட்ட மனப் பக்குவத்தில் எனது மன வெளிப்பாட்டில் ஒரு வழிமுறையை, அவர் விரும்பிய விதத்தில் நான் ஏற்படுத்தினேன்.

பிருந்தாம்மா பாணிக்கு அப்பால், என்னுடைய சொந்த உணர்வில் நான் ஆர்வம் கொண்ட - என்னால் வெளிப்படுத்தக்கூடிய சிறப்பான தன்மைகள் - அம்சங்கள் என்ன என்பதை யோசித்தேன்.

ஊத்துக்காடு வேங்கடசுப்பையரின் கிருதிகள் எனக்கு நன்கு பாடமாக இருந்தன. பிருந்தாம்மா தவிர, நீடாமங்கலம் கிருஷ்ணமூர்த்தி பாகவதரும் எங்கள் வீட்டுக்கு வந்து எனக்கு பாடம் சொல்லிக்கொடுத்தார். எங்கள் வீட்டுக்கு எம். எஸ். சுப்புலக்ஷ்மி, மதுரை மணி ஐயர், அரியக்குடி இராமானுஜ ஐயங்கார், பாலமுரளி கிருஷ்ணா, ரி. ஆர். மகாலிங்கம், பாலசரஸ்வதி, குலாம் அலி கான் என்று, எல்லாக் கலைஞர்களுமே வந்து தங்கிப் பழகியதில், சின்ன வயதிலிருந்தே இவர்கள் எல்லோருடனும் கூடிப் பழகுகின்ற அரிதான ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இது, ஒவ்வொரு கலையம்சத்தின் உயர்வையும் புரிந்துகொள்ளும் ஒரு பரந்த மனப்பாங்கை எனக்குத் தந்தது.

அந்தவிதத்தில், ஊத்துக்காடு வேங்கட சுப்பையரின் மரபில் வந்தவரான நீடாமங்கலம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர், ஊத்துக்காடு வேங்கடசுப்பையருடைய பாடாந்தரங்களைக் கற்பித்திருந்ததில், அதில் எனக்கு ஓர் ஆவல் ஏற்பட்டது. எனவே, கச்சேரிகளில் அந்த உருப்படிகளைச் சேர்த்தேன். அப்படி அமைந்ததுதான் காளிங்க நர்த்தனம் தில்லானா. அது, ரசிகர்களிடையே பெரும் வரவேற்பையும் எதிர்பார்ப்பையும் பெற்று, ஒரு பிணைப்பை ஏற்படுத்தியது. அபங்கங்களும் அப்படியே. மும்பையில் பிறந்து வளர்ந்ததில் மராட்டி அபங்கங்கள் எனக்கு பரிச்சயமாயின. அவற்றில் ஒன்றைக் கச்சேரிகளில் பாடியபோது ரசிகர்கள் ரசித்தார்கள் - விரும்பினார்கள். சிறு வயதிலிருந்தே ஏராளமான பஜனை சம்பிரதாயங்களுடன் எனக்கு பரிச்சயம் இருந்தது. அப்படி, அவற்றில் சிலவற்றை இடையிடையே பாடினேன். அவ்வேளையில், நாம் வழக்கமாகக் கேட்கும் கச்சேரி அமைப்பிலிருந்து ஒரு முழுமையான மாற்றம் அதில் ஏற்பட்டது.

இடையிடையே வித்தியாசமான விதத்தில் இவற்றைக் கேட்க, ரசிகர்களுக்கு அவை ஒரு புத்துணர்வை ஏற்படுத்தின. ஆஹா, எப்படி இருக்கிறது இது என்று, ஓர் அற்புத ரசம் அவர்களுக்கு உண்டாகிவிடுகிறது.

**ஆக, அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் வகுத்து, தொடர்ந்து பேணப்படு கின்ற கச்சேரி அமைப்பு முறையில் ஒரு மாற்றத்தை நீங்கள் விளைகிறீர்கள்?**

எனக்கு என்ன படுகிறதோ அதை நான் வெளிப்படுத்துகிறேன், அவ்வளவுதான். அவர்கள் எப்படிப் பாடினார்கள், நான் எங்கே வேறுபடுகிறேன் என்றெல்லாம் நான் பார்க்கவில்லை. சங்கீதத்தை நான் அப்படிப் பார்க்கவில்லை.

நான் சிலவற்றில் ஆவல்கொண்டிருக்கிறேன். அவற்றை எப்படி எனது ரசிகர்களிடத்தில் கொணரலாம் என்றே யோசித்தேன். என்னுடைய சங்கீத ரசனை வித்தியாசமான ரசிகர் கூட்டத்தை எட்ட முடியும். ஆனால், அதற்காக சங்கீதத்தின் சாஸ்திரீய தன்மையை நான் செயலிழக்கச் செய்துவிடவில்லை.

**பிருந்தா சங்கீதத்தைக் கேட்கமுடியவில்லையே என்ற ஆதங்கம் ஏழலாம் தானே?**

நான் நிறைய கச்சேரிகள் பாடுகிறேன். சில கச்சேரிகள் முற்றிலும் பிருந்தாம்மா பாணியிலேயே பாடுவேன். சில கச்சேரிகள் பதம், ஜாவளி மட்டுமே. இப்படி, சிறப்புக் கச்சேரிகளை நான் அடிக்கடி பாடுகிறேன். அந்தப் பாணி என்னிடம் இன்னமும் இருக்கிறது. அதை நான் இழந்துவிடவில்லை என்பதை ரசிகர்களுக்கு நான் உணர்த்தியே வருகிறேன்.

விளம்ப காலத்தில் (slow tempo) இராகத்தில் மூழ்கி, மிக ஆழ்ந்த உணர்வுகளுடன் பாடும்போது நான் பிருந்தாம்மா பாணியையே வெளிப்படுத்துகிறேன். ஒரு தியாகராஜர் கீர்த்தனத்தில், ஓர் அபங்கத்தில் இதையே நான் வெளிக்கொணர்கிறேன். அவரால்தான் (பிருந்தாம்மா) என்னால் அது முடிகிறது. அவருடைய சங்கீதத்தை நான் ரசிகர்களுக்கு எனது வழியில் பிரதிபலிக்கிறேன். என்மீதுள்ள அவரின் செல்வாக்கை விலக்கிவிட்டு, என்னால் இதனைப் புரியமுடியாது.

## "விமர்சனத்தால் வார்த்தெடுக்கப்பட்ட ஒரு கலைஞர் நான்!"

அதை நான் எப்போதும் உணர்வேன். அது என் ஆத்மாவில் நிறைந்திருக்கிறது.

**ரசிகர்கள் விரும்புகிறார்கள் என்பதற்காக என்றில்லாமல், ரசிகர்களின் ரசனையை மேம்படுத்துகின்ற பொறுப்பும் கலைஞர்களுடையதுதானே?**

நிச்சயமாக. இதில் இரண்டும் உண்டு. சங்கீதத்தின் உயர்வை, பிருந்தாம்மாவின் சங்கீதத்தை பத்து, இருபது பேர் கேட்டால் போதாதே! ஆயிரம் பேர் அதனைக் கேட்கவேண்டாவா?

**சிரித்த முகத்தோடு பாடுவீர்கள், சரி. பாடும்போது நீங்கள் காண்பிக்கும் அபிநயம் போன்ற கையசைவுகள், பாவங்கள் எப்படியான வரவேற்பைப் பெறுகின்றன? பொதுவாக, இதை ஏற்றுக்கொள்ளாதவர்களும் இருப்பார்கள் அல்லவா?**

பொது வாழ்வு என்று வந்தால் எல்லாவற்றையும் எதிர்கொள்ளத்தானே வேண்டும்? எல்லோரையுமே திருப்திப்படுத்திவிட முடியாது. நூறுபேர் பாராட்டினால், பத்துப்பேர் விமர்சிப்பதற்கும் இருப்பார்கள். இதற்கு ஆயத்தமாக இருந்தால்தான் ஒரு காரியத்தில் இறங்கலாம், நான் ஆயத்தமாக இருக்கிறேன்.

எனக்கு எது ஒத்துவருகிறதோ, எனக்கு எது சந்தோஷத்தைத் தருகிறதோ அதை நான் எனது ரசிகர்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். அப்படித்தான் நான் எனது சங்கீதத்தைப் பார்க்கிறேன்.



கற்றது கைம்மண்ணளவு. எனக்கு தெரிந்ததை மிகவும் அடக்கத்துடன் நான் பகிர்ந்துகொள்ள முயல்கிறேன்.

என்னைப்போல இயல்புடைய ஒருவரை கையைக் கட்டிக்கொண்டு, பொம்மைபோல உட்கார்ந்து பாடச் சொன்னால், நிச்சயமாக முடியாது. நான் எப்படி இருக்கிறேனோ அப்படி இருக்கிறேன். பிடித்தவர்களுக்கு பிடித்திருக்கிறது. ஆனால், பிடிக்காதவர்கள் இருக்கலாம்.

**விமர்சனத்தை நீங்கள் எப்படி எதிர்கொள்கிறீர்கள்?**

முழுக்கமுழுக்க விமர்சனத்தினால் கிழிக்கப்பட்ட ஒரு கலைஞர் இந்த கர்நாடக இசை உலகில் இருந்தால் அது நானேதோன். ஆரம்பத்தில் நான் பாட ஆரம்பித்தபோது எவரும் என்னை ஏற்கவில்லை. பத்துப்பேர்தான் வருவார்கள். பத்து இருபதாக, ஐம்பதாக ஆவதற்கிடையில் பத்து வருடம் ஓடிவிட்டது.

விமர்சனத்துக்குமேல் விமர்சனமாக வந்தபோது, இதில் என்ன இருக்கிறது? இவர்கள் என்ன சொல்கிறார்கள்? இவை ஒத்துவருமா, வராதா என்பதையெல்லாம் சிந்தித்து, அதில் அடைந்த சுய முன்னேற்றத்தில்தான் நான் இந்த நிலையை எய்தியிருக்கிறேன். ஆக, முழுக்கமுழுக்க விமர்சனத்தால் வார்த்தெடுக்கப்பட்ட ஒருவருக்கு நான் ஓர் அசல் எடுத்துக்காட்டு.

ஈசல் சேர்த்ததுபோல, ஐம்பதிலிருந்து நூறு, நூறிலிருந்து இருநூறு, ஐந்நூறு, ஆயிரம் என்று, சுய ஆய்வும் புரிதலுமாக ரசிகர்களை விருத்திசெய்து, மிக மெதுவாக வளர்ந்த கலைஞர்களில் நான் ஒருத்தி. எடுத்தவுடனேயே மேடையில் ஒரு மேதையாக தோற்றியவள் அல்லள். மிக சாதாரணமாக - படிப்படியாக உயர்ந்த ஒரு கலைஞர்.

**சுப்புடுவின் விமர்சனம் எப்படி?**

நான் மிகவும் பயந்தேன். ஆனால், ஒரு தடவை அல்ல, பல தடவைகளில் அவர்தான் எனக்கு நம்பிக்கை ஊட்டினார்.

'ஓர் அதீத சாஸ்திரீய பாணியில் வலுப்பெற்ற எனது அஸ்திவாரம், நான் என்னை வெளிப்படுத்தவைக்கும் ஓர் ஆற்றலை - வீச்சை எனக்கு இப்போது அளிக்கிறது. எனக்கென்றொரு பாணியில் இப்போது நான் பாடுகிறேன்.'

'என்னுடைய சங்கீத ரசனை வித்தியாசமான ரசிகர் கூட்டத்தை எட்ட முடியும். ஆனால், அதற்காக சங்கீதத்தின் சாஸ்திரீய தன்மையை நான் செயலிழக்கச் செய்துவிடவில்லை'.

'பிருந்தாம்மா பாணி சங்கீதத்தை நான் ரசிகர்களுக்கு எனது வழியில் பிரதிபலிக்கிறேன். என்மீதுள்ள அவரின் செல்வாக்கை விலக்கிவிட்டு, என்னால் இதனைப் புரியமுடியாது. அதை நான் எப்போதும் உணர்வேன். அது என் ஆத்மாவில் நிறைந்திருக்கிறது'.

# குளோபல் பெயார் - 2023 யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்






படங்கள் : ஐ.சிவசாந்தன்




யாழ்ப்பாணம், ஜூலை 16

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவையான குளோபல் பெயார்-2023 நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

குளோபல் பெயார் இன்று ஞாயிற்றுக்கிழமையும் இரண்டாவது நாளாக நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன,யாழ். மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக உத்தியோகத்தர்கள் பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கொழும்புக்கு சென்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மூலம் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து சேவைகளையும் கொழும்புக்கு வராமல் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக் கொள்ளுவதற்கான வாய்ப்பை குளோபல் பெயார் வழங்குகிறது.

ஊழியர் சேமலாப நிதி , ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான பிரச்னைகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு தொடர்பான விடயங்கள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சகத்தின் தூதரகத் துறையின் சேவைகள் முதலானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகள் குளோபல் பெயார்-2023 இல் செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் தொழில் திணைக்களம் ஆகியவற்றின் சேவைகளை பொது மக்களின் காலடிக்கு கொண்டுவருதுடன் பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உதவி மற்றும் சமூக சேவை வாய்ப்புக்கான சந்தர்ப்பத்திற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சும் இலங்கை மத்திய வங்கியும் குளோபல் பெயாரில் இதற்காக இணைந்துள்ளன. முதலாளிகளின் அறக்கட்டளை நிதியச் சபை தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய தொழில் பயிற்சி மற்றும் தொழில் நுட்ப பயிற்சி அதிகார சபை சமூக சேவைகள் திணைக்களம் போன்றவற்றின் அனைத்து நிறுவனங்களின் வேவைகளும் இங்கு இடம்பெறவுள்ளன.

உள்நாடு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பமும் கிடைக்கும். பயிற்சி பெற்றும் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு தொழில் பயிற்சி அதிகார சபை மூலம் சான்றிதழ் வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளைப் பொறுத்தவரை, அவர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி தொடர்பில் தேவையான சேவைகள் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தொழிலாளர் தொடர்பான விடயங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி இங்கு இடம்பெறவுள்ளது. (அ)

# சந்திரயான் - 3...

படம்பிடித்து அனுப்புவது, மேற்பரப்பின் வேதிப்பகுப்பாய்வு மற்றும் அவற்றில் உள்ள தனிமங்களின் அடிப்படையில் நிலா எப்படி உருவானது என்ற ரகசியத்தைக் கண்டறிய முயற்சிப்பது, அதன் அடிப்படையில் 3D வரை படங்களை உருவாக்குதல் என ஏராளமான பணிகளை இவை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

சந்திரயான் 3 இல், நிலவில் தரையிறங்கும் லேண்டரில் இருந்து வெளிவரும் ரோவரில் இரண்டு முக்கிய சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்று லேசர் கதிர்களைப் பயன்படுத்தி நிலவின் மேற்பரப்பில் உள்ள தாதுக்கள் மற்றும் தனிமங்கள் பற்றி ஆராய்வது. நிலவின் மேற்பரப்பில் ரோவர் தரையிறங்கிய பின், இந்த சாதனத்தில் பொருத்தப்பட்டுள்ள லேசர் கதிர்கள் நிலவின் மேற்பரப்பில் பாய்ச்சப்படுகின்றன.

இதனால் அங்குள்ள மண் அதிக வெப்பநிலைக்கு உள்ளாகி பற்றி எரியும். இதையடுத்து அந்த மண்ணிலிருந்து வாயுக்கள் வெளியேறும். அந்த வாயுக்களை நிறமாலை பகுப்பாய்வு செய்வதன் மூலம், நிலவின் மேற்பரப்பில் உள்ள தனிமங்கள் குறித்த விவரங்கள் கிடைக்கும்.

இது போன்ற நிலவரங்களை அறிந்து, எதிர்காலத்தில் நிலவில் மனிதர்கள் வசிக்க ஏற்ற சூழ்நிலைகள் குறித்து ஆய்வு நடத்துவது மட்டுமின்றி, நிலவின் பிறப்பு குறித்த விவரங்களையும் தெரிந்து கொள்ள முடியும் என இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத் தெரிவித்தார்.

**சந்திரயான் 3 எப்போது நிலாவை சென்று அடையும்?**

சிறிஹரிகோட்டாவில் இருந்து ஏவப்படவுள்ள சந்திராயன் -3 விண்கலம் நிலவை சென்றடைய 40 நாட்கள் ஆகும். ஜூலை 14ஆம் தேதி விண்ணில் ஏவப்படும் சந்திரயான் 3, சூழலைப் பொறுத்து ஆகஸ்ட் 23ஆம் தேதியோ அல்லது ஆகஸ்ட் 24ஆம் தேதியோ நிலவில் லேண்டரை செலுத்தும் என்று இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்திருந்தார்.

நிலவில் தரையிறங்குவதற்கு சாதகமான சூழல் இருந்தால் மட்டுமே ஆகஸ்ட் 23ஆம் தேதி தரையிறக்கப்படும் என்றும் இல்லையென்றால் ஒரு மாதம் கழித்து தரையிறக்க முயற்சி செய்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஏனெனில் நிலவில் இறங்கி ஆராய்ச்சி செய்யும் லேண்டர் மற்றும் ரோவர் ஆகியவை வேலை செய்ய மின்சாரம் தேவை.

லேண்டர்கள் மற்றும் ரோவர்கள் அந்த மின்சாரத்தை சூரிய ஒளித் தகடுகளில் இருந்து மட்டுமே பெற முடியும். அதாவது லேண்டர் தரையிறங்கும் நேரத்தில் சூரிய ஒளி இருக்கவேண்டும். நிலவில் பகல் நேரத்தில் தரையிறக்கம் நடக்க வேண்டும் என்பதே இதன் பொருள்.

**நிலாவில் சந்திரயான் 3 எப்படி தரையிறங்கும்?**

நிலாவில் சந்திரயான் 3 விண்கலத்தை தரையிறக்குவதற்கு வெறும் 15 நிமிடங்கள் மட்டுமே ஆகும். ஆனால், அந்தப் பதினைந்து நிமிடங்களில்தான் இந்த முழு திட்டமும் வெற்றி பெறுமா இல்லையா என்பதே அடங்கியுள்ளது.

இருப்பதிலேயே மிகவும் கடினமான அம்சம் இது தான். கடந்த முறை சந்திர யான் 2 திட்டம் தோல்வியடைந்ததும் இந்த இடத்தில்தான். இதற்காக, தரையிறங்கி கலத்தின் கீழே நான்கு குட்டி ராக்கெட்டுகள் உள்ளன. அந்த ராக்கெட்டுகளை எரித்து, தரையிறங்கி கலத்தை மெல்ல மெல்லத் தரையிறக்கவேண்டும்.இந்தத் திட்டத்தின் இறுதிக் கட்டமாக, தரையிறங்கி கலத்தின் வயிற்றுக்குள் இருக்கும் ஊர்திக்கலத்தை வெளியே எடுத்து நிலாவின் தரையில் இயக்கவேண்டும். அதற்கு, தரையிறங்கி கலம் நிலவின் தரையில் இறங்கியதும், அதைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் சுவர்களில் ஒன்று சாய்வுப் பலகையைப் போல் திறந்து கீழ்நோக்கி இறங்கும்.

அந்த சாய்வுப் பலகையின் வழியே உருண்டு இறங்கி நிலவின் தரையில் தடம் பதிக்கும் ஊர்திக்கலம், தனது வேலையைத் தொடங்கும்.

# பெரும்பான்மை...

ஜம்மு காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்கள் என்று பல தரப்பிலிருந்தும் சிக்கலை எதிர்கொண்டு வரும் இந்தியா, தனது அண்டை நாட்டில் சமஷ்டி முறையைக் கொண்டுவர ஆதரவு தெரிவிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்று நான் பல முறை 'ஈழநாடு' கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறேன். 13ஆவது சட்ட திருத்தத்தை அமுல்படுத்த ரணிலுக்கு அழுத்தம் கொடுக்க மோடியின் உதவியை அனைத்து ஈழத் தமிழர்களும் நாடுவது தான் இப்போதைக்குச் சிறந்த வழியாக இருக்கும். தமிழர்களுக்கு இதுதான் ஓர் ஆரம்ப புள்ளியாக இருக்கும். இதுவும் முடிவில்லை. ரணிலின் டில்லி பயணத்தின்போது, 13ஆவது சட்ட திருத்த அமுல் குறித்தும் மாகாணத் தேர்தல்கள் நடத்துவது குறித்தும் பிரதமர் மோடி அழுத்தம் கொடுக்கக் கோரி, வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த தமிழ்ச் சமூக முக்கிய புள்ளிகள் கையெழுத்திட்டுக் கூட்டாக ஒரு கோரிக்கையை விடுக்கவுள்ளதாக நான் அறிகிறேன். இந்த மக்கள் மனுவில், நமது செல்வாக்கு பெற்ற அரசியல் தலைவர்களும் தங்கள் பொன்னான கையெழுத்துகளைப் பொறித்து, ஒன்றிணைந்த ஒற்றைக் கோரிக்கையாக அனுப்பவேண்டுமென்று இந்தப் பைத்தியக்காரக் கிழவன் ஆசைப்படுகிறேன், என்னை மன்னித்து விடுங்கள்.

"பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை சிறுபான்மையினரை ஒடுக்குவதுடன் மட்டுமல்லாமல், பெரும்பான்மையினரையும் அழித்துவிடும்." இந்தத் தெளிவான செய்தியைப் பிரதமர் மோடி ரணிலுக்கும் ராஜபக்ச சகோதரர்களுக்கும் விடுப்பார் என்று எதிர்பார்க்கிறேன். இந்தியா மட்டுமல்லாமல், உலகம் முழுவதின் கவனத்தையும் மரியாதையையும் பெறத் தகுதியாக, ஒன்றுபட்ட தமிழ்க் குரல் விரைவில் ஒலித்தால் மட்டுமே, எனது மற்றும் ஈழத்து சாமானியனின் இந்தக் கனவு பலிக்கும்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

## ஜனாதிபதி...

கூட்டணி உருவாகவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அநுர யாப்பா அணியில் தற்போது எட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதிக்கு தற்போது ஆதரவு வழங்கும் மொட்டு கட்சி எம்.பிக்கள் சிலரும் இந்த கூட்டணியில் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக இன்னும் எவ்வித தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அடுத்த...

டான் தொலைக்காட்சியில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இரவு 7 மணி முதல் 8 மணிவரை ஒளிபரப்பாகவுள்ள கேள்விக்கென்ன பதில் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் அரசுக் கட்சியின் மாநாடு விரைவில் நடத்தப்படும். அடுத்த மூன்று மாதங்களுக்குள் அது நடைபெறும். இதன்போது புதிய தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சில வட்டாரக் கிளைகளின் தெரிவுகள் இடம்பெறவில்லை. வட்டாரக் கிளைகள் முடிந்தால் பிரதேசக் கிளைகள் தெரிவு செய்யப்படவேண்டும்.

கிளிநொச்சி, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் தெரிவுகள் முடிந்துள்ளன. அங்கு மாவட்டக் கிளைகள் மட்டுமே தெரிவு செய்யப்படவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் 7 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக அந்தந்த தொகுதிக் கிளைகள் தெரிவு செய்யப்பட்டு அடுத்த மூன்று மாதங்களுக்குள் மாநாடு நடத்தப்படும்- என்றார். (அ)

## ரணிலுக்கு...

தமிழ் மக்கள் கூட்டணியின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இவ்வாறான ஒரு கடிதத்தில் கையெழுத்திட்டு அதனை இந்திய பிரதமர் மோடிக்கு நாம் சேர்ந்து அனுப்பியிருந்தோம்.

தற்போது தமிழ் அரசுக் கட்சி கையொப்பம் இடாமல் மறுத்தமைக்கு காரணம், அரசியல் என்று நான் நம்புகிறேன். கூடிய ஆசனங்களை பாராளுமன்றத்தில் கொண்ட தாங்கள் மற்றைய கட்சிகளுடன் சேர்ந்து பயணிப்பது அரசியல் ரீதியாகத் தம்மைப் பாதிக்கக் கூடும் என்று நினைத்திருக்கலாம்.

இக்கடிதத்தை மற்றைய கட்சிகளே முன்னின்று தயாரித்தன. ஆகவே,அவர்கள் கூறி நாங்கள் எந்தவகையில் கையெழுத் திட முடியும் என்ற ஒருவித அகந்தை சம்பந்திடம் குடிகொண்டிருக்கலாம். ஆனால், கையெழுத்திடாமைக்குக் கூறப்பட்ட காரணம் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தொன்றல்ல.

மக்கள் வாக்குகள் 13 இற்கு தரப்படவில்லை என்றால் எவ்வாறு முன்னைய கடிதத்தில் சம்பந்தன் கையெழுத்திட்டார் என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தம்மையும் தம்மைச் சுற்றியுள்ளவர்கள் நலனையும் மட்டுமே முன்வைத்து தான் முடிவெடுப்பார்கள்.

தீர்மானங்கள் எடுக்கப்படும் போது தமிழர்களின் எதிர்காலம் பற்றி அவ்வளவாக கருத்திற்கொள்வதில்லை. அதனால் தான் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு தற்போது இந்த நிலை வந்துள்ளது. அது தனித்துப்போயுள்ளது - என்றார். (அ)

# ஆசிரிய உதவியாளருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

கொழும்பு, ஜூலை 16

ஆசிரியர் உதவியாளர்களுக்கான நிரந்தர நியமனம் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

குறித்த ஆசிரியர் உதவியாளர்கள் தங்களது பயிற்சியை செய்த காலத்தில் இருந்து அவர்களுக்கான வேதனமும் வழங்கப்படும் எனவும் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் கூறினார். (அ)

## இன, மத...

அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மொழியாக தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டதில் இருந்து இன மத ரீதியான பேதங்களை ஏற்படுத்தி முன்னைய அரசியல்வாதிகள் எங்களை பிளவுபட வைத்தனர். அதனாலேயே இனமத ரீதியாக நாங்கள் பிளவுபட்டிருந்தோம்.

முன்னைய அரசியல்வாதிகளே இன மத ரீதியாக எங்களை பிரித்து பிளவுபட வைத்தனர்.

ஆனால் தற்போதைய அதிபர் அனைவரையும் இனமத ரீதியாக ஒன்றிணைத்து நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்தி வருகிறார்.

நாங்கள் இனமத ரீதியாக பிரிந்திருந்தது போதும். இனிமேல் நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

குறிப்பாக அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாட்டை நாம் நோக்கினால் இனமத பேதம் இல்லாததால் தான் அந்தநாடுகள் இப்படி வளர்ந்துள்ளதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது.

எனவே நாமும் எந்தவித பாகுபாடும் இல்லாமல் நாட்டை முன்நோக்கி கொண்டு செல்லவேண்டும்.

நான் சிங்களவர்களின் தேசிய உடையை அணிவதில்லை. ஆங்கிலேயர் உடை தான் அணிவதுண்டு. ஆனால் இங்கு தமிழர்களின் உடை அணிந்து வந்துள்ளேன்.

இங்கு நான் அணிந்து வந்துள்ள ஆடை புகைப்படத்தை எனது மனைவிக்கு அனுப்பியபோது இனிய தமிழ் என்றார்.

அதேபோன்று இங்கு என்னுடன் இருக்கும் பணியாளர்கூட இந்த உடை மிக அழகு என்று என்னிடம் கூறியிருந்தார். நாம் எந்த ஆடை அணிந்தாலும் அழகு என்றால் அதற்கு காரணம் எங்களது மனம் அழகாக இருப்பது தான்- என்றார். (அ)

## வடக்கு...

பாதை வியாழக்கிழமை பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

அனுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் பாதையின் புனரமைப்பு நடவடிக்கைகள் இந்திய நிதியுதவியுடன் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டன. புனரமைப்பு காரணமாக, வடக்குப் பாதையில் ரயில் சேவைகள் அனுராதபுரம் புகையிரத நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டது.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவின் கூற்றுப்படி, வடக்குப் பாதையில் சராசரியாக மணிக்கு 100 மீற்றர் வேகத்தில் ரயில்களை இயக்க முடியும்.

வடக்கு ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததன் மூலம் காங்கேசன்துறைக்கும் கொழும்புக்கும் இடையிலான பயண நேரம் சுமார் ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள் குறையும் என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, மாஹோ சந்திக்கும் அனுராதபுரத்துக்கும் இடையிலான பாதையை புனரமைக்கும் பணியை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மஹோ சந்தி மற்றும் அநுராதபுரம் இடையிலான புகையிரத பாதையின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க தீர்மானித்தால், வடக்குப் பாதையில் மீண்டும் ரயில் சேவைகள் தடைப்படும். (அ)

## சமஷ்டி...

யாழ்ப்பாண மத்திய கல்லூரி அருகிலுள்ள தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது.

அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தந்தை செல்வா சமஷ்டிக் கட்சியை ஆரம்பித்தார். அவர் பேசியதை இன்று யாரும் பேசுவதாகத் தெரியவில்லை. இழந்து போன இறையாண்மையை பெறத்தான் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஏற்றார்.

நாங்கள் விட்ட தவறுகளிலிருந்து மீள கற்றுக்கொள்வதற்கு யாரும் இன்று முயற்சி செய்யவில்லை. சமஷ்டியை விட்டுக்கொடுக்க முடியாது. 13 ஆவது திருத்தமென்பது எமக்கான சில அதிகாரங்களைக் கொடுக்கிறது. அதுவும் நாம் போராடிப் பெற்றது தான். ஆனால் அதில் இன்று சிங்கள மக்கள் சுகம் காண்கின்றார்கள்.

வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக இருந்த காலத்தில் மாகாணப் பொலிஸாரை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. மாகாண பொலிஸை உருவாக்கியவர்கள் நாங்கள் அவ்வாறு உருவாக்கினால் அந்த பொலிஸ் முல்லைத்தீவிலும் கொக்குத்தொடுவாயிலும் குருந்தூர் மலையிலும் எமது பொலிஸ் இருந்திருக்கக் கூடும்.

இவை கஜேந்திரகுமாருக்கும் சம்பந்தனுக்கும் புரிகின்றதா தெரியவில்லை.

போர் முடிந்தவுடன் தமிழ் மக்களின் பிரச்னையும் முடிந்துவிட்டதாக சிங்கள அரசு எண்ணியுள்ளதால் தான் இந்தியாவை அழைக்கவேண்டிய நிலையுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாண அரசு எனக் கடிதத் தலைப்பு வெளியிட்டதால் அன்று பாராளுமன்றத்தில் பெரிய பிரச்னையே தோற்றுவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபைக்குள்ள அதிகாரங்கள் கூட வடமாகாண சபைக்கு கிடைக்காத நிலை காணப்பட்டது. எமக்கேயுரிய நிதிப் பலத்தை உருவாக்குவதன் மூலமே மாகாண சபையை கட்டமைக்க முடியும்.

இலங்கை கடும் பொருளாதாரத்திலிருந்த காலத்தில் .4 பில்லியன் அமெரிக்க டொலரை கொடுத்து நெருக்கடியிலிருந்து இந்தியாவால் காப்பாற்ற முடியுமானதாக இருந்தால் இந்த மாகாண சபை முறைக்கு அழுத்தத்தை பிரயோகிக்க முடியும்.

நான் அறிந்தவரை இந்தியா சமஷ்டித் தீர்வுக்கு ஆதரவாக இருந்ததாக தெரியவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்ப்பது அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகளுக்குரியதல்ல.

குறித்த ஒப்பந்தம் கொண்டுவரப்பட்ட காலத்தில் என்ன அதிகாரங்கள் இருந்ததோ அவை அனைத்தும் வழங்கப்பட்டால் மாத்திரமே மாகாண சபை முறைமையை சிறப்பாக கொண்டு செல்ல முடியும்.

ஏற்கனவே வடக்கு கிழக்கை சட்டம் மூலம் பிரித்தவர்கள் தற்போது வடக்கு-கிழக்குக்கு இடையே அநுராதபுரத்தை கொண்டுவந்து தனித்தனியே பிரிக்கும் நிலைக்கு முற்படுகின்றனர்.

சுவீடனில் குர்ஆன் எரித்ததற்கு கண்டித்த ரணில் விக்கிரமசிங்க, குருந்தூர் மலையில் பொங்கலின்போது கற்பூரத்தை அணைத்த அதிகாரி பற்றி வாய் திறக்க மாட்டார். எனவே சீனாவின் அதிக உள்ளீர்ப்பு வடமாகாணம் உட்பட இலங்கைக்குள் வந்தது இந்தியாவின் பாதுகாப்பிற்கு உகந்த விடயமல்ல.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் இந்தியாவின் உதவியுடன் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டும்.-என்றார். (அ)

## வான்...

மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய எம்பெருமாள் குமரவேல் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-2)

## கிழக்கு...

- இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உரு வாக்கப்பட்டுள்ளது தான் மாகாண சபை முறைமை. மாகாண சபையை தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை தெற்கில் எழுந்துள்ள நிலையில் தேர்தல் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்படுகின்றது.

பல்வேறு வகையான தீர்வுகளை முன்வைத்து தோற்றதன் பின்னரே இந்தியாவின் அழுத்தத்தால் மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. இது தமிழர்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டதல்ல

1972 மற்றும் 1988 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு உருவாக்கத்தின்போது தமிழர்கள் சமஷ்டியை முன்வைத்த போதும் இரு யாப்புகளிலும் ஒற்றையாட்சி என தெளிவாக முன்வைக்கப்பட்டிருந்தது.

சமஷ்டி என்பதை உள்ளடக்கி இலங்கையில் அரசியலமைப்பு உருவாக வாய்ப்பில்லை என்ற நிலை ஏற்பட் டுள்ளது.

தமிழர்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியாக கட்டியெழுப்புவதற்கு எம்கு முன்னால் உள்ள தீர்வு மாகாண சபையாக காணப்படுகின்றது.

மாகாணசபை உருவாக்கப்பட்டபோது இது ஒற்றையாட்சிக்கு எதிரானதென உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டபோது மாகாண சபை துணைநிலை அமைப்புக்கள் தான் என நீதிமன்றம் தெளிவாக தீர்ப்பளித்தது.

விவசாயம் , கல்வி போன்றவற்றிற்காக மாகாண சபை மூலம் சட்டமாக்கல் இயலுமை உள்ளது. நியதிச் சட்டங்களை உருவாக்க முடியுமாக இருப்பினும் ஆளுநர்களின் ஒப்புதல்களின்றி பல இடங்களில் சட்டமாக்க முடியாத நிலையுள்ளது.

மாகாண சபை நிலைமைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் சட்டமாக்க முடிந்தாலும் மாகாண சபையுடன் கலந்தாலோசித்த பின்னரே சட்டமாக்க முடியும்.

நியதிச் சட்டங்களை ஆளுநர் மறுக்கும் தருணம் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலும் 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ளது.

முழுமையான காணி , பொலிஸ் அதிகாரம் மாகாண சபைக்கு காணப்படாவிட்டாலும் குறிப்பிட்ட அளவு மாகாண பொலிஸை அமைக்கும் அளவுக்கு அதிகாரமுள்ளது.

மாகாணங்களிலுள்ள சிறிய குழப்பங்களை சீர்ப்படுத்தும் அதிகாரம் மாகாணப் பொலிஸிற்குள்ளது.

மாகாண சபையின் தேவைப்பாட்டுக்கு மாகாண சபைக்குள்ள அரச காணி உள்ளபோது அதை பயன்படுத்த முடியுமான இயலுமையுள்ளது.

நாங்கள் பல விதத்தில் பலராலும் பாரபட்சப்படுத்தப்பட்ட சமூகம். ஒரு சுயாட்சிக்கான தனியாட்சிக்கான அதிகாரம் கொண்டவர்களாக எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும்.

மாாண சபைச் சட்டத்தை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் நிர்வாகத் திறனை அதிகரிக்க முடியும். இதனை பயன்படுத்தி எமது பிரச்னைக்குரிய அதியுச்ச தீர்வை நோக்கி பயணிக்க முடியும்.

எமது சமஷ்டி தீர்வை எவ்வாறு அடையப் போகின்றோம் , சிங்கள மக்களுக்கு எவ்வாறு இதை தெளிவுபடுத்தப் போகின்றோம் என்பதை வகுக்க வேண்டும் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மீண்டும் எம்.பி. பதவியை கோரும் முஜிபுர் ரஹ்மான்!

## நீதிமன்றத்தை நாட தீர்மானம்

கொழும்பு, ஜூலை 16

உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக பாராளு மன்ற உறுப்பினர் பதவியை இராஜி னாமா செய்த ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முஜிபர் ரஹ்மான் மீண் டும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பெறும் நோக்கில் நீதிமன் றத்தை நாட தீர்மானித்துள்ளார்.

தேர்தல் நடத்தப்படாவிட்டால் தாம் மீண்டும் பாராளுமன்ற உறுப் பினர் பதவியை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

முஜிபர் ரஹ்மான், உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்வது குறித்து தனது வழக்கறிஞர்களுடன் ஏற்கனவே ஆலோசித்து வருவதா கக் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு போட்டியிடுவ தற்காக தான் சபை உறுப்பினர் பத வியை இராஜினாமா செய்ததாகவும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட் டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத்தேர்தலில் போட்டியிட முன்வந்த அரச ஊழியர்களுக்கு அவர்களின் வேலை மற்றும் சம்ப ளத்தை மீள வழங்குவது தொடர் பான தீர்மானங்கள் எடுக்கப்பட் டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

அவ்வாறாயின் அவருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் அது தொடர்பான சிறப் புரிமைகள் வழங்கப்பட வேண்டு மென முஜிபர் ரஹ்மான் மேலும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், முஜிபர் ரஹ் மான் இராஜினாமா செய்ததன் பின் னர், அவரது பாராளுமன்ற உறுப் பினர் பதவி ஏ.எச்.எம்.பௌசிக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (அ)

# யாழ்ப்பாணத்தை சேர்ந்த 8 பேர் நேற்றுத் தனுஷ்கோடியில் தஞ்சம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணத்தில் இருந்து இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் அகதிகளாக தனுஷ்கோடியில் தஞ்சம் அடைந்துள்ளதாகவும், தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு குழும பொலிஸார் அவர்களை பாதுகாப்புடன் அழைத் துச் சென்று விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடருவதால் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் இருந்து அகதிகளாகத் தொடர்ந்து மக்கள் தனுஷ்கோடி சென்ற வண்ணம் உள்ளனர்.

நேற்று சனிக்கிழமை காலை தனுஷ்கோடிக்கு 8 பேர் அகதிகளாக சென்றுள்ளதாக தகவல் கிடைத்ததையடுத்து தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு குழும பொலிஸ் ஆய்வாளர் கனகராஜ் தலைமையில் அங்கு சென்ற பொலிஸார் குறித்த 8 பேரையும் பாதுகாப்புடன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, அவர்கள் விசாரணையின் பின்னர் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள் ளனர். அவர்களுக்கு தேவையான வசதிகளை அகதிகள் முகாமில் உள்ள அலுவலர்கள் ஏற்பாடுகளை செய்துள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அ'புரம் - ஓமந்தை ரயில் பாதையில் நீக்கப்பட்ட தண்டவாளங்கள் திருட்டு

## உடனடி விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 16

புனரமைக்கப்பட்ட அனுராத புரம் - ஓமந்தை ரயில் பாதையில் தண்டவாளங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரி வித்தது.

ரயில் பாதை புனரமைப்புப் பணிகளின்போது நீக்கப்பட்ட தண்டவாளங்களை நேற்று முன் தினம் இரவு கொண்டு சென்ற நபர்கள், யாழ். ராணி ரயிலில் மோதியதையடுத்து இந்த கொள் ளைச் சம்பவம் தொடர்பில் தெரிய வந்ததாக ரயில்வே பாதுகாப்பு அத்தியட்சகர் அனுர பிரேமரத்ன தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் தப்பியோடியுள் ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ரயில் தண்டவாளங்களை வெட்டு வதற்காக பயன்படுத்தப்பட்ட காஸ் கட்டர், ஒட்சிசன் தாங்கி மற்றும் 05 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் என்பனவும் கைப்பற்றப்பட்டதாக அனுர பிரேமரத்ன தெரிவித்தார்.

அனுராதபுரம் பொலிஸார் மேல திக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (அ)

# நாட்டில் 34 வீதமானோர் உணவுத் தட்டுப்பாட்டில்!

கொழும்பு, ஜூலை 16

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 34 சதவீதமா னோர், உணவு தட்டுப்பாட்டை எதிர்கொள்வதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த விடயம் குறித்து "லெர்ன் ஏசியா இன்ஸ்டிட் யூட்" நிறுவனம் நடத்திய ஆய்வில் இந்த தகவல் தெரிய வந்துள்ளதாக கூறப்படுகிறது.

இலங்கையில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 5.97 மில்லியன் என்றும், அதில் 32 சதவீதமானோர் அதாவது 1.9 மில்லியன் குடியிருப்பாளர்களில் 7.9 மில்லியன் பேர் உணவு கொள்வனவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நகைகள் மட்டுமின்றி மரச்சா மான்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள், குளிர் சாதனப் பெட்டிகள் அல்லது நாற்காலிகள், மேசைகள், படுக்கைகள் போன்றவற்றையும் மக்கள் விற்பனை செய்து உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய் துள்ளதாக தெரியவந்துள்ளது. மேலும், இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு 10 குடும்பங்களில் 07 குடும்பங்களின் இருவருக்கு உணவு வழங்குவது மட்டுப்படுத்துவதாக உலக உணவுத் திட டம் வெளிப்படுத்தியுள்ளது.

அத்தோடு ஒவ்வொரு 10 குடும்பங்களிலும் 08 குடும் பங்கள் ஈட்டும் தற்போதைய வருமானம், பொருளாதார சிக்கல் நிலைக்கு முன்னர் ஈட்டிய வருமானத்தை விட குறைவாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனை வைத்தியசாலையில்

# உயிரிழந்த யுவதிக்கு செலுத்திய ஊசிமருந்து பாவனையில் இருந்து தற்காலிகமாக நீக்கம்!

கொழும்பு, ஜூலை 16

பேராதனை வைத்தியசாலை யில் உயிரிழந்த யுவதிக்கு செலுத்தப் பட்ட ஊசி மருந்தினை பாவனையி லிருந்து தற்காலிகமாக நீக்கியுள்ள தாக சுகாதார அமைச்சர் கெஹெ லிய ரம்புக்வெல தெரிவித்தார்.

குறித்த யுவதியின் மரணத்துக் கான உறுதியான காரணத்தை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் தற்போது வைத்திய சாலைக்கு சென்று தமது விசார ணைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

எவ்வாறாயினும், சமோதி சந்தீபனி எனும் குறித்த யுவதிக்கு ஊசி மருந்து செலுத்தப்பட்ட நாளில் மேலும் 12 பேருக்கு அதே ஊசி மருந்து செலுத்தப்பட்டதா கவும் சுகாதார அமைச்சர் தெரி வித்தார்.

ஜனவரி மாதம் முதல் இது வரையான காலப்பகுதியில் 2715 பேருக்கு இந்த ஊசி மருந்து செலுத் தப்பட்டுள்ளது.



அத்துடன், குறித்த ஊசி மருந்தா னது 2013 ஆம் ஆண்டு முதல் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள தாகவும் சுகாதார அமைச்சர் சுட் டிக்காட்டினார். (அ)

# இலங்கை விமான நிலையங்களில் விரைவில் ஏற்படவுள்ள மாற்றங்கள்

கொழும்பு, ஜூலை 16

இலங்கையின் சர்வதேச விமான நிலையங்களில்தரை கையாளுதல், உணவு வழங்குதல் மற்றும் விமான எரி பொருள் விநியோக நடவடிக்கைகளில்தனியார் துறை யையும் ஈடுபடுத்த அரசாங்கம் தயாராகி வருவதாக சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் பி.ஏ.ஜெயகாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த சேவைகள் தற்போது அரச ஏகபோகமாக உள் ளது. இலங்கையின் சர்வதேச விமான நிலையங்களில் மேற் கூறிய சேவைகளை வழங்குவதற்கு தனியார் தரப் பினரை அழைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. - என்றார்.

இந்த வார தொடக்கத்தில், துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறி பால டி சில்வா ஊடகவியலாளர்களிடம் கூறுகையில், இலங்கை ஏற்கனவே விமான நிலையங்களில் எரி பொருள் விநியோகத்தை தாராளமயமாக்கும் நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளதாக கூறியிருந்தார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடன் கையொப்பமிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு அமைவாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் உள்ளிட்ட அரச நிறுவனங்களை சீர்திருத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானிகளுக்கு அமைச்சர் சிறிபால டி சில்வா எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 16

உள்நாட்டு விமானிகள் நாட்டை விட்டு வெளியேறி னால், வெளிநாட்டு விமானிகள் மூலமாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானங்கள்தொடர்ந்து இயக்கப்படும் என துறைமுகங்கள் கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா எச்சரித்துள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்து விமானிகளும் சிறிலங்கன் எயார்லைன்ஸை விட்டு வெளியேறினாலும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சேவை தொடரும் எனவும் அவர் குறிப் பிட்டார்.

சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறிலங்கன் எயார்லைன்ஸின் மறுசீரமைப்பில் நிறுவ னத்தின் நிர்வாக முடிவுகளை எடுப்பதற்கு முதலீட்டா ளர்களுக்கு முழு உரிமை வழங்கப்படும் என தெரிவித் துள்ளார்.

கொவிட் நெருக்கடி காரணமாக உலகம் முழுவதும் விமான சேவைகள் தடைப்பட்டன. இதனால் பல விமானங்கள் தரையிலேயே இருந்தன.

ஏராளமானோர் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

சிறிலங்கா எயார்லைன்ஸில் நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. அந்த விமானிகளை 50 வீத சம்பளத்தில் வைத்துள்ளோம். கோவிட் காலத்தில் தங்கள் விமா னங்கள் செல்லாது என்று கூறி குவைத் எயார்லைன்ஸின் சுமார் 70 விமானிகள் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

260 விமானிகள் கொண்ட குழு இன்னும் இலங்கை யில் தங்கியுள்ளது.

அவர்கள் டுபாய் அல்லது சிங்கப்பூர் சென்றால் அவர்களுக்கு பாரியளவான சம்பளம் கிடைக்கும் என எண்ணுகின்றனர். ஆனால் அந்த நாடுகளில் வாழ்க்கைச் செலவு அதிகம். அதையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

புதிய விமானிகளுக்கான விண்ணப்பங்களை அழைக்கிறோம். ஆனால் சிலர் இந்த நாட்டில் இருக்க விரும்புகிறார்கள்.

ஆனால் அவர்கள் வெளியேறினால் வெளிநாடுகளில் இருந்து புதிய விமானிகள் பணியமர்த்தப்பட்டு விமான சேவை தொடரும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.